# உதயன்

சுடர் 30 | கதிர் 104 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 26, செவ்வாய்க்கிழமை 10.03.2015


வானிலை

கூ.வெ. 31 °C
கு.வெ. 24 °C
மேகமூட்டம்

## ஒரு வாரத்தில் 28 பேருக்கு டெங்குத் தொற்று

யாழ்ப்பாணம், மார்ச். 10

யாழ். குடாநாட்டில் கடந்த ஒரு வார காலப் பகுதியில் மட்டும் 28 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 218 பேரும் கடந்த ஜனவரியில் 614 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர். யாழ். முஸ்லிம் தெரு உள்ளிட்ட பகுதியிலேயே டெங்குத் தொற்று அதிகம் இனங்காணப்பட்டுள்ளது. அந்தப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் டெங்குத் தொற்றுக்குள்ளாகி [illegible]னர். யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 860 பேர் டெங்குத்

பக்.24

# இடமாற்றம் கோரி இரவிரவாக போராட்டம்



### அமைச்சர் குருகுலராஜா, அதிகாரிகளை சிறைவைத்த ஆசிரியர்கள்

பொது நூலகம்
கோண்டாவில்
[illegible] பிரதேச சபை

யாழ்ப்பாணம், மார்ச் 10

வன்னியில் சேவைக் காலத்தை நிறைவுசெய்த ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்படாததைஅடுத்து அவர்கள் நேற்று முற்பகலில் இருந்து இரவு 9.30 வரையில் செயலக வளாக வாயிலைப் பூட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அமைச்சர், அதிகாரிகள் வெளியே செல்ல முடியாது திண்டாடினர். இருள்சூழ்ந்த பின்னரும் தொடர்ந்த போராட்டத்தால் பொலிஸாரும் அந்தப் பகுதியில் குவிந்தனர்.

பக்.24

## ஐரோப்பிய ஒன்றியத் தடை விரைவில் நீக்கம்

கொழும்பு, மார்ச் 10

இலங்கை மீன்களை இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டதடையை விரைவில் ஐரோப்பிய ஒன்றியம் நீக்கும் என ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை ஆதாரம் காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச வர்த்தகக்குழுவின்உபதலைவர் ஜன் ஷஹ்ராடில் கடந்தவாரம்இலங்கை வந்திருந்தார். மீன்கள் ஏற்றுமதி குறித்து விசேடமாக ஆராய்ந்த அவர் தடையை நீக்[illegible]

பக்.24

# கோத்தாவுக்கு நீதிமன்று தடை

### கடவுச்சீட்டை முடக்கியது



கொழும்பு, மார்ச் 10

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட 4 பேர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு காலி நீதிமன்றம் தடை விதித்து கடவுச் சீட்டையும் முடக்கியது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே, நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

காலித் துறைமுகத்தில் கைப்பற்றப்பட்ட மிதக்கும் ஆயு தக் களஞ்சியம்

பக்.24

## கோத்தாவை காப்பாற்றும் ரணில்?



கொழும்பு, மார்ச் 10

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை, மூன்று நாள் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முயற்சித்த போதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதனைத் தடுத்துள்ளார். அவரைக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்குப் பதிலாக ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ரணில் அறிவுறுத்தினார் – இவ்வாறு கொழும்பு ரெலிக்கிராப் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பக்.24

## வடக்கு வருகிறார் ஐ.நாவின் பிரதிநிதி

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி ஒருவர் இந்த மாத இறுதியில் வடக்கு மாகாணத்துக்கு வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. உண்மை – நீதி – புனரமைப்பு மற்றும் மீண்டும் ஏற்படாது என்கின்ற உறுதியளிப்பு – பலவந்தப்படுத்தியும் விருப்பத்திற்கு முரணாக காணாமற் போனவர்கள் தொடர்பான விசேட பிரதிநிதியே மாத இறுதியில் இங்கு வரவுள்ளார்.

பக்.24

## மிதிவெடி இல்லையென்று ஹலோ ட்ரஸ்ட் சான்றிதழ்

### வளலாய் மக்கள் குடியமர்வு விரைவில்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவுள்ள ஆயிரத்து நூறு ஏக்கர் நிலப்பரப்பில், வளலாய் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கண்ணிவெடி அகற்றப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தால் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் நேற்று மாலை கையளிக்கப்பட்டது.

வலி.வடக்கு – வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 6 கிராம சேவையாளர் பிரிவுகளை உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. அந்தக் கிராமங்களில் மூன்று வாரங்களுக்குள் மீள்குடியமர்வு இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டிருந்தது.

பக்.24

19
லட்சம்
வெல்லுங்கள்
விவரங்கள் உள்ளே!

## 19 ஆவது திருத்தம்: இறுதி முடிவு நாளை

### கூடுகிறது தேசிய நிறைவேற்று அதிகாரசபை

கொழும்பு, மார்ச் 10

ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப் படுத்தல், அரசமைப்பின் 17 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தல் உட்பட முக்கிய சில சரத்துகளடங்கிய அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் நாளை இறுதிமுடிவு எடுக்கப்படவுள்ளது.

அமைச்சரவைக்கும் மேலானதொரு சபையாகக் கருதப்பட்டுவரும் தேசிய நிறைவேற்றுச் சபையின் வாராந்த கூட்டம் நாளை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது இதன்போதே மேற்படி விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்டு, இறுதிமுடிவ எடுக்கப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்ட வரைவு ஜனாதிபதிக்கும் கட்சித்தலைவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் கூடிய அரசமைப்பு மறுசீரமைப்புக் குழுவும் இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

தேசிய நிறைவேற்றுச் சபையில் இதற்கு

பக்.24

## இருநாடுகளின் உறவில் பொன்னான அத்தியாயம்

### தனது பயணம் குறித்து மோடி கூறுகின்றார்



கொழும்பு, மார்ச் 10

"நெருக்கடிகாலத்திலும்,இலங்கை இந்திய நட்புறவு வலுவாகவே இருந்தது. இந்தியா தெற்காசிய அயல்நாடுகளுடன் கொண்டிருக்கும் நல்லுறவுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். எனது இலங்கைப்பயணத்துடன்இன்னுமொரு பொன்னான அத்தியாயத்தை நாம் இருநாடுகளுக்கிடையேயும் ஆரம்பிப்போம்." – இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

பக்.24

உள்ளே


| | |
|---|---|
| பாய்ந்த வங்கப் புலிகள் பறித்தெடுத்தன வாய்ப்பை! | பக்.03 |
| மடோனாவைபோல் மாறியுள்ள இரசிகர் | பக்.12 |
| எல்லை மீறும் மீனவரை சுடுவது நியாயமா? | பக்.16 |
| மனிதக் குண்டுகள் சிதறின நைஜீரியாவில் | பக்.13 |

# 2,463 மெற்றிக்தொன் நெல் வடக்கிலிருந்து கொள்வனவு

## 10 ஆயிரம் மெற்றிக் தொன் வரை கொள்வனவு செய்யப்படும் என தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

வடக்கு மாகாணத்தில் இதுவரையில் 2 ஆயிரத்து 463 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிராந்திய முகாமையாளர் டபிள்யூ.ஆர்.ஏ.சாந்த குமார தெரிவித்துள்ளார்.

"வடக்கு மாகாணத்தில் 10 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்ய முடியும். ஒரு விவசாயியிடம் இருந்து 2 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்படும்." – என்று அவர் கூறியுள்ளார்.

"வடக்கு மாகாணத்தில் சிவப்பு நாடு, வெள்ளை நாடு என்ற நெல் வகைகள் ஒரு கிலோ 45 ரூபாவாகவும், சம்பா வகை நெல் ஒரு கிலோ 50 ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படுகின்றது."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"நெல் விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள் பிரதேச செயலகங்களின் ஊடாக விண்ணப்பப்படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து மாவட்ட செயலரிடம் உறுதிப்படுத்தி நெல் மாதிரியையும் கமநல சேவைத் திணைக்களத்தின் ஊடாகத் தரும் பட்சத்தில் அவர்களிடம் இருந்து நெல் கொள்வனவு செய் யப்படும்." – என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

"யாழ்.மாவட்டத்தில் புத்தூர், கொடிகாமம் கமநல சேவை நிலையங்கள் ஊடாக நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது. இதுவரை யாழ்.மாவட்டத்தில் இருந்து 197 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது''– என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்திகளாகியுள்ளனர் பெண்கள்

## யாழ்.பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் கோசலை மகேந்திரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம் மார்ச்10

கடந்த காலங்களை விடவும் தற்போது இலங்கையின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் சக்திகளாக பெண்கள் மாறியுள்ளனர். ஆடை உற்பத்தி, தேயிலை உற்பத்தி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு இவற்றில் அதிகமாக பெண்கள் ஈடுபடுகின்றனர். அதேநேரம் இன்னமும் பெண் சமுதாயம் முழுமையாக ஆளுமை பெறவில்லை என்ற உண்மையையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். – இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் கோசலை மகேந்திரன்.

யாழ் சமூக செயற்பாட்டு மையத்தால் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடத்தப்பட்ட மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இலங்கையைப் பொறுத்தவரையில் தொழில் ஊக்கம் உடைய பெண்களாக 35.9 வீதத்தினரும் தொழில் ஊக்கம் இல்லாத பெண்களாக 74.1 வீதத்தினரும் இனங்காணப்பட்டுள்ளனர். அவ்வாறு தொழில் ஊக்கம் உடைய பெண்களில் உயர் அதிகாரத்தில் இருக்கும் பெண்கள் வெறும் 2 சதவீதத்தினரே. இந்த வீழ்ச்சிக்கு பாலியல் தொந்தரவுகளும் பிரதான காரணம். பாலியல் தொந்தரவுகள் தற்பொழுது பெண்களுக்கெதிராக முழுமையாக கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. இதை விட இன்று பெண்களுக்கெதிராக வேறு பல பிரச்சினைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன அவற்றில் குழந்தைத் திருமணமும் ஒன்று. கிளிநொச்சியில் சில குழந்தைத் திருமணங்கள் சமீபகாலமாக நடைபெற்று சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன. இவை சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை. – என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதைவிட அலுவலகத்தைப் பொறுத்த மட்டில், பெண்களை ஏற்றுக்கொள்ளாதமையும் பெண்களின் தோல்விக்கு முக்கிய பங்குவகிக்கின்றன. இன்றைய ஆணாதிக்க சமூகம், உயர் அதிகாரத்தில் இருக்கும் பெண்களை தமது அதிகாரிகளாக ஏற்றுக் கொள்ளவும், அவர்களின் கட்டளைகளை நடைமுறைப்படுத்தவும் தயங்குகின்றது. இவ்வாறான நிலைமை நீடிக்கும் பட்சத்தில் பெண்களின் உரிமைகளும் சுதந்திரங்களும் வெறும் பேச்சளவிலேயே இருக்கும். – என்றும் அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் உரையாற்றுகையில்–

பெண்களின் உரிமைகள் தொடர்பாக பரந்துபட்ட அளவில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட சிலர் குரல்கொடுப்பதை விட அதிகளவானவர்கள் சேர்ந்து குரல் கொடுக்கும் பட்சத்தில் அது விரைவில் ஏற்றுக்கொள்ளப்படும். பெண்களின் உரிமைகள் தொடர்பாக அனைவரும் ஒன்று திரள வேண்டும். தற்கால அரசின் பெண்கள் விவகார அமைச்சும் எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாடுகளை பரந்த அளவில் முன்னெடுத்து பெண்களின் இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் என்று நம்புகின்றேன். – என்று தெரிவித்தார்.

நிகழ்வில் அண்மைய காலங்களில் தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளில் சாதித்த வீராங்கனைகளும், சுய தொழில் முயற்சியில் ஈடுபட்ட பெண்கள் சிலரும் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சுவிஸ்லாந்து தூதரகத்தின் செயலாளர் கெய்னின்யா பொறர் கலந்து கொண்டார். (ற–ரி)

## கோழிகள் திருடியோருக்கு மறியல்

கிளிநொச்சி விசுவமடு ரெட்பானா பகுதியல் உள்ள வீடு ஒன்றில் 5 கோழிகளை களவாடினார்கள் என்று குற்றம்சாட்டப்பட்டு கடந்தமாதம் 19ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸார்ரார் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரை தொடந்தும் 14 நாள் கள் விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ. வஹாப்தீன் நேற்று உத்தரவிட்டார்.

விசுவமடு ரெட்பானாவில் உள்ள வீடு ஒன்றில் வருமானத்திற்காக வளர்க்கப்பட்டு வந்த இரண்டு சேவல் மற்றும் மூன்று பேட்டுக் கோழிகளை களவாடினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அதே இடத்தை சேர்ந்த சந்தேக நபர்கள் இருவரை கடந்த மாதம் 19ஆம் திகதி பொலிஸார் கைது செய்தனர்.

அந்த வழக்கு நேற்று மாலை விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரணை செய்த கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி சந்தேக நபர்கள் இருவரையும் இம்மாதம் 23ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற–21)

## சட்டவிரோத மணல்: இருவருக்கு அபராதம்

கிளிநொச்சி பகுதியில் அனுமதியின்றி மணல் ஏற்றியதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யபட்ட இருவருக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ. வஹாப்தீன் தலா 50 ஆயிரம் ரூபா, 5 ஆயிரம்ரூபா தண்டப் பணம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

கிளிநொச்சி பகுதியில் நேற்று அனுமதிப்பத்திரம் இன்றி டிராக்ரர்களில் மணல் ஏற்றினார்கள் என்று கூறி கிளிநொச்சி பொலிசாரால் கைது செய்யப்பட்டு நேற்று மாலை நீதிமன்றத்தில் முற்படுத்திய இரு குற்றவாளிகளான இராமு மகேந்திரன், முத்துச்சாமி பிரசாந்தன் ஆகியோர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்தே அபராதம் விதிக்கப்பட்டது.

இராமு மகேந்திரன் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் கட்டத்தவறின் 3 மாத கால சிறைதண்டனையும், அதே குற்றத்திற்காக நேற்றுக் கைது செய்யப்பட்ட மற்றய நபரான முத்துச்சாமி பிரசாந்தன் என்பவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் கட்டதவறின் ஒருமாதகால கடூழிய சிறைதண்டனையும் வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற–21)

# குரங்குகளைக் குறைப்பதற்கு தென்மராட்சியில் நடவடிக்கை

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்களுக்கும், பயிர் வகைகளுக்கும் தொடர்ந்து அழிவை ஏற்படுத்தி வரும் குரங்குகளின் எண்ணிக்கையை குறைத்து தென்மராட்சி பிரதேசத்தின் உயிர்ப் பல்வகைமையை சமநிலைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் வனவிலங்குத் திணைக்களத்துடன் இணைந்து யு.என்.டி.பி நிறுவனத்தின் நிதித் திட்டத்தின் ஊடாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகம் என்பன இணைந்து 60 கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் பங்களிப்புடன் குரங்களின் எண்ணிக்கை மற்றும் வருகை தொடர்பான தகவல்களைத் திரட்டின. அதன் அடிப்படையில் இலங்கையின் குரங்குகள் நிபுணத்துவம் பெற்ற ரஜரட்டை பல்கலைக் கழகப் பேராசிரியர் வைத்தியர். ஆர்.வன்டகோன் குரங்குகளின் நடத்தை தொடர்பான ஆய்வொன்றினையும் மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து வனவிலங்கு திணைக்களத்தின் வழிகாட்டலுடன் அவர்களால் வழங்கப்பட்ட கூடுகளைக் கொண்டு பிரதேச மக்களால், குரங்குகள் பிடிக்கப்பட்டு யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்களத்தால் வனவிலங்குத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஒரு குரங்குக்கு ஆயிரம் ரூபா வீதம் பிடிப்பவர்களுக்கு வழங்கப்பட்டும் வருகின்றது.

முதற்கட்டமாக ஒரு கூடு வழங்கப்பட்டு அதனூடாக ஒரு மாத காலத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் 18 குரங்குகள் பிடிக்கப்பட்டு வனவிலங்குத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிடிக்கப்பட்ட குரங்குகளை வனவிலங்கு சரணாலயங்களில் பாதுகாப்பாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் மேலும் கூடுகளை வழங்கி குரங்குகளைப் பிடிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும் என்று யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்துள்ளார். (ற–14)

# காலாவதியாகிவிட்டது நாடாளுமன்று கலைத்துவிட்டுத் தேர்தலை நடத்துக

## அரசும் எமது; எதிர்க்கட்சியும் எமது; ஐ.தே.கவுக்கு அச்சமில்லை என்கிறார் கிரியெல்ல



கொழும்பு, மார்ச் 10

இலங்கையின் தற்போதைய நாடாளுமன்றம் காலாவதியாகியுள்ளது எனத் தெரிவித்த பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, நாடாளுமன்றத்தைக் கலைத்து தாமதமின்றித் தேர்தலை நடத்த வேண்டும் என்ற தெளிவான நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதியும் எம்முடையவர்; பிரதமரும் எம்முடையவர்; அரசும் எம்முடையது; எதிர்க் கட்சியும் எம்முடையது. எனவே, தேர்தலொன்றுக்குச் செல்ல ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்தப் பயமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த உருவாக்கப்பட்டது தான் இந்த நாடாளுமன்றம். தற்போது இது காலாவதியான பொருளாகிவிட்டது. புதிய அரசு, புதிய ஜனாதிபதி, புதிய பிரதமரைக்கொண்ட புதிய ஆட்சி உருவாகியுள்ளது. இந் நிலையில், நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலொன்றுக்குச் செல்லவேண்டும். தேர்தலுக்குச் செல்வதில் எமக்குப் பயம் இல்லை."– என்று அவர் கூறினார்.

"அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்த பலர் அலைந்து திரிகின்றனர். தேர்தலின் பின்னர் தேசிய அரசொன்றை நிறுவுவதற்கு நான் எதிர்ப்பு அல்ல. உடனடியாகத் தேர்தலொன்றை நடத்த வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

புதிய தேர்தல் முறைக்கு அமைய அடுத்த தேர்தலை நடத்துவது தொடர்பில் அனைத்துத் தரப்பினரிடையேயும் இணக்கம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து ஜனாதிபதியும், பிரதமரும், தேர்தல்கள் ஆணையாளருடன் பேச்சு நடத்திவருகின்றனர். தேர்தலை நடத்துவதில் ஏற்படும் தாமதம்தான் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பிரச்சினையாக உள்ளது''– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற–சி)

## மகளிர் தின நிகழ்வு இன்று

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டமும் (யு.என்.டி.பி) ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் 'பெண்களை வலுப்படுத்தல் மனிதநேயத்தை வலுப்படுத்துவதாகும்' என்னும் தொனிப்பொருளிலான சர்வதேச மகளிர் தின விழா இன்று மு.ப. 10 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், கௌரவ விருந்தினராக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட (யு.என்.டி.பி) பிராந்திய நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் செ.ஞானகணேசனும் சிறப்பு விருந்தினராக ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கத்துக்கு சிறப்பு கௌரவம் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–9)

CIVIL ENGINEERING | 0777 692318 |
CAMPUS
JAFFNA




13 லட்சங்கள்
WOW
கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள்
! கிரிக்கெட் கொண்டாட்டம்

2015 | மார்ச் 10 | செவ்வாய்க்கிழமை |

# பாய்ந்தன வங்கப் புலிகள் பறித்து எடுத்தனர் வாய்ப்பை



போராடி, 15 ஓட்டங்களால் தங்கள் வெற்றியை தவறவிட்டது. வாழ்வா? சாவா? நிலைமை. இப்படியொரு இக்கட்டான நிலைமையை எதிர்பார்த்திருக்காது கிரிக்கெட்டின் தாயகம் இங்கிலாந்து. பங்களாதேஷ் சவாலாக வரும் என்று கனவிலும் நினைத்திருக்கமாட்டாது இங்கிலாந்து. வழக்கத்துக்கு மாறாக பங்களாதேஷூற்கு ஆதரவாளர்கள் எண்ணிக்கை பல

வங்கப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில், இங்கிலாந்து அணி முதல் சுற்றுடன் வெளியேறியது. இதன் மூலம் பங்களாதேஷ் அணி தனது காலிறுதி வாய்ப்பை நேற்று உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது. இங்கிலாந்து அணி இறுதி வரையில் கிப் பெருகியிருந்தது. தோல்வி மேல் தோல்வி கண்டு ஏமாற்றுக்கு மேல் ஏமாற்றிக் கொண்டிருக்கும் இங்கிலாந்துக்கு வழக்கம் போல் ரசிகர்கள் இருக்கவில்லை.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து, பங்களாதேஷை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. பந்து வீச்சாளர்களுக்கு சாதகமான ஆடுகளம் ஆதலால் மிகச்சரியான தீர்மானம். முதல் பந்துப் பரிமாற்றத்தில் தமிம் இக்பால், இரண்டாவது பந்துப் பரிமாற்றத்தில் கையிஸ் ஆட்டமிழந்தனர். வங்கத்தின் ஆரம்பம் ஆட்டம் கண்டது.

களத்தில் சர்கர் மற்றும் முகமதுல்லா. இணைப்பாட்டம் அரைச்சதம் கடந்து அழகாகப் பயணித்துக் கொண்டிருந்தது. அணியின் ஓட்டம் நூறினை நெருங்கிக் கொண்டிருக்கும் பொழுது சர்கர் ஆட்டமிழந்தார். எதிர்பார்க்கப்பட்ட சகிப் அல் ஹசன் ஏமாற்றத்தை மட்டுமே கொடுத்தார். பங்களாதேஷ் 99–4.

களத்தில் ரஹிம். வழக்கம்போல் அதிரடியும் ஆரம்பமானது. சராசரியும் படிப்படியாக உயர்ந்து கொண்டு சென்றது. மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் முகமதுல்லா. இணைப்பாட்டம் வலுப்பெற்றது. 49 பந்துகளில் அரைச்சதம் கண்டார் ரஹிம். சதத்தை நோக்கிய பயணத்தில் முகமதுல்லா. மேலதிக இலக்குகளின் இழப்பின்றி 200 ஓட்டங்களை எட்டியது பங்களாதேஷ். சதத்தை நிறைவேற்றனார் முகமதுல்லா. பங்களாதேஷ் சார்பில் முதலாவது உலகக் கிண்ண சதமும் பதிவானது. பின்வரிசை வீரர்கள் சுமாரான பங்களிப்பு முடிவில் பங்களாதேஷ் 275–7.

எட்டக்கூடிய இலக்கை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தது இங்கிலாந்து. நம்பிக்கையைத்தரும் விதத்தில் நிதான ஆரம்பம். இலகுவாக எட்டிவிடும் என்ற எதிர்பார்ப்பு பரவலானது. அலி ரன் அவுட் முறையில் வெளியேறினார்.

களத்தில் ஹேல்ஸ் மற்றும் பெல். இருவரும் அதே ஆரம்ப நிதானத்தில் அப்படியே பயணித்தனர். ஓட்டங்கள் நூறினை நெருங்கிக் கொண்டிருக்கையில் ஹேல்ஸ் பவிலியனில். ரூட்டும் கிட்டத்தட்ட ஹேல்ஸ்ஸின் பாணியிலேயே விடைபெற இங்கிலாந்து 121–3.

தேசிய கீதம் பாடாமல் சர்ச்சையில் சிக்கிய

பக்கம் 04

## பதம் பார்த்தது பந்து கிடைத்தது பரிசு

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில், ஆஸ்திரேலிய வீரர் வோர்னர் அடித்த சிக்சர் அங்கு ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவனைப் பதம் பார்த்தது.

உலகக் கிண்ண லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியுடன் ஆப்கானிஸ்தான் அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர் டேவிட் வோர்னர் சிக்சரும், பவுண்டரியுமாய் விளாசித் தள்ளி 178 ஓட்டங்கள் அடித்தார்.

இதில் ஒரு சிக்சர் ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்த ஆப்கானிஸ்தானை சேர்ந்த சகாபுதீன் என்ற சிறுவனை தாக்கியது. இதில் அந்த சிறுவனின் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது.

பக்கம் 04

## இந்தியாவின் சொத்து

இந்திய அணியின் சொத்து ஷமி என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அகிப் ஜாவேத் புகழாரம் சூட்டியுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளரான அகிப் ஜாவேத் தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தின் பயிற்சியாளராக இருக்கின்றார்.

இந்தியப் பந்து வீச்சாளர்களில் என்னைப் பொறுத்தவரை மொகமது ஷமி சிறப்பாக வீசி வருகிறார். ஒரு வேகப்பந்து வீச்சாளருக்கான உட்பொருள் அனைத்தும் அவரிடம் உள்ளது. இந்திய அணியின் சொத்து ஷமி. மோஹித் சர்மாவின் பந்து வீச்சும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. எதிர்காலத்தில் இவரும் இந்திய அணியின் பந்துவீச்சு ஆயுதமாகத் திகழ்வார்.

ஆனால், ஷமி ஏன் சிறந்தவர் எனில் அவர் நல்ல வேகத்துடன் வீசுகிறார். மேலும் அவர் சீராக வீசும் லெந்த். இரண்டும் அபாரம். பாகிஸ்தானுக்கு எதிராக ஷமியின் பந்துவீச்சு அபாரம். ஆஸ்திரேலிய ஆடுகளங்களில் வேகப்பந்து வீச்சாளர் முதுகை வளைத்து, பந்தின் தையலை நன்றாக தரையில் அடிக்க வேண்டிய தேவை உள்ளது. ஷமி இதனை சரியாகச் செய்கிறார். ஷமி இப்படியே வீசினால் இந்தியாவை வெற்றி கொள்வது

பக்கம் 04

## இலங்கையை விரட்டும் துரதிர்ஷ்டம்

இலங்கை அணி வீரர்கள் காயத்தின் காரணமாக நாடு திரும்பியுள்ளதால், உலகக் கிண்ண கிரிக்கெட் விளையாடும் இலங்கை அணி கடும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளது.

உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னரே பயிற்சி ஆட்டத்தில் காயமடைந்த இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் தம்மிக்க பிரசாத் நாடு திரும்பியிருந்தார். இதன் பின்னர் சகலதுறை வீரர் ஜீவன் மெண்டிஸ் காயம் காரணமாக நாடு திரும்பினார்.

அதனைத் தொடர்ந்து, இங்கிலாந்துடனான ஆட்டத்தில் காயமடைந்த ஹேரத், நாடு திரும்பியுள்ளார். இந்த நிலையில் திமுத் கருணாரத்தன பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட காயத்தினால் நாடு திரும் பினார். தற்போது, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் தசைப் பிடிப்புக் காரணமாக வெளியேறிய சந்திமாலும் நாடு திரும்பியுள்ளார்.

நாடு திரும்பியவர்களுக்குப் பதிலாக, உபுல் தரங்க, சசித்திர சேனநாயக்கா, சீக்குகே பிரசன்ன ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டிருந்தனர். தற்போது ரங்கன ஹேரத் மற்றும் தினேஸ் சந்திமால் இருவருக்கும் பதி லாக கித்ருவன் விதானகே மற்றும் பி.எச்.டி.கௌஷஜுல் ஆகியோர் அணியில் இணைத்துக் கொள்வதற்காக ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (5–ரி)

## சங்கா அதிர்ச்சி முடிவு



இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககார, இந்த வருடம் ஓகஸ்ட் மாத இறுதிப் பகுதியில் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இருந்தும் ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள் ளார்.

நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருடன் ஒருநாள் சர்வதேச தொடரில் இருந்து ஓய்வு

பக்கம் 04

## Picture Of The Day



நேற்றைய ஆட்டத்தில் சகிப் அல் ஹசனின் பிடியைத் தட்டித் தடுமாறி ஏந்தும் றூட்.

## அயர்லாந்துடன் இந்தியா ஆதிக்கம் செலுத்தும்

உலகக் கிண்ணத் தொடரில் இன்று நடைபெறும் 34 ஆவது ஆட்டத்தில் பி பிரிவில் இந்தியா – அயர்லாந்து அணிகள் மோதுகின்றன.

நடப்பு சம்பியனான டோனி தலைமையிலான இந்திய அணி தான் மோதிய 4 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றது. காலிறுதிக்குள் நுழைந்த இந்திய அணி தொடர்ந்து 5 ஆவது வெற்றியைப் பெறும் ஆர்வத்தில் உள்ளது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக மட்டும் போராடி வென்றது. ஏனைய ஆட்டங்களில் எளிதாக வெற்றி பெற்றது.

இதுவரை

பக்கம் 04

| குழு A | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 5 | 0 | 0 | 10 |
| ஆஸ்திரேலியா | 3 | 1 | 1 | 7 |
| பங்களாதேஷ் | 3 | 1 | 1 | 7 |
| இலங்கை | 3 | 2 | 0 | 6 |
| இங்கிலாந்து | 1 | 3 | 0 | 2 |
| ஆப்கானிஸ்தான் | 1 | 4 | 0 | 2 |
| ஸ்கொட்லாந்து | 0 | 4 | 0 | 0 |

| குழு B | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| இந்தியா | 4 | 0 | 0 | 8 |
| தென்னாபிரிக்கா | 3 | 2 | 0 | 6 |
| பாகிஸ்தான் | 3 | 2 | 0 | 6 |
| அயர்லாந்து | 3 | 1 | 0 | 6 |
| மே.இ.தீவுகள் | 2 | 3 | 0 | 4 |
| சிம்பாப்வே | 1 | 4 | 0 | 2 |
| ஐ.அ.இராச்சியம் | 0 | 4 | 0 | 0 |

2015 உலகக் கிண்ணம்

பங்களாதேஷ் எதிர் இங்கிலாந்து
15 ஓட்டங்களால் பங்களாதேஷ் வெற்றி

நாணயச் சுழற்சி இங்கிலாந்து

பங்களாதேஷ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| இக்பால் | C றூட் B அண்டர்சன் | 02 | 07 | 0 | 0 |
| கையிஸ் | C ஜோர்தான் B அண்டர்சன் | 02 | 02 | 0 | 0 |
| சர்கார் | C பட்லர் B ஜோர்தான் | 40 | 52 | 05 | 01 |
| முகமதுல்லா | RO வோக்ஸ் | 103 | 138 | 07 | 02 |
| சகிப் அல்ஹசன் | C றூட் B அலி | 02 | 06 | 0 | 0 |
| ரகீம் | C ஜோர்தான் B புரோட் | 89 | 77 | 08 | 01 |
| ரகுமான் | C மோர்கன் B ஜோர்தான் | 14 | 12 | 0 | 01 |
| மோட்டார்சா | ஆட்டமிழப்பில்லை | 06 | 04 | 01 | 0 |
| ஷனி | ஆட்டமிழப்பில்லை | 03 | 03 | 0 | 0 |
| உதிரிகள் | | | | | 14 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| அண்டர்சன் | 10 | 45 | 02 | 01 |
| புரோட் | 10 | 52 | 01 | 0 |
| ஜோர்தான் | 10 | 59 | 02 | 0 |
| வோக்ஸ் | 10 | 64 | 0 | 0 |
| அலி | 09 | 44 | 01 | 0 |
| றூட் | 01 | 06 | 0 | 0 |

TOTAL 275 (50)

1 - 03 (கையிஸ்)
2 - 08 (இக்பால்)
3 - 94 (சர்கார்)
4 - 99 (ஹசன்)
5 - 240 (முகமதுல்லா)
6 - 261 (ரகீம்)
7 - 265 (ரகுமான்)

இங்கிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அலி | RO சர்கார் | 19 | 21 | 03 | 0 |
| பெல் | C ரகீம் B கொசைன் | 63 | 82 | 07 | 0 |
| கேல்ஸ் | C ரகீம் B மோட்டார்சா | 27 | 34 | 04 | 0 |
| றூட் | C ரகீம் B மோட்டார்சா | 29 | 47 | 02 | 0 |
| மோர்கன் | C ஹசன் B கொசைன் | 19 | 28 | 01 | 0 |
| ரெய்லர் | C கையிஸ் B அகமட் | 01 | 04 | 0 | 0 |
| பட்லர் | C ரகீம் B அகமட் | 65 | 52 | 06 | 01 |
| வோக்ஸ் | ஆட்டமிழப்பில்லை | 42 | 40 | 03 | 0 |
| ஜோர்தான் | RO ஹசன் | 0 | 01 | 0 | 0 |
| புரோட் | B கொசைன் | 09 | 06 | 0 | 01 |
| அண்டர்சன் | B கொசைன் | 0 | 02 | 0 | 0 |
| உதிரிகள் | | | | | 05 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மோட்டார்சா | 10 | 48 | 02 | 0 |
| கொசைன் | 9.3 | 53 | 04 | 0 |
| ஷனி | 08 | 42 | 0 | 0 |
| ஹசன் | 10 | 41 | 0 | 0 |
| அகமட் | 09 | 59 | 02 | 0 |
| ரகுமான் | 02 | 13 | 0 | 0 |

TOTAL 260 (48.3)

1 - 43 (அலி) 2 - 97 (கெல்ஸ்)
3 - 121 (பெல்)
4 - 121 (மோர்கன்)
5 - 132 (ரெய்லர்)
6 - 163 (றூட்)
7 - 238 (பட்லர்)
8 - 238 (ஜோர்தான்)
9 - 220 (புரோட்)
10 - 260 (அண்டர்சன்)

ஆட்ட நாயகன் - முகமதுல்லா

## பாய்ந்தன வங்கப் புலிகள் பறித்து எடுத்தனர் வாய்ப்பை

அணித்தலைவர் மோர்கன் நேற்றையதினம் டக்கில் வெளியேறி மேலும் சிக்கலில் சிக்கினார். வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது ரெயிலரும் 1 ஓட்டத்துடன். இங்கிலாந்து 132–5. களத்தில் பட்லர் மற்றும் வோக்ஸ். நிதானம் அதிரடி என்று கலந்து காட்டினர். மீண்டும் ஒரு நம்பிக்கையில் இங்கிலாந்தின் கொடிகள் பறக்க ஆரம்பித்தன. அரைச்சதம் கடந்து விடை பெற்றார் பட்லர். ஒரு முனையில் வோக்ஸ் தரித்து நின்றாலும் பின்வரிசை வீரர்கள் ஒற்றையிலக்கத்துடன் வெளியேறினர்.

ஆனாலும் புரோட் களமிறங்கி அதிரடியாக ஆறு ஓட்டம் விளாசினார். மீண்டும் இங்கிலாந்தின் வாய்ப்பு பளிச்சென்று மின்னியது. அதே வேகத்தில் அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் அவர் போல்டாகி வெளியேறினார். தொடர்ந்த வந்த அண்டர்சனும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. அவரும் வெளியேற முடிவுக்கு வந்தது ஆட்டம்.



15 ஓட்டங்களால் காலிறுதிக்கு தகுதி பெற்றது பங்களாதேஷ். இந்தத் தடவையும் எட்டாக்கனியான கிண்ணக் கனவுடன் உலக்கிண்ண தொடருக்கு விடைகொடுத்தது இங்கிலாந்து. எதிர் வரும் வெள்ளிக்கிழமை இங்கிலாந்து, ஆப்கானிஸ்தானை எதிர் கொள்ளுகின்றது. இந்த ஆட்டத்தில் வென்றாலும் தோற்றாலும் இங்கிலாந்து வெளியில். (5–ரி)

## அயர்லாந்துடன் இந்தியா ஆதிக்கம் செலுத்தும்

ஆஸ்திரேலியாவில் விளையாடிய இந்திய அணி தற்போது நியூசிலாந்து மண்ணில் அயர்லாந்தைச் சந்திக்கிறது. அங்குள்ள தட்ப வெப்ப நிலை, ஆடுகளத்தின் தன்மை போன்ற சவாலை வீரர்கள் சமாளிப்பார்கள் என்று எதிர்பார்க் கப்படுகிறது. அதே நேரத்தில் அயர்லாந்து அணியை சாதாரணமாகவும் எடுத்துக்கொள்ள முடியாது.

ரோகித் சர்மா இதுவரை நல்ல ஒரு ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இதேபோல ரவிந்திர ஜடேஜாவும் துடுப்பாட்டத்தில் திணறுகிறார். ஹோக்லி ஒருவர்தான் நிலைத்து நின்று ஆடுகிறார். தவான், ரெய்னா, ரஹானே, டோனி போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களும், ஷமி, அஸ்வின், மோகித்சர்மா போன்ற சிறந்த பந்து வீச்சாளர்களும் உள்ளனர்.

பி பிரிவில் முதலிடத்தில் இருக்கும் இந்திய அணி நிகர ஓட்டசராசரியிலும் நல்ல நிலையில் உள்ளது. அயர்லாந்தையும் வீழ்த்தி வெற்றியை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள இந்திய அணி முயற்சிக்கும்.

6 புள்ளிகளுடன் இருக்கும் அயர்லாந்து இன்றைய ஆட்டத்தில் வென்றால் காலிறுதிக்குள் நுழைந்து விடும். மேற்கிந்தியத் தீவுகள் அணி வெளியேற்றப்படும் நிலை ஏற்படும். இதனால் இந்தியாவின் வெற்றிக்காக மேற்கிந்தியத் தீவுகள் பிரார்த்திக்கும்.

அயர்லாந்து அணி, மேற்கிந்தியத் தீவுகள் – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் – சிம்பாப்வே அணிகளை வீழ்த்தி இருந்தது. தென்னாபிரிக்காவிடம் தோற்று இருந்தது. அந்த அணியில் ஒபிரையன் சகோதரர்கள், எட்ஜொய்ஸ், போல்ஸ்டிர்லிங், ஜான்டூனி, போட்டர் பீல்ட் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர். இந்திய அணிக்கு எல்லா வகையிலும் அயர்லாந்து சவால் கொடுத்து விளையாடும் திறமை இருக்கிறது.

இந்த ஆட்டம் ஹமில்டன் நகரில் நடக்கிறது. பகல் – இரவாக நடைபெறும் இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு தொடங்குகிறது. (5–ரி)

## இந்தியாவின் சொத்து

மிகக் கடினம்.

மோஹித் சர்மா, சிறந்த துடுப்பாட்ட வீரர்களை அதிர்ச்சியடையச் செய்யும் ஒரு விதமான பந்துவீச்சை தன் கைவசம் வைத்துள்ளார். தொலைவிலிருந்து பார்க்கும் போது அவர் அவ்வளவு வேகம் வீசுவது போல் தெரியவில்லை. ஆனால் கவனமாக இவரது பந்துவீச்சை ஆராய்ந்து பார்த்தால் திடீரென அவர் 5 கிலோ மீற்றர் வேகம் கூட்டி விடுகிறார்.

அதாவது 132–135 கிமீ வேகம் வீசிக் கொண்டிருப் பவர், திடீரென ஒரு பந்தை 140 இல் வீசுவது போல் அவர் வேகம் கூட்டுகிறார். இது சிறந்த துடுப்பாட்ட வீரர் களையும் சில சமயங்களில் நிலைகுலையச் செய்யும், என்றார். (5–ரி)





அதிகூடிய ஓட்டங்கள்

| | |
|---|---|
| 372 | சங்ககாரா (இலங்கை) 5 ஆட்டங்கள் |
| 318 | வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா) 5 ஆட்டங்கள் |
| 295 | அம்லா (தென்னாபிரிக்கா) 5 ஆட்டங்கள் |
| 295 | ரெயிலர் (சிம்பாப்வே) 5 ஆட்டங்கள் |
| 291 | டில்ஷான் (இலங்கை) 5 ஆட்டங்கள் |



அதிகூடிய இலக்குகள்

| | |
|---|---|
| 13 | போல்ட் (நியூஸிலாந்து) 5 ஆட்டங்கள் |
| 13 | சவுத்தி (நியூசிலாந்து) 5 ஆட்டங்கள் |
| 12 | ஸ்ரார்க் (ஆஸ்திரேலியா) 4 ஆட்டங்கள் |
| 12 | விக்டோரி (நியூசிலாந்து) 5 ஆட்டங்கள் |
| 11 | மோர்கல் (தென்னாபிரிக்கா) 5 ஆட்டங்கள் |

## சங்கா அதிர்ச்சி முடிவு

பெறவுள்ள குமார் சங்ககார – ஜூலை, ஓகஸ்ட் காலப் பகுதியில் நடைபெறவுள்ள இரண்டு அல்லது ஒரு டெஸ்ட் தொடரில் விளையாடிய பின்னர் ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார். இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரே குமார் சங்ககாரவின் இறுதி டெஸ்ட் தொடராக அமைய வுள்ளது. உலகக் கிண்ண தொடரில் நேற்று முன்தினம் அடித்த சத்தத்துடன் மூன்று சதங்களை தொடர்ந்து அடித்தவர் என்ற புதிய சாதனை, ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் மூன்று சதங்களை தொடர்ந்து அடித்தவர் என்ற சாதனையில் ஏழாவது வீரராக இணைந்துள்ளார்.

குமார் சங்ககார தனது கிரிக்கெட்டின் வாழ்நாளில் உயரிய நிலையில் தற்போதே இருப்பதாக வர்ணிக்கப்படுகின்றது. நான் அந்த நிலையில் இருக்கின்றேனா இல்லையா என்பது எனக்கு தெரியாது. ஆனால் அணிக்கு எது தேவையோ அதை நான் செய்து வருகின்றேன். என்று குமார் சங்ககார தெரிவித்துள்ளார். (5–ரி)

## சச்சினின் ரசிகருக்குச் சிக்கல்




பீகாரைசேர்ந்தவர் சுதிர் குமார் சவுத்ரி (வயது–34). சச்சினின் ரசிகரான இவர், உடலில் சச்சின் பெயருடன், மூவர்ணத்தை பூசிக் கொண்டு ஆட்டம் முழுவதும், இந்திய தேசியக் கொடியை அசைத்து வீரர்களை உற்சாகப்படுத்துவார்.

உலகக் கிண்ணத் தொடருக்காக ஆஸ்திரேலியா சென்றார். மேற் கிந்தியத்தீவுகளுடான ஆட்டத்தைக் காணச் சென்ற இவரை, பேர்த் மைதானத்தின் உள்ளே விட அனுமதி மறுத்தார் பாதுகாப்பு அதிகாரி ரெனால்டுஸ். இதற்கு சுதிர் சவுத்ரி யின் கையில் இருந்த மூவர்ணக் கொடியே (கம்பின் நீளம் 2 மீற்றர்) காரணம். இதையடுத்து வாக்குவா தத்தில் ஈடுபட்டார் சுதிர் சவுத்ரி.

அப்போது, அனைத்து ஆட்டத்துக்கும் இப்படித் தான் வருகிறேன். இதற்குமுன் ஐக்கிய அரபு இராச் சியத்துடனான ஆட்டத்தைக் காண வந்தபோதுகூட, யாரும் தடுக்கவில்லை. இப்போது ஏன் தடுக்கிறீர்கள், நான் எந்த பிரச்னையும் செய்ய மாட்டேன். இந்திய வீரர்கள் அனைவருக்கும் என்னைத் தெரியும். அவர்களிடம் வேண்டுமானால் கேட்டுப்பாருங்கள், இப்போது உள்ளே செல்ல அனுமதியுங்கள் என்றார்.

பாதுகாப்பு அதிகாரி கூறுகையில், கொடிக் கம்பத்தின் நீளம் 1.2 மீற்றர் தான் இருக்க வேண்டும். அதிகமாக இருந்தால் மற்றவர்களுக்கு தொல்லையாக இருக்கும். கொடியை அசைக்கும் போது, பார்வையாளர்கள் மேல் பட்டுவிடும். இதனால், பல நுழைவு வாயில்களில் இவரைத்தடுத்தபோதும், எப்படியோ மைதானத்துக்குள் சென்று விட்டார். பாதுகாப்பு காரணங்களுக்காகத் தான் இப்படி செய்ய நேர்ந்தது – என்றார். (5–ரி)

## பதம் பார்த்தது பந்து கிடைத்தது பரிசு

இதனையடுத்து உடனடியாக மருத்துவர்கள் சிறுவனுக்கு சிகிச்சை அளித்து தோளில் கட்டுப் போட்டனர்.

இந்த சம்பவத்தை கேள்விப் பட்ட டேவிட் வோர்னர், அந்த சிறுவனுக்கு தான் பயன்படுத்திய கையுறையில் தனது கையொப்பமிட்டு பரிசாக வழங்கினார். மேலும், அந்த சிறுவன் விரைவில் [illegible] மடையவும் வாழ்த்து[illegible] வித்தார்.

இது குறித்து டேவிட் வோர்னர் கூறுகையில், சிறுவனை பந்து தாக்கியதை நான் பெரிய திரையில் பார்க்கவில்லை. இதை கேள்விப் பட்டதும் உடனே சிறுவனின் தந்தையிடம் சென்று பேசினேன். தற் போது சிறுவன் நன்றாக இருக்கிறான் என்று தெரிவித்துள்ளார். (5–ரி)

## சங்காதான் கிங்

தென்னாபிரிக்காவின் வில்லியர்ஸ், இந்தியாவின் ஹோக்லியை விட இலங்கையின் சங்ககாரா மிக ஆபத்தான துடுப்பாட்ட வீரர் என்று தெரிவித்துள்ளார் இலங்கை அணியின் முன்னாள் சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன்.

உலகக் கிண்ண தொடரில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் ச[illegible]காரா அடுத்தடுத்து மூ[illegible] ஆட்டங்களில் சதமடித்து, புதிய சாதனை படைத்தார்.

இது குறித்து முத்தையா முரளிதரன் கூறியதாவது, ஆஸ்திரேலியாவுடன் இலங்கை தோற்றிருந்தாலும் அதன் நேரான எண்ணம் கவர்வதாக உள்ளது. பந்துவீச்சாளர்கள் அதிக ஓட்டங்களைவிட்டுக்கொடுத்திருந்தாலும், துடுப்பாட்ட வீரர்கள் தக்க பதிலடி கொடுத்தனர்.

தற்போது உலகின் முதல் நிலைத் துடுப்பாட்ட வீரர் என்றால் அது குமார் சங்ககாரா தான். நீங்கள் ஹோ[illegible] வில்லியர்ஸ், மக்ஸ்வெல் பற்றி என்னதான் பெருமையாக பேசினாலும் தற்போதைய டொப் சங்ககாராதான். மற்ற வீரர்கள் சிறப்பாக விளையாடியிருந்தாலும், ஒரு வீரரை பார்த்து பிற அணிகள் அச்சப்படுகின்றன என்றால், அது சங்ககாராவை பார்த்து தான்.

இந்த உலகக் கிண்ண தொடருடன் ஓய்வு பெறும் முடிவில் இருப்பதால் தன்னுடைய முழுத் திறனையும் வெளிப்படுத்தி சிறப்பாக விளையாடி வருகிறார் என்று தெரிவித்துள்ளார். (5–ரி)

# காட்சி மாறியது

உலகக் கிண்ணத் தொடரில் லீக் ஆட்டத்தில் இந்திய அணி, மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தியதைத் தொடர்ந்து புதிய 'மோக்கா' விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடந்து வருகிறது. இதில் இந்தியாவுடன் மோதும் அணிகளுக்கு ஏற்றவாறு 'மோக்கா.. மோக்கா' என்ற பெயரிலான விளம்பர தொடர்களை 'ஸ்டார் ஸ்போர்ஸ்' வெளியிட்டு வருகிறது. இந்தியா – பாகிஸ்தான் மோதலின் போது வெளியிடப்பட்ட வீடியோவில், தோல்வியால் பட்டாசு வெடிக்க முடியாமல் அவதிப்படும் பாகிஸ்தான் ரசிகர் அனைத்து விளம்பரம்பத்திலும் தோன்றும் வகையில் வீடியோக்கள் வெளியிடப்பட்டது.

அந்த ரசிகர் பாகிஸ்தான் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தென்னாபிரிக்க ரசிகராகவும், தென்னாபிரிக்காவின் தோல்வியைத் தொடர்ந்து ஐக்கிய அரபு எமிரேட்சின் ரசிகராகவும், அந்த அணி தோல்வியடைந்ததும் மேற்கிந்திய தீவுகள் அணியின் ரசிகராகவும் தோன்றி பட்டாசு வெடிக்க காத்திருப்பது போன்ற வீடியோக்கள் அடுத்தடுத்து வெளிவந்தன.

இந்த நிலையில் மேற்கிந்திய தீவுகளையும் இந்தியா வீழ்த்தி காலிறுதியை உறுதி செய்தது. இதனையடுத்து வெளியிடப்பட்ட விளம்பரத்தில் புதிய ருவிஸ்ட் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விளம்பரப் படத்தில், இதுவரை இந்தியாவுக்கு எதிராகவே பட்டாசு பெட்டிகளுடன் சுற்றித்திருந்த அந்த ரசிகர், வேறு வழியின்றி இந்திய ரசிகராகி விட்டதை போலவும், இந்தியாவின் சீருடையை அணிந்துள்ளது போலவும் காட்டப்பட்டுள்ளது.

இனியாவது பட்டாசு வெடிக்கலாமே என்ற ஆசையில் அந்த ரசிகர் இப்படி மாறிவிட்டாராம். இத்தனை நாட்களாக அந்த நபர் இந்தியாவை எதிர்த்து வந்தார், இந்தியா வென்று வந்தது. இப்போது அந்த விளம்பர நபர் இந்தியாவுக்கு ஆதரவாக மாறிவிட்டாரே, ஆட்டத்தின் முடிவும் அப்படியே உல்டா ஆகிவிட்டால் என்ன செய்வது என்பதே இப்போது ரசிகர்கள் கவலையாக உள்ளது. (5–ரி)

# ஊடகங்கள் ஊதிப் பெருப்பிக்கின்றன



சுரேஷ் ரெய்னா ஷோர்ட் பிட்ச் பந்துகளில் திணறுகிறார் என்ற விடயம் ஊடகங்களால் ஊதிப் பெருக்கப்படுகிறது என்று கூறியுள்ளார் இந்திய அணித் தலைவர் டோனி. மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் 22 ஓட்டங்களில் ஸ்மித் வீசிய சாதாரண ஷேஜுர்ட் பிட்ச் பந்தில் ரெய்னா ஆட்டமிழந்து வெளியேறினார். இந்த விடயம் குறித்து, டோனியிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள்தான் இதனை ஒரு பெரிய விடயமாக ஊதிப் பெருக்குகின்றனர். மற்ற நாட்டு வீரர்கள் சிலரும் ஷோர்ட் பிட்ச் பந்துகளுக்கு ஆட்டமிழக்கின்றனர். ஆனால் திரும்பத் திரும்ப இது எங்கள் தலையில் வந்து விழுகிறது. அதாவது ரெய்னாவுக்கு ஷோர்ட் பிட்ச் பந்துகள் பலவீனம். அவருக்கு ஷோர்ட் பிட்ச் வீசுங்கள் என்று தொடர்ந்து கூறப்பட்டு வருகிறது. நான் நினைக்கிறேன் ரெய்னா நன்றாகவே துடுப்பெடுத்தாடி வருகிறார். இந்திய கிரிக்கெட் வரலாற்றை எடுத்துப் பாருங்கள் 5 ஆம் நிலை வீரர்கள் எவ்வளவு பேர் சிறப்பாக ஆடியுள்ளார்கள் என்பதை சரிபாருங்கள். யுவராஜ் சிங் மட்டும்தான் சீராக நமக்கு அந்த நிலையில் ஆடிக் கொடுத்துள்ளார், பிறகு அவர் 4 ஆம் நிலையில் களமிறக்கப்பட்டார். இல்லையெனில் அந்த நிலையில் மாற்றி மாற்றி வீரர்களைக் களமிறக்கிக் கொண்டிருந்தோம். அந்த நிலையில் விளையாடிய வீரர்களிடம் நீங்கள் கேட்டுப் பாருங்கள். ஒருவரும் அந்த நிலையில் திருப்திகரமாக ஆடவில்லை. ஆகவே, ரெய்னாதான் அந்த நிலையில் களமிறங்க சரியான தேர்வு. நாம் அவரை ஆதரிக்க வேண்டும். நாம் ரெய்னாவை ஆதரிக்கவில்லையெனில் அவருக்குப் பதிலாக புதிய வீரர் வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் தனக்காக ஆடத் தொடங்க முடிவெடுத்தால், வளர்த்தெடுக்க அது நல்ல பழக்கம் கிடையாது. இது நம் அணியில் நடக்கக்கூடாது என்பதில் நாங்கள் கவனமாக இருக்கிறோம். உதாரணமாக ஒருவர் 40 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் துடுப்பெடுத்தாடுகின்றார் என்றால், எவ்வளவு ஓட்டங்கள் அவர் எடுக்க முடியும்? 20 அல்லது 25 ஓட்டங்களில் ஆட்டமிழக்க முடியும். உடனே 3 ஆவது ஆட்டத்தின் முடிவில் நாம் என்ன கூறுவோம்; அவர் ஓட்டங்களை எடுப்பதில்லை, அவர் திறனில் இல்லை, 20 ஓட்டங்களையே எடுக்கிறார், என்று கூறுவோம்.

இங்குதான் எத்தனை பந்துகளில் ஒருவர் இந்த ஓட்டங்களை எடுக்கிறார் என்ற விடயம் வருகிறது. நீங்கள் கூறும் விவகாரத்தை வலியுறுத்தினால், துடுப்பாட்ட வீரர்கள் தன்னலத்துக்காக ஆடத் தொடங்குவர். நாம் எவ்வளவு ஓட்டங்கள் எடுக்க முடியுமோ, அவ்வளவு ஓட்டங்களைக் குவிக்க வேண்டும். ஏனெனில் நவீன கிரிக்கெட் ஆட்டத்தில் எந்த ஒரு ஓட்ட எண்ணிக்கையும் பாதுகாப்பான ஓட்ட எண்ணிக்கை கிடையாது – என்றார். (5–ரி)


**Tilko Jaffna City Hotel**



TILKO JAFFNA CITY HOTEL

- LUXURIOUS ROOMS
- SWIMING POOL
- RESTAURANT
- BANQUET HALL
- GYM & SPA
- CONFERANCE HALL
- FREE WIFI

70/6, K.K.S. Road, Jaffna. Sri Lanka. Tel: 021 222 6666, Fax: 021 222 7291
e.mail: info@cityhoteljaffna.com Web: www.cityhoteljaffna.com


**தினம் ஒரு பரிசுப் போட்டி 24**

தென்னாபிரிக்கா– ஐக்கிய அரபு ராஜ்ஜியம் அணிகளுக்கிடையில் நாளை மறுதினம் (12.03.2015) நடைபெறும் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

.....................................................................

பெயர் : ..................................................

தே.அ.இல. : ..................................................

முகவரி : ..................................................

..................................................

தொலைபேசி இல.: ..................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (11.03.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

**பரிசுப் போட்டி**

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

......................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

..................................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

**போட்டி விதிகள்**

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

**அரையிறுதி பரிசுப் போட்டி**

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)...................... 2)......................

3)...................... 4)......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015

தலா 5,000/= 20 பேருக்கு


BCAS CAMPUS JAFFNA

5 லட்சம் ரூபாவுக்கான பரிசுக் கூப்பன்


**மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி**

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

......................

தொலைபேசி

......................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2 1/2 லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1 1/2 லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு


MJ நியூ மைதிலி ஜுவலர்ஸ்

யாழ் மண்ணில் தன்னிகரில்லாதலைமை நிறுவனம்

தொ.பே: 021 221 7878/ 021 221 7878
E-mail: newmaithily@gmail.com
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


**லக்கி பான்சி கவுஸ்** இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்** பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா** 350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கனன் போட்டோ** 165 பிரதான வீதி.பருத்தித்துறை.
**சூரியா பாமசி** புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்** 85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்** 3ஆம் சந்தி கெருடாவில்.
**தர்மலிங்கம்** கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
**கலைச்சோலை** இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்** ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்** மூளாய் வீதி வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்** பலாலி,வீதி,கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்** உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்** பரமேஸ்வரா சந்தி,திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்** திருநெல்வேலி.
**ஓம் கணேசா** இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்** 103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை** 41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்** 14. விதானையார் வீதி சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்** இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே** செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்** சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்** பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்** சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்** பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்** சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை** பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ** கே.கே.எஸ் .வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்** நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்** ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி** ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்** அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை** வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை** மல்லாவி.
**கோமதி நெற்கபே** வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை** 24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்** ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்** 31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்** பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்** தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்.பி.சி.எஸ்)** பூநகரி.
**டிலசிகா** 124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்** விசுவமடு.
**வரணா புக்சொப்** 755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்** குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை** பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்** வரணி.
**விநாயகர் களஞ்சியம்** அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்** வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,** நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்** காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எந்த இக்கட்டான சூழ்நிலையையும் மன உறுதியுடன் சமாளித்து வெற்றி காண்பீர்கள். எதிர்ப்புகள் நீங்கும். நீண்ட நாள்களாக இருந்த பிரச்சினை குறையும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும்.

**இடபம்:** வீண் பேச்சைக் குறைப்பது நல்லது. எடுத்த காரியங்களைச் செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகலாம். உங்கள் வாக்கு வன்மையால் நன்மை ஏற்படும். அரசு மூலம் நடக்கவேண்டியகாரியங்களில் சாதகமான நிலை காணப்படும்.

**மிதுனம்:** சுப காரியங்களில் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும்.

**கடகம்:** நினைத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். வீண் கவலை விலகும். முடிந்தவரை அடுத்தவர் விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். வியாபாரப் போட்டிகள் குறையும்.

**சிங்கம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவார்கள். வேலை பார்க்கும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும்.

**கன்னி:** நீண்ட நாள்களாக இருந்து வந்த தாமத நிலை மாறும். சக ஊழியர்கள் மற்றும் மேலிடத்துடன் இருந்து வந்த கசப்புணர்வு நீங்கும். வெளியூரில் இருந்து வந்தவர்கள் குடும்பத்தினருடன் சேர்வதற்கு உகந்த காலகட்டமிது.

**துலாம்:** திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். கணவன், மனைவி, ஒருவரது பேச்சை மற்றவர் கேட்பதன் மூலம் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தை திறமையாகச் செய்து முடித்து பாராட்டுப் பெறுவீர்கள். வாகனங்களை ஓட்டி செல்லும்போது கவனம் தேவை. தங்கள் உடைமைகளை கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது அவசியம்.

**தனுசு:** தனிமையாக இருக்க நினைப்பீர்கள். உங்களது முயற்சிகளுக்கு இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். எடுத்த காரியத்தை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். மேலிடத்தை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** நீங்கள் இருக்கும் இடத்தில் வீண் வாக்குவாதம் ஏற்படும். நண்பர்களிடம் பகை ஏற்படலாம். பிடிவாதத்தை விட்டு விடுவது காரிய வெற்றிக்கு உதவும். வீண் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக நேரிடலாம்.

**கும்பம்:** குழந்தைகளின் கல்வி பற்றிய கவலை விலகும். மகிழ்ச்சியான பொழுதுபோக்கில் ஈடுபடுவீர்கள். வழக்குத் தொடர்பான எல்லாவற்றிலும் நன்மை உண்டாகும். எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும்.

**மீனம்:** பலவகைகளிலும் நன்மை உண்டாகும். இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும்.




## எகிறும் இணைய வேகம்

தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து வரும் இந்தக் காலகட்டத்தில் இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்கள் 5 ஜி தகவல் தொடர்பின் மூலம் 1 ரி.பி.பி.எஸ்., (1 Tbps) இன்டர்நெற் வேகத்தை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளனர்.

இங்கிலாந்தின் சுரே பல்கலைக்கழகத்தின் 5 ஜி இன்னோவேசன் மையத்தைச் (5G Innovation Center) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் 1 ரி.பீ.பி.எஸ்., அளவுக்கு இன்டர்நெற் வேகத்தை உயர்த்தும் புதிய முயற்சியை செய்து அதில் வெற்றி கண்டுள்ளனர். இது தற்போதுள்ள வேகத்தை விட ஆயிரம் மடங்கு அதிகம்.

இந்த வேகத்தின் மூலம் ஒரு திரைப் படத்தை 3 நிமிடங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். இது 4 ஜி வேகத்தைவிட சுமார் 65 ஆயிரம் மடங்கு வேகமானது. இதற்கு முன்பு அதிக வேகமாக சாம்சுங் நிறுவனத்தின், 5 ஜி இன்டர்நெற் வேகம் 7.5 ஜி.பி.பி.எஸ் என்ற அளவில் இருந்தது.

புதிய தொழில்நுட்பம் 2018 ஆம் ஆண்டு மக்கள் பயன்பாட்டுக்கு வரும் என்று நம்பப்படுகிறது.

## 'லேட்டஸ்ட் ஸ்மார்ட்போன் திருக்குறள்'



1.செல்போனில் சூப்பர் போன் ஸ்மார்ட் போன், அந்தப்போன்செல் போனில் எல்லாம் தலை.

2.தந்தை மகற் காற்றும்நன்றி, சாம் சுங்கில் ஸ்மார்ட் போன் வாங்கித் தரல்...

3.மகன் தந்தைக்காற்றும் உதவி, அப்பாமுன் செல் போனை நோண்டாதிருத்தல்...

4. 2ஜி யினால் ஸ்லோவாகும் டேட்டா, ஆகாதே 3ஜி யில் போட்ட டேட்டா...

5.உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே இடுக்கண்களைவதாம் சார்ஜர்...

இகழ்ச்சி என்னைத் துணிந்து
செல் என்றது....
புகழ்ச்சி என்னைப் பணிந்து
செல் என்றது

I Like

## ஜெசிக்காவுக்கு சிறப்பான வரவேற்பு

விஜய் தொலைக்காட்சி நடத்திய சூப்பர் சிங்கர் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டதாக அறிவிக்கப்பட்ட வெற்றியாளர் ஜெசிக்காவுக்கு கனடாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

விஜய் தொலைக்காட்சி நடத்திய சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கனடாவில் வாழ்ந்து வரும், இலங்கைத் தமிழரான ஜெசிக்காவும் கலந்து கொண்டார். இந்தப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பிடித்ததாக அறிவிக்கப்பட்ட ஜெசிக்காவுக்கு ஒரு கிலோ தங்கம் பரிசாக வழங்கப்பட்டது. அந்த ஒரு கிலோ தங்கத்தையும் தமிழ்நாடு மற்றும் ஈழத்தில் வாழும் அநாதைக் குழந்தைகளது வளர்ச்சிக்காக வழங்கினார் ஜெசிக்கா. ஏற்கனவே, தனது இனிமையான குரலால் தமிழ் மக்களைக் கவர்ந்த ஜெசிக்கா, இந்த நற்செயல் மூலம் அவர்களது மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

இந்நிலையில், கனடாவுக்கு நேற்று முன்தினம் திரும்பியுள்ளார். ஜெசிக்கா. றொறன்டோ விமான நிலையத்தில் ஜெசிக்காவை வரவேற்க ஏராளமான தமிழர்கள் திரண்டிருந்தனர். விமான நிலையத்தை விட்டு வெளியே வந்ததும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். ஜெசிக்காவை பாராட்டி அவர்கள் கையில் பதாகைகள் ஏந்தியிருந்தனர்.



நல்ல காமெடி
சொல்லியிருக்காங்க
கொஞ்சம் சிரி



## பாடசாலைகள், பொது அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மார்ச் 10
வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்துக்குரிய 2015 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை துண்டி இந்து மயானபுனரமைப்புக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும் அரியாலை சனசமூக நிலைய சிறுவர் பூங்கா, முன்பள்ளி என்பவற்றின் தளபாட புனரமைப்புகளுக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும் மணியம் தோட்டம் கர்த்தர் ஆலய புனரமைப்புக்கு 75 ஆயிரம் ரூபாவும் வளன்புரம் புனித சூசைப்பர் ஆலய புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய கிணறு புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும் நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க. பாடசாலை மைதான புனரமைப்புக்கு 2 லட்சம் ரூபாவும் யாழ். அடைக்கல அன்னை ஆலய புனரமைப்புக்கு 75ஆயிரம் ரூபாவும் றக்கா வீதி ஞான வைரவர் ஆலய புனரமைப்புக்கு 50ஆயிரம் ரூபாவும் அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலய புனரமைப்புக்கு 50ஆயிரம் ரூபாவும் அரியாலை திருமகள் வீதி முத்து வைரவர் கோவில் புனரமைப்புக்கு 50ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

குருநகர் சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும் புனித பத்திரிசியார் கல்லூரி ஆரம்ப பிரிவு பாடசாலைக்கு இலத்திரனியல் வசதிகளுக்காக ஒரு லட்சம் ரூபாவும் பெரிய புலம் மகா வித்தியாலயத்துக்கு பளு தூக்கும் இயந்திரம் மற்றும் சுற்று மதிலுக்காக 2 லட்சம் ரூபாவும் கொட்டடி சீனிவாசகம் வீதி சனசமூக நிலைய புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும் மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலைய விளையாட்டு கழகத்துக்கு 15 ஆயிரம் ரூபாவும்–

வண்ணார்பண்ணை வள்ளுவர் சனசமூக நிலைய முன்பள்ளி உள்ளக, வெளியக, விளையாட்டு உபகரணங்களுக்கு ஒரு லட்சம் ரூபாவும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மண்டபத்துக்கான கதிரைகளுக்கு ஒரு லட்சம் ரூபாவும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டில் வாழும் 54 மாணவர்களுக்கான பாதணிகளுக்கு 40 ஆயிரம் ரூபாவும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி தளபாட வசதிகளுக்கு ஒரு லட்சம் ரூபாவும் புன்னாலைக்கட்டுவன் கணேசா முன்பள்ளிக்கு இலத்திரனியல் உபகரணங்களுக்காக 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார். (வ–135)

## தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயரின் பவள விழா



யாழ்ப்பாணம், மார்ச் 10
தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயரும் யாழ். பல்கலைக்கழக தமிழ் முதுமாணிக் கற்கை நெறி வருகை விரிவுரையாளருமாகிய அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசனின் பவள விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியின் பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அருட்தந்தை எஸ். மனோபவன் தலைமையில் நடைபெறும் வழிபாட்டு நிகழ்வுகளில் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவண. இராயப்பு யோசப் ஆண்டகை அருளுரை வழங்குவார். உடுவில் மகளிர் கல்லூரியினரின் வழிபாட்டுப் பாடல்கள் இடம்பெறும். தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் துணை அதிபர் ச.லலீசனின் முன்னிலைப் படுத்தலில் பகிரங்கக் கூட்டம் இடம்பெறும். இந்த நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், இலங்கைத் திருச்சபையின் நுவரெலியா மறைமாவட்டக் குருமுதல்வர் வண.எஸ்.பி.நேசகுமாரும் வழங்குவர்.

பவளவிழாவையொட்டி பேராயரால் எழுதப்பட்ட 'கண்டதும் கேட்டதும்' என்ற நூலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெளியிட்டு வைப்பார். (வ)

## முறையற்ற வகையில் தரிப்பிடம் வெயிலில் காயும் வாகனங்கள்



கொழும்புத்துறை, மார்ச் 10
யாழ்.பழையபூங்கா வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட யாழ்.பிரதேச செயலகத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் தரிப்பிடப்பகுதி சீர் செய்யப்படாமையால் வாகனங்கள் நாள்முழுவதும் வெயிலில் காய்வதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதேச செயலகத்தில் பணி புரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் அரச கருமங்களின் நிமித்தம் வரும் பொதுமக்கள் அனைவரின் மோட்டார் சைக்கிள்களும் வெயிலில் தரித்து நிறுத்த வேண்டியுள்ளமையால் சக்கரங்களின் காற்று விரைவில் அற்றுப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப்பகுதியில் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ள போதிலும் தரை மிகவும் தாழ்வாகவும் தரிப்பிடம் சுமார் 2 அடி உயரமாகவும் காணப்படுவதால் வாகனங்களை உள்ளே கொண்டு செல்ல முடியாதுள்ளது.

எனவே தாழ்ந்த நிலப்பகுதியை மண்கொண்டு நிரப்பி வாகனத் தரிப்பிடத்தை மக்கள் பாவனைக்கு உரிய வகையில் மாற்றி அமைக்குமாறு பொது மக்களும் உத்தியோகத்தர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த மாதம் திறந்து வைக்கப் பட்ட யாழ்.பிரதேச செயலக கட்டடத்தில் பிரதேச செயலகத்தின் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ–135)

## எளிமையான பிறந்தநாள் கொண்டாட்டம்

தென்மராட்சி, மார்ச்10
யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் உ.சசிக்குமார் என்பவர் தனது பிறந்த தினத்தை கைதடி சாந்தி நிலையத்தில் கொண்டாடினார்.

இல்லத்தில் எளிமையான முறையில் பிறந்த நாளைக் கொண்டாடிய மாணவனை அங்குள்ள அனைத்து முதியவர்களும் ஆசிர்வதித்தனர். அத்துடன் மருத்துவ சேவைக்குள் வந்ததும் முதியோருக்கு சிகிச்சையளிப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு அந்த மாணவனும் இதனை வேத வாக்காகக் கருதி சேவையாற்றவுள்ளதாகவும் தெரிவித்ததாகக் கூறப்பட்டது. இவ் வாறான நிகழ்வுகளால் முதியோர்கள் மன மகிழ்ச்சியடைவதாகவும் இல்ல நிர்வாகிகள் தெரிவித்தனர். (வ–9)


### சிறுநீரகம் தேவை

ஐந்து வயதுள்ள வி.டிலாஸ் என்னும் சிறுவனுக்கு சிறுநீரகங்கள் செயலிழந்து உள்ளமையால் அவசரமாக சிறுநீரகமாற்றீடு செய்து அவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு B குருதிவகையைச் சேர்ந்த நபர்களிடம் இருந்து சிறுநீரகம் எதிர்பார்க்கப்படுகின்றது. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
ஏழாலை மேற்கு, ஏழாலை.
தொடர்பு: 077 721 8255, 077 464 1435, 011 499 9518
(57639)(4.3.7)




### Work opportunity
08.03.2015 ஞாயிற்றுக்கிழமை 24 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய Work opportunity Vacancy இற்கான விண்ணப்பங்களை contactresearcher@gmail.com எனும் ஈமெயிலுக்கு அனுப்பவும். (சி/16642)(4.3.7)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
45 நாள்கள் நிரம்பிய டோமன் இன ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு: 0766467742 (57663)(3.5.7)

### பெயர்மாற்றம்
பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறையில் வசிக்கும் நாகமணி ரவீந்திரன் ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் நாகமணி ரவிபாலன் என பெயர்மாற்றம் செய்வதோடு, இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகிறேன்.
(57660)(4.3.7) நாகமணி ரவிபாலன்.

### விற்பனைக்கு
நல்ல இன ஆட்டுக்கடாய்கள் விற்பனைக்குண்டு.
Kay Farm (Pvt) Ltd
078 880 3483 (57653)(4.3.7)

### ஆங்கில வகுப்பு
O/L இல் ஆங்கிலத்தில் "A" சித்தி மற்றும் சரளமான ஆங்கிலப் பேச்சு என்பன ஒருங்கிணைந்த குழுப் மற்றும் தனிப்பட்ட வகுப்புகள். மற்றுமொரு பிரிவு உங்கள் இடங்களில் (யாழ்.வலிகாமம், தென்மராட்சி, கிளிநொச்சி, பரந்தன், உருத்திரபுரம்) உடன் தொடர்பு கொண்டு குறுகிய காலத்தில் வெற்றி பெறுங்கள். தொடர்பு ஆசிரியர் கரன் 077 611 4068 (57634)(4.3.7)

### TV கள் மலிவு விற்பனை
SONY Wega Flat 14"-5000/=, 21"-10000/=, 25" - 14000/=, SONY DVD-3000/=, ரேடியோ கசெற்-3000/=, BOX, குளிர்சாதனப் பெட்டி- 20000/=
சோனி ரேற் சென்ரர்
(கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ்.வீதி, கன்னாகம். T.P: 077 044 0570 (57638)(4.3.7)

### வீடு வாடகைக்கு
சுன்னாகம் சந்தியில் இருந்து 400m தொலைவில் K.K.S வீதியில் 4 அறைகள், 2 ஹோல், மற்றும் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. 5 வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதி, களஞ்சிய சாலையாகவும் உபயோகிக்கலாம்.
பார்வையிடும் நேரம் : காலை 10 மணி முதல்
தொடர்பு: 077 6727073 (57642)(8.7)

### தேவை
கிளிநொச்சி மாவட்டத்தில் (பளைப் பிரதேசத்தில்) இயங்கும் கால்நடைப் பண்ணைக்கு.
கால்நடை வளர்ப்பு (SUPERVISOR)
* கல்வித்தகைமை: கால்நடை விவசாயத்தில் அனுபவம் விரும்பத்தக்கது.
* Degree /Diploma தகைமை.
* மோட்டார் Bike சாரதி அனுமதிப்பத்திரம் இருப்பின் மேலதிக தகைமையாகும்.
* விண்ணப்பங்களை 10 நாள்களுக்குள் அனுப்பவும்.

Kay Farm (Pvt) Ltd
விளம்பர இல.5050, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(57694)(4.3.7)

### இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
இல.97/5, கண்ணகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம்.
(உரும்பிராய் சந்திக்கு அருகில்)
T.P: 072 681 6681, 072 681 6691 (56945)(4.3.6)

# தமிழினம் பண்பாடுகளை விட்டுக்கொடுக்க முடியாது

## பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 10

மொழி,கலை, கலாசார பண்பாடுகள் தான் இனங்களை அடையாளப் படுத்துகின்றன. தமிழினம் இவற்றை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் இவற்றை விட்டுக் கொடுக்க தமிழினம் தயாரில்லை.

இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை.

யாழ்.பிரதேச கலாசாரப் பேரவைப் பொதுக் கூட்டம் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. இதன்போது ஆலோசகராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:

"எமது நாட்டில் பிரதான இனங்களை விட 17இற்கும் மேற்பட்ட சிறு இனங்கள் காணப்படுகின்றன. அத்தனை இனங்களின் கலாசாரங்களையும் நாம் பின்பற்ற முடியாது. எமக்கென்று தனித்துவமான கலாசாரம் உண்டு. உடை, உறையுள், உணவு, உபசரிப்பு போன்றவை வழியாக எமக்கே உரித்தான பண்பாடுகளை வெளிக்கொணர வேண்டும். கொடி கட்டிப் பறந்த கலாசார பண்பாடுகள் யாழ்ப்பாணத்துக்கு உண்டு.

இங்கு வாழும் மக்கள் தமது திறமைகளை பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய, சர்வதேச அளவில் முன்னெடுக்க கலாசாரப் பேரவைகள் உழைக்க வேண்டும். இளங்கலைஞர் களை இவ்வாறான அமைப்புக்கள் சமூகத்துக்கு வெளிக் கொணர வேண்டும். எந்த நிலையிலும் எமது கலாசார பண்பாடுகளை அழிய விடாது பாதுகாக்க உழைக்க வேண்டும்"– என்றார். (வ–135)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



சின்னையா பர்மிலா

பிறப்பு 03.02.1991 இறப்பு 09.02.2015

கடந்த 09.02.2015 இறைபதம் அடைந்த சின்னையா பர்மிலா (சங்கீதா- மட்டக்களப்பு கல்லடி விபுலானந்தா பல்கலைக்கழக 3ஆம் வருட மாணவி) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11.03.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சாளம்பன் குளம், மல்லாவி.

தகவல் : குடும்பத்தினர்.

(சி/ 19839)(5.3.7)

2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் மகனாக 26 03 1956

மனதில் நினைவாக 02 03 2013

திதி : அபரபக்க பஞ்சமி (10.03.2015)

அமரர் செல்லத்துரை செல்வநாதன்

வாழவைத்து வாழ்த்திவைத்து வறுமைதனை நீக்கிவைத்து
வானுயர (எம்) குடும்பங்களைக் கோபுரமாய் உயரவைத்து
ஆள ஒரு அரசனில்லா அவலத்தைத் தந்துவிட்டு
ஐயா! நீங்கள் மறைந்து ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ
தோள் கொடுத்த தூண் சரிந்து துயர் சூழ்ந்த எங்களுக்கு
மாளாத துன்பங்கள் மனங்களிலே நிறைந்தாலும் - உங்கள்
மறுவாழ்வு சாந்தி பெற மனதார இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!!! சாந்தி!!!

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

(சி/19839)(5.3.7)

## மகளிர் தின விழா

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையின் ஏற்பாட்டில் கைதடி பிரதேச மகளிர் அமைப்புகளின் மகளிர் தின விழா நேற்றுமுன்தினம் கைதடி முத்துக் குமாரசுவாமி மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளைமுகாமையாளர் செல்வி சு.குமாரசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கல்விப் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தனேஸ்வரி இரவீந்திரனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகர சபை கணக்காளர் திருமதி மீரா சத்தியரூபனும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில்கலந்துகொண்டவர்களுக்கு அன்பளிப்புப் பொருள்களும் வித்தியாலயத்தில் கற்கும் 10 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் இலங்கை வங்கிக் கிளையால் வழங்கப்பட்டன. (வ–9)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச்10

நீர்வேலி சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் தி.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கலந்துகொள்வார். (வ)

## பரிசளிப்பு விழா

மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இலோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையின் அதிபர் திருமதி பு.பஞ்சாட்சரம் கலந்து கொள்வார். (வ–14)

# புனரமைப்புக் காணாத நீர்வேலி-கரந்தன் வீதி



யாழ்ப்பாணம், மார்ச் 10

நீர்வேலி–கரந்தன் பிரதான வீதி கடந்த பல வருடங்காக புனரமைக்கப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

கரந்தன் சந்தியில் இருந்து ஊரெழு வரைக்குமான குறித்த பிரதான வீதி படுமோசமாக சேதப்பட்டு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

விவசாயிகள், பொதுமக்கள் , பாடசாலை மாணவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் அந்த வீதி[illegible] பயன்படுத்தி வருகின்றனர்.

குறித்த பிரதான வீதியை புனரமைப்பதற்கு யாரும் முன் வராதது குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது சிரமங்களை எதிர்நோக்கும் குறித்த வீதியை புனரமைப்பதற்கு சம்பந்தப் பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (வ–17)

# இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்

## மகளிர் தின விழாவில் மகளிர் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

வடக்கு,கிழக்கு,மலையகம் உட்பட நாட்டில் போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும் என்று மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தேசிய மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் நடைபெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எமது நாட்டில் அரசியலில் பெண்களின் தலைமைத்துவம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. நாடாளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளில் இந்த எண்ணிக்கை குறைவாகவே இருக்கின்றது. வடமாகாணத்தைப் பொறுத்த வரையில் பிரதி அமைச்சராக நான் இருக்கின்றேன். இதுபோல் யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயரும் பெண்ணாகவே இருந்தார். முன்னாள் அரச அதிபர் இமெல்டா சுகுமாரும் தற்போதைய கிளிநொச்சி அரச அதிபரும் பெண்களாகவே உள்ளனர். இவ்வாறு அரசியலிலும் முக்கிய துறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் இடம்பெற வேண்டும். இதற்கான திட்டமொன்றை நாம் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

இலங்கையில் 52 வீதமானோர் பெண்களாக உள்ளனர். இன்றைய தேசிய மகளிர் தினம் அநுராதபுரத்தில் பெண்களின் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி நடத்தப்படுவது பாராட்டத் தக்கது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் பெண்கள் [illegible] வேறு பிரச்சினைகளை அனுபவித்து வருகின்றனர். நாட்டில் விதவைகளாக்கப்பட்டுள்ள பெண்கள் தொடர்பிலும் கணவன்மாரால் கைவிடப் பட்டுள்ள பெண்கள் தொடர்பிலும் விசேட கவனங்களை செலுத்த வேண்டியுள்ளது. அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளோம். போரில் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்த வடக்கு, கிழக்கிலுள்ள பெண்கள் விடயத்தில் விசேட கவனம் செலுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது. மலையகத்திலும் பெண்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்கள் விடயத்திலும் கவனம் செலுத்தப்படும்–என்றார். (வ)

## அரச ஊழியர்களுக்கான சிங்கள மொழி பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

அரச ஊழியர்களுக்கான சிங்கள மொழி பயிற்சி வகுப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி வடக்கின் சகல மாவட்டங் களிலும் ஆரம்பிக்கப்படவுள் ளது. கலந்து கொள்ள விரும்பும் அரச ஊழியர் கள் குறித்த தினத்தில் பதிவுகளை மேற்கொள்ளு மாறு,முகாமைத்துவஅபிவிருத்திபயிற்சிஅலகின்பணிப்பாளர் பொ.வாகீசன் தெரிவித் துள்ளார்.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத் தின் அனுசர ணையுடன், வடக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவி ருத்தி பயிற்சி அலகு, அரச ஊழியர்களுக்கான சிங்கள மொழி மட்டம் III பயிற்சி வகுப்பை ஆரம்பிக்கவுள்ளது.

இதில் கலந்து கொள்ள விரும் பும் அரச உத்தி யோகத்தர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி, குறித்த நேரத்தில் தமக்கு வசதியான இடத்தினை தெரிவு செய்து அந்த இடத்துக்குச் சமுகமளிக்கவும். அன்றைய தினத்தில் மாத்திரமே பதிவுகளை மேற் கொள்ள முடியும். வகுப்பில் பங்குபற்றுநர்களின் ஆகக் கூடுதலான எண்ணிக்கை 40 பேர் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

மேலும் வகுப்புக்கள், யாழ். பிராந்திய உள்ளு ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மானிப் பாய் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை திருஇருதயக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம், வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் மன்னார் ஆங்கில துணை வள நிலையம் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட வுள்ளன. (வ–5)

# தமிழரின் மனங்களில் நீங்கா வடுக்களாக இருக்கும் ஆலய படுகொலை சம்பவங்கள்

**புண்ணியகிராம நிகழ்வில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவிப்பு**



மட்டக்களப்பு, மார்ச் 10

இலங்கையின் கடந்த கால அரசியல் வரலாறுகளைப் பார்க்கின்றபோது மனிதர்களை நல்வழிப்படுத்தக்கூடிய இடமாக இருக்கக்கூடிய ஆலயங்களில் தமிழ் மக்கள் வகை தொகையின்றி கொத்துக்கொத்தாக அழிக்கப்பட்ட கசப்பான சம்பவங்கள் நடந்தேறி இருக்கின்றன. அவை இன்றும் தமிழ் மக்களின் மனங்களில் நீங்கா வடுக்களாகவே உள்ளன என்று தெரிவித்தார் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன்.

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட நாவிதன்வெளி, 2இல் புண்ணிய கிராம நிகழ்வு, திருமுருகன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் பிரதேச செயலாளர் கரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது:

இந்த நாட்டிலே மதம் சார்ந்த வணக்கஸ்தலங்கள் மதிக்கப்பட வேண்டியவையாக இருந்தபோதிலும், அதனைக் கருத்தில் எடுக்காது, அந்த இடங்கள் புனிதமானது என்று கருதாமல், அந்த ஆலயங்களிலிலே தமிழ் மக்கள் வகை தொகையின்றி கொல்லப்பட்ட சம்பவங்கள் இன்றும் எமது மனங்களில் நீங்காத வடுக்களாகவே இருந்து வருகின்றன.

இந்து மதமானது, தொன்மையும் பழமையும் வாய்ந்த ஒரு மதமாகும். அவ்வாறான மதத்திலிருந்து இன்று மக்கள் வறுமை காரணமாக, மதம் விட்டு மதம் தாவும் நிகழ்வுகள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. இதற்குக்காரணம் எமது மதத்தில் மதம் சார்ந்த போதனைகள் மக்களிடத்தே சென்றடைவது அரிதாகவே காணப்படுகின்றது. அவ்வாறு மதம் மாறுபவர்களை அணுகி அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு வறுமையான குடும்பங்களைப் பற்றியோ, கல்வி கற்கும் மாணவர்களைப்பற்றியோ சிந்திப்பதற்கும் அவர்களது வறுமையைப் போக்குவதற்கும் எவரும் முன்வருவதுமில்லை. அவர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல்களை உரிய நேரத்தில் வழங்குவதுமில்லை.

தங்களுடைய மதத்தில் இருந்து வேற்று மதத்திற்கு மாறுகின்றவர்களை எமது அரசியல்வாதிகளும், மதபோதகர்களும் கண்டுகொள்வதில்லை. இதன் காரணமாக மேலும் மேலும் மதம் மாறும் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன.

காலத்தால் முற்பட்ட இந்து மதத்தின் தொன்மையைப் பறைசாற்ற, நாயன்மார்கள் தேவாரப்பதிகங்களைப் பாடி இந்து மதப் பின்னணியை வெளி உலகத்துக்குக் காட்டியிருக்கின்றார்கள். குறிப்பாக இலங்கையில் திருகோணமலை, திருக்கேதீச்சரம் போன்ற ஆலயங்கள் நாயன்மார்களால் பாடல்பெற்ற தலங்களாக மிளிர்ந்தமையும் குறிப் பிடத்தக்கது.

இன்று நடைபெறும் புண்ணிய கிராம நிகழ்வானது இன்று மாத்திரமல்லாது சங்ககாலம் தொட்டே மன்னர்களாலும், மக்களாலும் கொண்டாடப்பட்டு வந்த ஒரு தொன்மை வாய்ந்த நிகழ்வாகும். இன்று மேற்குலகில் வாழும் எமது தமிழ் மக்கள்கூட எமது சமயத்தை வளர்ப்பதிலும், தங்களது கலை, கலாசாரங்களை பேணிப்பாதுகாப்பதிலும் குறியாக இருந்து செயற்பட்டு வருகின்றமை போற்றப்பட வேண்டியதொரு விடயமாகும்.

எனவே எதிர்காலத்தில் எமது மதம் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதற்கு இந்துக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது மதத்தின் மீது கண்ணும் கருத்துமாக இருந்து செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்"-என்றார். (வ)

# மட்டக்களப்பில் நடைபெற்ற மதுபான விழிப்புணர்வு



மட்டக்களப்பு, மார்ச் 10

மதுபானப் பாவனையில் மட்டக்களப்பு மாவட்டம் முன்னிலை வகிப்பதாக வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மதுபானப் பாவனையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் ஊர்வலமும் வீதி நாடகமும் மட்டக்களப்பு நகரில் நேற்று நடைபெற்றன.

பிரிட்டிஷ் கவுன்சிலின் 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுக்காக மாணவர்களை இணைக்கும் திட்டத்தின் ஒரு கட்டமாக மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மாணவர்களால் ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

கல்லூரியிலிருந்து ஆரம்பமான ஊர்வலம், மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது. இந்த ஊர்வலத்தின்போது அரசடிச்சந்தி, நகர மணிக்கூட்டுக் கோபுரச் சந்தி, பஸ் நிலையம் என்பவற்றில் மதுபானப் பாவனையால் ஏற்படும் தீமைகள் பற்றிய விழிப்புணர்வூட்டும் வீதி நாடகங்களும் நடைபெற்றன. (வ)

# பெண்கள் விளம்பரப் பொருளாக பயன்படுத்தப்படுவதை ஏற்கமுடியாது

மகளிர்தின நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலாளர் தெரிவிப்பு



மட்டக்களப்பு, மார்ச் 10

பெண்கள் விளம்பரப் பொருளாகப் பயன்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. பெண்கள் இன்று விளம்பரங்களுக்காகவே பயன்படுத்தப்படுகின்றனர் என்று காத்தான்குடி பிரதேச செயலாளர் எஸ்.எச். முசம்மில் தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி காத்தான்குடி பிரதேச செயலக சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு, திவிநெகும திணைக்களத்தின் காத்தான்குடி சமூக அபிவிருத்திப்பிரிவு, பிரதேச கலாசார மத்திய நிலையம் என்பன இணைந்து காத்தான் குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றியபோது:

"தனிமனித சுதந்திரம் பேணப் படவேண்டும் என்று ஐரோப்பாவில் கூறுகின்றனர். இதற்கு ஒரு வரையறை அவர்களிடம் கிடையாது.

ஆணும் ஆணும் திருமணம் செய்தல், பெண்ணும் பெண்ணும் திருமணம் செய்தல் என்பன தனிமனித சுதந்திரம் எனக் கூறுகின்றனர். இதனால் பெரியளவில் சமூக சீரழிவுகளை அந்த நாடுகள் எதிர் நோக்குகின்றன.

இஸ்லாத்தில் பெண்களுக்கு எதிரான அடக்குமுறை, ஆணாதிக்கம் உள்ளதாக ஐரோப்பிய நாடுகள் தெரிவிக்கின்றன. ஆனால், இஸ்லாம் அவ்வாறு கூறவில்லை.

பெண்களின் உரிமை பற்றி இஸ்லாம் மிகத்தெளிவாக கூறியுள்ளது. அரசியல்துறை, நீதித்துறை, சமூகவியல் போன்ற துறைகளில் இஸ்லாமியப் பெண்களின் ஆர்வம் இன்று அதிகரித்துவருகின்றது" - என்றார். (வ)

# நிறுவை, அளவை கருவிகளுக்கு முத்திரையிடும் பணி ஆரம்பம்

தென்மராட்சி, மார்ச் 10

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உட்பட வர்த்தக, வியாபார நிலையங்களில் நிறுவை, அளவை உபகரணங்களுக்கு இவ்வருடத்துக்கான முத்திரையிடும் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

நேற்றையதினம் முத்திரை இடப்படுவதற்காக பெரும் எண் ணிக்கையிலான நிறுவை, அளவை உபகரணங்கள் கொண்டு வரப்பட்டன. அவற்றுக்கு முத்திரையிடும் பணிகளை யாழ்அளவை நிறுவை திணைக்கள உத்தியோகத்தர்கள், மேற்



கொண்டனர். நேற்று ஆரம்பமான உபகரணங்களுக்கு முத்திரையிடும்பணிகள் (நாளைபுதன்கிழமை தவிர்ந்த ஏனைய நான்கு நாள்கள்) வெள்ளிக்கிழமை வரை இடம் பெறும்என்றுதெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஸ்ரீகரலட்சுமி குலசேகரம்



காரைநகர், மல்லிகையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீகரலட்சுமி குலசேகரம் 07.03.2015 சனிக்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - குலசேகரத்தின் அன்பு மனைவியும், மல்லிகை நவரத்தினம் (மாஸ்டர்) - தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான S.M.கேணியடி வேலுப்பிள்ளை (சட்டம்பியார்) செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், சுகிர்தராசா, சற்குணராசா, விமலராசா, ஸ்ரீகுலராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தமலர், திலான், ஜீவா, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், விஷ்வா, சுவேதா, யஷ்வினி, கிஷாயினி ஆகியோரின் அருமை அப்பம்மாவும், பாக்கியராசா, தர்மராசா (M.G.R), அரிகரராசா, காலஞ்சென்ற சாரதா மற்றும் லலிதா, கோகனதை, நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம், கந்தையா, பாலசுந்தரம் மற்றும் நாகபூஷணி, சுந்தராம்பாள், கனகசுந்தரம், நடராசா, பாலசுப்பிரமணியம், சிவமலர் ஆகியோரின் மைத்துனியும், சவுந்தரம், அன்னபாக்கியம், தெய்வநாயகி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.03.2015) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

S.M.கேணியடி, காரைநகர்,
பாக்கியராசா- 077 060 1817, தர்மராசா-077 603 3259
நிர்மலாதேவி-077 690 8202
102 5/1, மனில் பிளேஸ், வெள்ளவத்தை.

தகவல்:
சகோதரர்கள்.

(57658)(4.3.7)

### திருமதி அமலோற்பவம் றோமபாலா



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் இல 129, ஸ்ரேஷன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமலோற்பவம் றோமபாலா 09.03.2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி யோன்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி பஸ்ரியன் தம்பதியினரின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற றோமபாலாவின் பாசமிகு மனைவியும், வைத்திய கலாநிதி திருமதி. றோஸ் (இரெட்ணம் வைத்திய சாலை), பிரான்சிஸ் (லண்டன்), திருமதி ரிலியட் வெலிஷியா (விஜி - லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், வைத்திய கலாநிதி இராஜரெட்ணம், திருமதி.பிரான்சிஸ்கா (லண்டன்), லெனின் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு திருமதி றஜனிகாந் - அனோஜா, திரு. திருமதி தர்ஷனோதயன் -றஜீபா, திரு. திருமதி றெஜீவன் - றஜனியா, ஏர்லின், ஜோசுவா, பெனிற்றோ, பிளஸ்ஸி ஆகியோரின் பேர்த்தியும் அகிஷனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இரங்கல்திருப்பலி இன்று (10.03.2015) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புனித அடைக்கல நாயகி அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 129, ஸ்ரேசன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல. 021 222 2726

(57657)(5.3.7)

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சின்னர் நல்லதம்பி



கரணவாய் மேற்கு, சிவரியோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் நல்லதம்பி 08.03.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.03.2015) திங்கட்கிழமை நடைபெற்றன என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

சிவரியோடை,
கரணவாய் மேற்கு, கரணவாய். (c 19840)(5.3.7)

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை பொன்னம்பலம்



சங்கத்தார்வயல், இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னம்பலம் 07.03.2015 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும் சிவமலரின் அன்புக் கணவரும் பாமினி, ஜெனிற்றா (ஜெனா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வினோபனின் (லண்டன்) மாமனாரும் தாமினனின் (லண்டன்) அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம், பரிமளம் மற்றும் தெய்வானை, மங்கயர்க்கரசி , கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான செல்லையா, குமார், வீரசிங்கம் மற்றும் சிவப்பிரகாசம், பரமேஸ்வரி, செல்வராசா (டென்மார்க்), தவமணி, யோகநாதன், நவரட்ணம், மகேஸ்வரி (டென்மார்க்), காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் சந்திராதேவி (லண்டன்), இந்திரா (லண்டன்), மல்லிகாதேவி(லண்டன்), வசந்தி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், உதயா, முரளிதரன், சிறிதரன், ஜெயதரன், காலஞ்சென்ற யசோதரன் ஆகியோரின் சிறிய தந்தையும் சின்னத்துரை, சிவலிங்கம், ஞானேஸ்வரன், கனகசுந்தரம், மோகனராஜன் ஆகியோரின் சகலனும் ரமணிஸ்வரி, தயாளினி, நவமணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2015) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் ஆலக்கட்டு பள்ளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மனைவி மக்கள்
சங்கத்தார் வயல்,
இயக்கச்சி , பளை
தொ.பே.இல :
077 900 9477, 077 054 2721

மகள், மருமகன், வினோபன்
(லண்டன்)
00441603920463
00447448680414
செல்வராசா
(மைத்துனர்/ டென்மார்க்)
004532153591 (57623)(5.3.7)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

மாவிட்டபுரம் தெற்கு, கம்பன்சீமா ஞான வைரவர் ஆலயத்தில் 1008 சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் பூசைகள் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு மஹா அபிஷேகம் இடம்பெற்று முற் பகல் 11 மணிக்கு கும்பங்கள் புறப்பாடும் தொடர்ந்து சங்காபிஷேகமும் இடம்பெறும்.

பூசைகள் அனைத்தும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய ஆதீனப்பேரரசு ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (வ)

## முன்பள்ளி ஆசிரியர் சங்கம் உருவாக்கம்

முள்ளியவளை, மார்ச் 10

முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களில் உள்ள 6 பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் இணைந்து சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இதில் தமிழ். சிங்கள, முஸ்லிம் முன்பள்ளி ஆசிரி யர்கள் அடங்கலாக அமைக் கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகவும் மருத்துவமனைகளில் தொண்டர்களாகவும் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் பட்டுள்ள நிலையில் பல ஆண்டு களாக குறைந்த வேதனத்தடன் முன்பள்ளிகளில் ஆசிரியர்களாக கடமையாற்றும் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறுமுல்லைத்தீவு முன்பள்ளி ஆசிரியர்கள் சங்கம் புதிய அரசைக் கோரவுள்ளது. முல்லைதீவு மாவட்டத்தில் 464 ஆசிரியர்கள் உள்ளார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாறான அமைப்பை வடமாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுத்து இதற்கான போராட்டம் நடத்தப் போவதாகவும் தெரிவிக்கின்றனர். (வ-433)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கந்தசாமி



அம்மன் கோயில் றோட், வேலம்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி 08.03.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதியரின் இளையமகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-அம்மாக்குட்டி தம்பதியினரின் மருமகனும், நேசமணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், இராசா, நாகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற சந்திராதேவி மற்றும் ரஞ்சிதமலர், குகதாசா (அபுதாபி), ஜீவானந்தன் (லண்டன்), கவிதா, பார்த்தீபன் (பிரான்ஸ்), ருசித்தா, காண்டீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நகுலேஸ்வரன் (ஈசன் போட்டோ- மல் லாகம்), கோமதி, விஜிதா (லண்டன்), ராஜ்குமார் (அபுதாபி), ஐங்கரன் (அபுதாபி), தீபிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, கந்தசாமி மற்றும் இராசமணி, காலஞ்சென்ற சச்சிதானந்தன், சிவஞானம் (லண்டன்), திருச்செல்வம் (ஜேர்மனி), வசந்தாதேவி, வீசி (பிரான்ஸ்), ராசாத்தியம்மா, கௌரி (ஜேர்மனி), அருமைநாயகம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், தேனுஜன் (ஆசிரியர் கலாசாலை மட்டக்களப்பு), சிகானுஜன், கனுஜன், ஸ்ரீவிஷ்ணுகா, கபிலஜன், சரண்ராஜ் (அபுதாபி), ரஜீனா, ஐஸ்வரியா, சாகீர்த்தனன், கோவர்த்தனன், ஸ்ரீவர்யா, மதுநிதா, பிரநிதிகிருசாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன் கோயில் றோட்,
தச்சந்தோப்பு, வேலம்பிராய். (57656)(4.3.7)

தகவல்: குடும்பத்தினர்.
077 654 3875

## நிர்வாகிகள் தெரிவு

கைதடி, மார்ச் 10

கைதடி வடக்கு நவ சனசமூக நிலையத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நிலைய மண்டத்தில் நடை பெற்றது.

இந்த ஆண்டுக்கான சனசமூக நிலையத்தின் புதிய தலைவராக மு.கயோதரனும், செயலாளராக பே.அனோஜனும், பொருளாளராக செ.இரவீந் திரனும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 11 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (வ-288)

# மரண அறிவித்தல்



## இளையதம்பி பாலசுப்பிரமணியம்

பிறப்பு : 02.05.1948 இறப்பு : 06.03.2015

யாழ்.சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பாலசுப்பிரமணியம் 06.03.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி மற்றும் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தர்மரட்டினம்- நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுரேஸ்குமார், துஷ்யந்தினி, துஜித்தா மற்றும் துஜ்யந்தன் (ஜேர்மனி), கஜன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பராசக்தியின் (கனடா) அன்புச் சகோதரரும், உதயகுமார் (இலங்கை), ஹம்சபூசணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தேனுகா, தீபனா, சலா, பிரபா, தீபன், துஷாலினி, துசாளன், துளக்சினி, யாழினி, ஜசிந்தன், ஜேம்ஸ் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ராஜகோபால் (கனடா), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சாரதாதேவி (இலங்கை), சர்வானந்ததேவி (இலங்கை), சுசிலாதேவி (லண்டன்), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), ஜெயதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தெய்வேந்திரம், நாகேந்திரம், சிவபாலசிங்கம், செல்வரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகலனும், சந்திரீகா, ராஜன், ராதிகா, ஜீவன், கஸ்தூரி, கஸ்தூரன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான முகிலன், கபிலன் மற்றும் சுரபி (ஜேர்மனி), சுருதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2015) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி.

தொடர்பு: கஜன்
செல்லிடப்பேசி: +94771115360, 077 473 0722

தகவல்:
குடும்பத்தினர்.

(57661)(4.3.7)

# டேட்டிங் அப்பிளிக்கேஷன் பயன்படுத்துபவரா நீங்கள்?

மொபைல் போன்களிலேயே சட்டிங், டேட்டிங் என்பவற்றை மேற்கொள்வதற்கான பல்வேறு அப்பிளிக்கேஷன்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் டேட்டிங்குக்காக பயன்படுத்தப்படும் அப்பிளிக்கேஷன்கள் பயனர்களின் இருப்பிடங்கள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தக்கூடியவை என அதிர்ச்சி தகவல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஒருமுறை தகவல்களை பெற்றுக்கொண்டால் தொடர்ந்து குறித்த நபரின் நகர்வுகளை கண்காணிக்க முடியும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.




## பல மில்லியன் பெறுமதியான (iPhone 6) ஐ போன் 6 திருட்டு

சீனாவில் சுமார் 225,000 டொலர்கள் பெறுமதியான **iPhone** 6 ஸ்மார்ட் கைபேசிகள் திருட்டு போயுள்ளன. ஏற்றுமதி செய்வதற்காக அப்பிள் ஸ்டோரில் வைக்கப்பட்டிருந்த கைபேசிகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. சீனாவின் தலைநகரான பீஜிங்கில் அமைந்திருக்கும் குறித்த அப்பிள் ஸ்டோரில் மூன்று பேர் அடங்கிய குழு ஒன்று சுமார் 50 சென்ரி மீற்றர் விட்டம் கொண்டு துளையை ஏற்படுத்தி உள் நுழைந்து கைபேசிகளைக் களவாடியுள்ளது.

குறித்த திருடர்கள் வலைவீசி தேடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 17 . 08 . 1948



இறப்பு 20 . 02 . 2014

திதி: பஞ்சமி

**அமரர் செல்லத்துரை அழகராசா**

ஓராண்டு ஆனதுவோ உங்கள் முகம் கண்டு ஆறவில்லை
நம் இதயம் அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

சண்டிலிப்பாய் வீதி, சண்டிலிப்பாய்.

உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்


# பதிவுக்கு முந்துங்கள்!

செவ்வாய்
புதன்
ஞாயிறு
தினங்களில்

மீண்டும்
# கல்விச்சுடர்

தரம் 5 மாதிரி வினாத்தாள்

(கல்வித்துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டவை. முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கியவை.)

கேள்வித் தாளில் வரும் முத்திரையை சேகரிக்கத் தவறாதீர்கள். தவறினால் வருந்துவீர்கள்.....!

விவரங்களுக்கு காத்திருங்கள்.

உதயன்



இந்தியாவின் பல மாநிலங்களிலும் ஹோலி பண்டிகை நேற்று முன்தினம் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது. (14)

# தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

டில்லி,மார்ச் 10

இந்தியாவுடனான பொருளாதார உறவை வலுப்படுத்தும் விதமாக, தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து, ஐரோப்பிய ஒன்றிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாவது:-

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சு மீண்டும் தொடங்கினால், தகவல் தொழில் நுட்பத் துறைக்கான தக வல் பாதுகாப்பு, அறிவுசார் சொத்துரிமைகள், நடமாடும் சேவைத் துறைக் கட்டணங்கள் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க இந்திய வர்த்தகத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் பேசி வருகின்றனர். இது தொடர்பான கடைசிக் கட்டப் பேச்சு 2013ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது.

அத்துடன் இரு தரப்புகளுக்கும் சாதகமான வகையில், அனைத்து முக்கிய பிரச்சினைகளிலும் இணக்கமாகச் செயல்பட ஐரோப்பிய ஒன்றியம் தயாராகவுள்ளது.

நடமாடும் சேவைத் துறை உட்;பட நிலுவையில் உள்ள அனைத்து பிரச்சினைகளையும் மறுபரிசீலனை செய்யத் தயாராக இருக்கின்றோம். மீண்டும் பேச்சு தொடங்குவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தி வருகின்றோம். தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சு வேகமாக நடைபெற பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்த வருடத்துக்குள் அர்த்தமுள்ள வகையில், தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்யப்படுவது, பொருளாதார உறவை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையாக அமையும்.

கட்டணக் குறைப்பு மட்டுமல்லாமல், சந்தைப் பொருளாதாரம், முதலீட்டுப் பாதுகாப்பு, தொழிலாளர் சட்டம், பருவநிலை மாற்றங்கள் தொடர்பான விடயங்களும் இந்த ஒப்பந்தத்தில் இடம்பெறும்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தவிர, காப்பீடு, வங்கியியல், சில்லறை வர்த்தகம் ஆகிய துறைகளிலும் உடன்படிக்கை மேற்கொள்ள ஒன்றியம் விரும்புகிறது என்று ஐரோப்பிய ஒன்றிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, சேவைத் துறை மற்றும் மருத்துவத்துறையில் சந்தைப்படுத்துதலையும், இந்திய நிபுணர்களின் விசா முறைகளும் தளர்த்தப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. (14)

## சவுதி அரேபியா முதலிடம்

ரியாத்,மார்ச் 10

உலகளவில் ஆயுத இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் சவுதி அரேபியா முதல் இடத்தில் உள்ளதாக நாடுகளின் பாதுகாப்புச் செலவினங்கள் தொடர்பான உலகளாவிய புதிய அறிக்கை ஒன்று கூறியுள்ளது.

இதுவரை முதல் இடத்தில் இருந்து வந்த இந்தியாவைப் பின்னுக்குத் தள்ளி சவுதி அரேபியா முதல் இடத்தைப் பிடித்துள்ளது. முன்னர் ஐந்தாவது இடத்தில் இருந்த சீனா இப்போது மூன்றாவது இடத்துக்கு வந்துள்ளதாக ஐஎச்எஸ் என்ற அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்குகின்ற சந்தைப் புலனாய்வு நிறுவனம் கூறுகின்றது.

மத்திய கிழக்கிலும், ஆசிய பசிபிக் பிராந்தியத்திலும் மோதல்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும் வளர்ந்துவரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளின் இராணுவ விமானங்களுக்கான தேவை அதிகரித்துள்ளதாலுமே இந்த வியாபார அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது. (14)

# பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்போம்

பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு

டில்லி,மார்ச் 10

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்கு அனைவரும் கைகோர்த்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- பெண்களுடைய அசாதாரணமானமனவலிமைக்கும், அவர்களுடைய நிகரற்ற சாதனைகளுக்கும் நாம் தலை வணங்குவோம்.

அவர்களுக்கு சமத்துவத்தை வழங்குதல், வளர்ச்சிப் பாதையில் அவர்களையும் இணைத்துக் கொள்ளுதல் என எம்முடைய உறுதிமொழிகளை பெண்கள் தினத்தில் நாம் புதுப்பித்துக் கொள்வோம். பெண்களுக்கு எதிரான கொடுமைகள் எமது காதுகளில் விழும்போது, அவமானத்தால் எமது தலைகள் தொங்கிப் போகின்றன. இந்தக் கொடுமைகளை, அவர்களுக்கு எதிராக நாட்டில் நடக்கக்கூடிய அநீதிகளை முடிவு கட்டுவதற்காக, நாம் தோளோடு தோள் சேர்ந்து போராடுவோம்.



பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சட்ட உதவி, உளவள ஆலோசனை உள்ளிட்டவைகளை வழங்க அரசு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. அதேபோன்று, பெண்களை வலிமைப்படுத்தும் பல்வேறு திட்டங்கள் மத்திய அரசால் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## அமெரிக்காவில் இளைஞர் சுட்டுக் கொலை

மக்கள் போராட்டம்



வொஷிங்டன்,மார்ச் 10

அமெரிக்காவில் மீண்டும் கறுப்பின இன இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டதால் பொதுமக்கள் கொந்தளித்து பெரும்போராட்டத்தில் இறங்கியுள்ளனர். அமெரிக்காவில் கறுப்பின இளைஞர்கள் அந்த நாட்டுப் பொலிஸாரால் தொடர்ந்து சுட்டுக்கொல்லப்பட்டு வருகின்றனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு எதிராக கறுப்பின மக்கள் போராட்டம் நடத்தி வருகின்ற போதிலும் இந்த அடக்குமுறை ஓய்ந்த பாடில்லை.

இந்த நிலையில் டோனி றொபின்சன் என்ற 19 வயது கறுப்பின இளைஞர் நேற்றுமுன்தினம் . பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். அமெரிக்காவின் விஸ்கான்சின் மாநிலத் தலைநகரான மேடிசனில் மக்கள் பெருமளவில் திரண்டு பெலிசாருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வருடம் பெர்குஷனில் கறுப்பின இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டதால்அமெரிக்கா முழுவதும் பெரும் போராட்டம் வெடித்தமை குறிப்பிடத்தக்கது. (14)

## மடோனாவைப் போல மாறியுள்ள ரசிகர்



லண்டன்,மார்ச் 10

அமெரிக்காவின் பிரபல பொப்பிசைக் பாடகி மடோனாவின் பாட்டுக்களை அனைவரும் விரும்புவர். அவர் செல்லும் இடங்களில், அவரது பாட்டுடன் உடையலங்காரத்தையும் உடல் அழகையும் ஏராளமான ரசிகர்கள் கண்டு ரசிப்பார்கள்.

ஆனால், இவற்றையெல்லாம் மீறி, இங்கிலாந்து ரசிகர் ஒருவர் ரூ.48 லட்சம் செலவில் தனது உடல் உறுப்புகளை மாற்றி இங்கிலாந்தின் மடோனாவாகவே மாறிவிட்டார். இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்கு அருகே வசிப்பவர் ஆதம் டேனியல் (வயது-31). இவர் 15ஆவது வயதிலிருந்தே அமெரிக்காவின் பிரபல பொப்பிசைப் பாடகி மடோனாவின் தீவிர ரசிகராகிவிட்டார், பின்னர், இங்கிலாந்தில் உள்ள வீனஸ் டிலைட் என்ற நாடக குழுவில் கடந்த 12 ஆண்டுகளாக இணைந்து பணியாற்றினார்.

ஆரம்பத்தில் மடோனாவின் பாடல்கள் மீது வெறியராக இருந்த ஆதம் டேனியல், பின்னர் அவரது முகவெட்டு மற்றும் உடையலங்காரம் உள்ளிட்டவற்றை உன்னிப்பாகக் கவனித்து, அதைப் போலவே தாமும் மாறத் திட்டமிட்டார்.

இது குறித்து தனது தாய் அன்னிட்டி குவெரா மற்றும் குடும்பத்தினரிடம் கூறினார். உன்னுடைய வாழ்க்கையில் வேலைகள் வரும், போகும். உன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள இது சரியான தருணம் என்று தாய் அன்னிட்டி கூறவே, ரூ.48 லட்சம் செலவில் மடோனாவை போல் கன்னங்கள், தாடை மற்றும் கண் புருவம் உள்ளிட்ட பல்வேறு பாகங்களை ஆதம் டேனியல் அறுவை சிகிச்சைகள் மூலம் மாற்றிக் கொண்டார்.

பின்னர், மடோனாவைப் போல் முழுவதுமாக மாறிய ஆதம் டேனியல், கடந்த 2 நாள்களுக்கு முன்னர் லண்டனில் மடோனாவைப் போன்று உடையணிந்து, அவரது நடை, உடை பாவனையிலேயே பத்திரிகையாளர்கள் முன் தோன்றினார். பின்னர் செய்தியாளர்களிடம், என்னைப் போல் யாராலும் செய்ய முடியாது என்பதை உறுதியாகக்கூறுவேன். எனது அன்பை பற்றி மடோனா நன்கு புரிந்து கொள்வார் என்பதை உறுதியாக நம்புகிறேன் என்று டேனியல் பெருமையுடன் கூறினார். (14)

## தொடரும் இந்திய- சீனா எல்லைப் பிரச்சினை

பீஜிங்,மார்ச் 10

இந்தியா – சீனா இடையே எல்லைப் பிரச்னை தொடர்கிறது. இதற்கு தீர்வு காண, இரு நாடுகளுக்கும் இடையே உறவைப் பலப்படுத்த வேண்டியது அவசியம் என்று சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்யி குறிப்பிட் டுள்ளார்.

சீன ஜனாதிபதி ஜின்பிங் கடந்த செப்டெம்பர் மாதம் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் சென்றார். அதனைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்த வருட இறுதியில் சீனா வரவுள்ளார். அவரது வருகையை சீனா ஆவலுடன் எதிர்பார்க்கிறது. சீனா, இந்தியா இடையேயான எல்லைப் பிரச்சினை நீண்ட காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை தீர்க்க பல வருடங்களாக முயற்சி மேற்கொண்டு வருகின்றோம். இதில் தற்போது சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆனாலும், எல்லைப் பிரச்சினை என்பது மலையேற்றத்தைப் போல கடினமானது. இன்னமும் நிறையத் தூரம் செல்ல வேண்டியுள்ளது. இதைத் தீர்க்க சீனா– இந்தியா இடையே உறவைப் பலப்படுத்த வேண்டியது அவசியம். அதற்கான முயற்சிகளை சீனா மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு வாங்யி தெரிவித்துள் ளார்.

எதிர்வரும் மே மாதம் பிரதமர் நரேந்திர மோடி சீனாவுக்குப் பயணம் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்போது மோடி, சீன ஜனாதிபதி ஜின்பிங் இடையேயான பேச்சுவார்த்தையில் எல்லைப் பிரச்சினை விடயம் முக்கிய பங்கு வகிக்கும் என கூறப்படுகிறது. (14)



இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளைச் சுற்றி வர சோலார் விமானம் அபுதாபியிலிருந்து நேற்று புறப்பட்டுள்ளது. (14)

## புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் நாய்

வொஷிங்டன்,மார்ச் 10

கழுத்துப் பகுதியில் தைரோய்ட் சுரப்பியில் புற்று நோய் பாதிப்புள்ளதா என்பதை மோப்ப சக்தியால் கண்டுபிடிக்கும் நாய் குறித்த ஆய்வுத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் ஆர்கன்ஸா மருத்துவப் பல்கலைக்கழகத்தின் புற்றுநோய் பிரிவுத் தலைவர் டானல்ட் போடென்னர் இது குறித்து தெரிவித்ததாவது:



தற்போது தைரோய்ட் புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் முறைகள் உறுதியான தகவல்களைத் தருவதில்லை. பல முறை பரிசோதனைகள் நடத்தி, பல முறை சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை உள்ளது. நாய்க்கு இருக்கும் மோப்ப சக்தியைக் கொண்டு தைராய்ட், புற்றுநோய் இருப்பதை உறுதி செய்ய முடியும் என ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், நோய்க்கான பரிசோதனைக்காக முதல் முறையாக மருத்துவப் பல்கலைக்கழக மருத்துவமனைக்கு வந்த 34 நோயாளிகளின் சிறுநீர் மாதிரிகளை நாய் முகர்ந்து பார்த்தது. அவர்களின் சிறுநீர் மாதிரிகள் அந்த நாயிடம் அளிக்கப்பட்டன. அவர்களின் மாதிரிகளை முகர்ந்த பின்னர், அந்த நபர்களின் நோய் நிலவரத்தை பிராங்க்கி என்ற நாய் குறிப்பிட்டுக் காட்டியது. நாயின் இந்த மோப்பத் திறனை எவ்வாறு மருத்துவ இயலில் முறையாகப் பயன்படுத்திக்கொள்வதென மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ள தென்றும் டானல்ட் போடென்னர் கூறியுள்ளார். (14)

# மனிதக் குண்டுகள் வெடித்தன நைஜீரியாவில்

## 54 பேர் உடல் சிதைந்து சிதறிச் சாவு

அபுஜா,மார்ச் 10

நைஜீரியாவில் அடுத்தடுத்து இடம்பெற்ற மனித வெடிகுண்டுத் தாக்குதல்களால் 54 பேர் உடல் சிதைந்து உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. போமோ மாநிலத்தில் இந்தக் கொடூர சம்பவம் நடந்துள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று ஒரு ஆண் உட்பட 3 பெண்கள் இந்த மோசமான தாக்குதலை நடத்தியுள்ளனர். இதன் போது 54 பேர் உயிரிழந்ததுடன், சுமார் 139 பேர் பலத்த காயமடைந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



காயமடைந்தவர்கள் 3 மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடந்த பகுதியில் மக்கள் கூட்டம் நிறைந்த மீன் சந்தைக்கு வந்த ஒரு பெண், தான் தனது உடலோடு கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளார். தாக்குதல் நடந்த ஒரு மணி நேரத்துக்குப் பின்னர் சந்தையில் பொது மக்களை வரிசையில் நிற்க வைத்து பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர். அதன்போது அதே வரிசையில் வந்த இரண்டாவது பெண், தான் வைத்திருந்த வெடிகுண்டை இயக்கியதன் விளைவாக வரிசையில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் இறந்துள்ளனர்.

ஒரு சில நிமிடங்களுக்குப் பின்னர், அதே சந்தையில் ஆண்கள் வரிசையில் வந்துகொண்டு இருந்த மூன்றாவது பெண் வெடிகுண்டை வெடிக்க செய்து பெரும் உயிரிழப்பை ஏற்படுத்தினார். இதனிடையில், அங்குள்ள பஸ் தரிப்பிடத்துக்கு வந்த ஒரு ஆண் தான் வைத்திருந்த வெடிகுண்டை இயக்க, அங்கிருந்த பல பேர் உயிரிழந்தனர். ஒரே பகுதியில் அடுத்தடுத்து நிகழ்ந்த மனித வெடிகுண்டு தாக்குதல்களால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் மூழ்கினர்.

உயிரிழந்தவர்களது சடலங்களையும் மற்றும் காயமடைந்தவர்களையும் தன்னார்வ மீட்பு குழுவினர் அங்குள்ள வைத்தியசாலையில் சேர்த்தனர்.

மனித வெடி குண்டு தாக்குதலுக்கு எந்த தீவிரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்காத நிலையில், தீவிரவாத அமைப்புகளுக்கும் தாக்குதலுக்கும் தொடர்பு இருக்கிறதா எனப் பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். (14)

# தவறான தீர்ப்பால் 19 வருடங்கள் சிறை

வொஷிங்டன்,மார்ச் 10

அமெரிக்காவில் வழங்கப்பட்ட தவறான தீர்ப்பொன்றால் நபர் ஒருவர் 19 வருடங்கள் சிறைத் தண்டனை அனு பவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஒஹிஹோ மாகாணத்தில் உள்ள டோலிடோ நகரத்தை சேர்ந்தவர் டானி பிரவுன், கடந்த 1982 ஆம் ஆண்டு 3 குழந்தைகளுக்கு தாயான பாபி ரூசெல் என்ற பெண்ணுடன் பழகி வந்துள்ளார். அதே ஆண்டில் பாபி மர்ம நபர் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.



இது குறித்து பொலிஸார் நடத்திய விசாரணையில், பாபியின் 6 வயது மகன், டானி தான் கொலை செய்தார் எனச் சாட்சியம் அளித்துள்ளார். எனினும் டானியைக் கைது செய்து மரபணு சோதனையும் செய்யப்பட்டது. பரிசோதனையின் மாதிரிகள் கிடைத்த போது, டானி தான் பாபியை கொலை செய்தார் எனத் தெரிய வந்ததையடுத்து, அவருக்கு நீதிபதிகள் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தனர்.

இதன்பின்னர் டானி சிறைத் தண்டனையை அனுபவித்து வந்த நிலையில், அவருக்கு மீண்டும் மரபணுப் பரிசோதனை செய்யப்பட்டது. இந்தப் பரிசோதனையின் முடிவில், டானி மற்றும் பாபியின் மரபணுக்கள் ஒத்துப் போகவில்லை என்பதால், பாபியை பாலியல் வல்லுறவு செய்தது டானி இல்லை என உறுதியாகியுள்ளது. மேலும் பாபியிடமிருந்து சேகரிக்கப்பட்ட மரபணு வேறொருவனை அடையாளப்படுத்தியது மட்டுமின்றி, அந்த நபர் ஏற்கனவே ஒரு கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர் என்பதும் தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து டானியை பொய் பேசுவதை கண்டுபிடிக்கும் 'இயந்திர' பரிசோதனையில் உட்படுத்தியபோது, 'அவர் பொய் பேசவில்லை' என்பதும் நிரூபணமானதால் அவரை நீதிபதிகள் விடுதலை செய்துள்ளனர். ஆனால் தனக்கு தவறாகத் தீர்ப்புக் கூறியதற்கு ஒஹிஹோ நீதிமன்றம் மன்னிப்புக் கோர வேண்டும் என்றும், தான் சிறையில் அனுபவித்த துன்பத்துக்கு இழப்பீடாக 8 லட்சம் டொலர்கள் வழங்க வேண்டும் எனவும் தற்போது டானி வழக்குத் தொடுத்துள்ளார்.(14)

## பட்டினி போட்ட தாய்க்கு 15 வருட சிறைவாசம்

றொறன்ரோ,மார்ச் 10

கனடாவில் தனது இரட்டைக் குழந்தைகளைப் பட்டினி போட்ட தாய்க்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் தண்ட னைக்காலம் முடிந்தவுடன் நாடுகடத்தப்படவும் உள்ளார்.

கனடாவின் எட்மன்டன் பகுதியில் இரட்டைக் குழந்தைகளுடன் வசித்து வந்த தாயார் தனது குழந்தைகளுக்குச் சரியாக உணவளிக்காமல் பட்டினி போட்டதுடன், அவர்களை அடித்துத் துன்புறுத்தியும் உள்ளார்.



இதனால் குழந்தைகள் எழுந்து நிற்கவோ அல்லது நடக்கவோ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மேலும் அவர்களின் உடல் முழுவதும் காயங்கள் மற்றும் கீறல்கள் நிறைந்து காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பாக அந்தப் பெண்ணைக் கைது செய்த பொலிஸார், வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர் வழக்கை விசாரித்த நீதிபதி 15 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்ததுடன், தண்டனைக் காலம் முடிந்ததும் அவரது தாயகமான அல்ஜீரியாவிற்கு அவர் நாடு கடத்தப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார். தற்போது அந்த இரண்டு குழந்தைகள் உட்பட இவரது மற்றொரு குழந்தையும் பாதுகாவலரின் பராமரிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.(14)

## ஒட்டகத்தால் மனைவிக்கு விவாகரத்து

ரியாத்,மார்ச் 10

சவுதி அரேபியாவில் தன்னை விட ஒட்டகத்தின் மீது தனது மனைவி அதிக பாசம் கொண்டதால் மனைவியை விவாகரத்து செய்துள்ளார் கணவர்.

ரியாத்தின் மேற்கு பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மனைவியின் தந்தை வீட்டுக்கு இருவரும் சென்றிருந்த வேளை தந்தையால் வளர்க்கப்பட்ட அல் வலீ[illegible] என்ற ஒட்டகத்தை பார்த்தவுடன் மனைவி அளவு கடந்த அன்பை வெளிப்படுத்தினார். அதுமட்டுமின்றி, இந்த ஒட்டகம் தான் எனது அன்புக்குரியது, நான் விரும்பும் இதயம் இதுவே என்றும் தனது கணவனிடம் அந்தப் பெண் கூறியுள்ளார். பின்னர், அவர்களது வீட்டுக்குத் திரும்பும் போது, கணவர் அந்த ஒட்டத்தைப் பற்றிக் கேட்க, ஒட்டகத்தைப் பற்றி மனைவி மிகைப்படுத்திப் பேசியதால் கோபமடைந்த கணவர் அவளை விவாகரத்துச் செய்துள்ளார். (14)

# மணியந்தோட்ட

## கிராமத்தின் குறைபாடுகள் களையப்படுவது எப்போது?

**வடமாகாண முதல்வருக்கு ஓர் ஆதங்க மடல்**

வ.தர்மதாஸ்,
மணி யந்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

எமது மணியந்தோட்ட குடியேற்றக் கிராமமானது கடந்த 1975ஆம் ஆண்டு உருவானது. ஆரம்ப காலத்தில் யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் அடங்கிய இந்தக் கிராமம் பின்னர் நல்லூர்த் தொகுதிக்குள்



உள்வாங்கப்பட்டு அரியாலை தென் கிழக்கு கிராம அலுவலர் பிரிவாக மாற்றம் பெற்றது.

தற்போது இந்தக் கிராமம் நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குள் உட்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் இந்தக் கிராமத்தில் தற்போது 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன.

ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை இந்தக் கிராமத்தை அபிவிருத்தி செய்யும் வேலைகள் எதுவும் சரியான முறையில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப் படவில்லை. இந்தக் கிராமத்தில் 13 குறுக்கு வீதிகள் உள்ளன. இந்தக் குறுக்குவீதிகள் இத்தனை ஆண்டு காலமாகவும் புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. போரின் பின்னர் கிராமத்தின் பிரதான வீதிகள் இரண்டு எட்டாம் குறுக்குவீதிவரை அமைக்கப்பட்டு வேலைகள் இடை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. ஆனால் குறுக்கு வீதிகள் இதுவரை காலமும் புனரமைக்கப்படாத நிலையிலேயே உள்ளதால் கிராமத்தில் வாழும் மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

மணல் மற்றும் மண்ணுக்குள் நடந்து வந்தே பிரதான வீதியை அடைய வேண்டியுள்ளது. அவசர தேவைக்கோ அல்லது நோயாளிகள் கர்ப்பிணித் தாய்மாரை வீடு வரை வந்து வாகனத்தில் ஏற்றவோ முடியாமல் மிகவும் இன்னல்பட வேண்டியுள்ளது. நாம் பல தடவைகள் எமது கிராம சபைக்கும் பிரதேச செயலகத்துக்கும் தெரியப் படுத்தியும் அதிகாரிகள் எதனை

யும் கண்டுகொள்ளாமல் ஏனோ தானோ என்ற வகையில் செயற்படுகிறார்கள்.

மாரிகாலம் தொடங்கிவிட்டால் பல வீதிகளில் நான்கடிக்கு மேல் வெள்ளம் தேங்கிவிடும். மூன்று மாத காலத்துக்கு வெள்ளம் வற்றும் வரை உடையை இடுப்புவரை உயர்த்தியபடி நடமாட வேண்டியநிலை காணப்படுகின்றது. இதனைப் பற்றியும் பல தடவை அதிகாரிகளுக்கு அறிவித்தும் எந்த அதிகாரியும் நடவடிக்கை எடுப்பதில்லை.

இந்தக் கிராமத்தில் வாழும் மக்களின் ஆலோசனை பெறப்படாமல், நாங்களும் சேவை செய்கின்றோம் எனக் கூறி, பிரயோசனமற்ற முறையில் வடிகால்களை அமைத்து நிதியைச் செலவு செய்து ஓடுகின்ற வெள்ள நீரைத் தடைசெய்து மக்களுடைய வெறுப்பைச் சம்பாதித்துள்ளனர்.

கிராமத்தின் நிலத்தன்மையை அறிந்து அதற்கேற்ப வடிகால்களை அமைக்காமல் கடமைக்கு வேலை செய்து விட்டுச் சென்றுவிட்டனர். அவை இப்போது வெள்ளம் ஓடாத வடிகால்கள் எனப் பெயர் பெற்றுள்ளன. இந்தக் கிராமத்தில் வீட்டுத்திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைக் கட்டி முடிக்கப் பயன்படுத்தப்படும் பொருள்களை பிரதான வீதிகளில் பறித்து பின்னர் அவற்றை வேறு வாகனங்கள் மூலமாக ஏற்றிக் கொண்டுவரும்போது அவை மணலுக்குள் புதைவதால் ஆழமான கிடங்கு வெட்டி அவற்றைக்குறிப்பிட்ட இடத்துக்குகொண்டு வருவதற்குள் வாழ்க்கையே வெறுத்துவிடும்.

இவற்றையெல்லாம் நீங்கள் நேரில் வந்து பார்வைட வேண்டும் ஐயா. வடக்கின் வசந்தம் மூலமாக கிராமங்கள் மின் ஒளி பெறுகின்றன எனக் கூறி நல்லூர் பிரதேச சபையைச் சேர்ந்த உறுப் பினர் ஒருவர் ஓரிரு மின் குமிழ் களைப் போட்டார். அவை யாவும் தமது கடமைகளைச் செய்த களைப்பில் நெடுங்காலமாக ஓய்வு பெறுவதால் வீதியில் தூங்கும் அடியார்களுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்து விட்டது. இருளில் நின்று வீதியால் போய்வரும் பெண்களைப்பார்த்து எண்கணக்குப்போடுவதற்கும் வாய்ப்பாக அமைந்து விட்டது.

பல மின் கம்பங்கள் மின்குமிழ் இன்றியே நிமிர்ந்து நிற்கின்றன. ஆதனவரி, வீட்டு வரி எனவசூலிக்கும் பிரதேச சபையோ அல்லது அதனை நிர்வகிக்கும் மாகாண சபையோ எமது இந்த இரண்டு குறைகளையும் கூடிய விரைவில் தீர்க்கக் கூடிய நடவடிக்கை எடுத்தால்தான், இனி வரும் காலங்களில் மக்கள் உங்கள் கட்சியினரைத்தொடர்ந்தும் பதவிகளில் அமர்த்துவார்கள் என்பதை கிராம மக்கள் சார்பாக அறியத் தருகின்றோம்.

> **போர் முடிவடைந்த பின்னர் கிராமத்தின் பிரதான வீதிகள் இரண்டு எட்டாம் குறுக்குவீதிவரை அமைக்கப்பட்டு வேலைகள் இடை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. ஆனால் குறுக்கு வீதிகள் இதுவரை காலமும் புனரமைக்கப்படாத நிலையிலேயே உள்ள தால் கிராமத்தில் வாழும் மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.**





## செலான் வங்கியின் இலாபம் 3 பில்லியனை ரூபாவை விட அதிகம்

2014 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் செலான் வங்கியானது சாதனை மிகுந்த வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 3,079 மில்லியனை பதிவு செய்திருக்கின்றது. 2013ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 2,316 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வரிக்குப் பின்னரான இலாபத்தில் ஏற்பட்டுள்ள மனதில் பதியத்தக்கதொரு 33 சதவீதமான வளர்ச்சியாக இது அமைந்துள்ளது.

2014 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவடைந்த 12 மாத காலப்பகுதியில் தேறிய வட்டி வருமானம் ரூபா 9,719 மில்லியனில் இருந்து ரூபா 11,165 மில்லியனாக 14.97 இனால் அதிகரித்துள்ளது. கட்டணம் மற்றும் தரகு வருமானம் ரூபா 2,127 மில்லியனில் இருந்து ரூபா 2,257 மில்லியனாக 6.17 இனால் உயர்வடைந்தமையானது கடந்த பல வருடங்களாக செலான் வங்கி அடையப்பெற்ற திடமான வளர்ச்சிப் போக்கின் ஒன்றுதிரண்ட பெறுபேற்றை வெளிப்படுத்துவதாக காணப்படுகின்றது.

இதேவேளை, வணிக நடவடிக்கையில் இருந்தான தேறிய உழைப்பு, நிதியியல் கருவிகள் மீதான உழைப்பு, வெளிநாட்டு நாணயமாற்று மூலம் கிடைக்கப்பெற்ற உழைப்பு மற்றும் ஏனைய வருமானம் உள்ளடங்கலாக ஏனைய தொழிற்பாட்டு வருமானம் ரூபா 1,023 மில்லியனில் இருந்து ரூபா 2,809 மில்லியனாக 174.617 இனால் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது. அரச பிணையங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற மூலதன உழைப்புக்களே இதற்கு பிரதான காரணமாக அமைந்தது.

பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வருடத்தில் வங்கியானது தனது கிரயத்தை கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க கவனத்தை செலுத்தி செயற்பட்டது. 2014ஆம் ஆண்டில் செலவுகளில் ஏற்படுகின்ற அதிகரிப்பு 10.99% ஆக கட்டுப்படுத்தப்பட்டமை மனதில் பதியத் தக்க இந்த செயற்பாட்டுக்கு ஆதரவளித்திருக்கின்றது. இது 2013ஆம் ஆண்டு 62.597 ஆக பதிவு செய்யப்பட்ட வங்கியின் குறைவடைந்து செல்லும் வருமானத்திற்கான கிரய வீதத்தை 2014 இல் 57.377 ஆக குறைவடையச் செய்யும் விடயத்தில் பிரதிபலித்தது.

ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் காணப்பட்ட மந்தமான கடன் கேள்வியானது 2014 இன் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்கின் காரண மாக அடுத்த அரையாண்டு காலப்பகுதியில் தலைகீழாக மாற்ற மடைந்தது. 2013 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 136,553 மில்லியன் தேறிய முற்பணம் 2014 இல் ரூபா 154,963 மில்லியனாக உயர்வடைந்த நிலையில், செலான் வங்கியானது 13.487 தேறிய கடன் வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

2014ஆம் ஆண்டில் வங்கி தனது வைப்புத்தளத்தை ரூபா 167,371 மில்லியனில் இருந்து ரூபா 185,924 மில்லியனாக அதிகரித்துக் கொண்டுள்ளது. இவ் வளர்ச்சியானது மிகக் குறிப்பாக நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளை தயார்நிலைப்படுத்தியதன்' ஊடாக அடையப் பெற்றுள்ளது. இந்த நடவடிக்கையின் மூலம் 2013ஆம் ஆண்டு டிசம்பரில் 337 ஆக பதிவு செய்யப்பட்டிருந்த வங்கியின் குறைந்த செலவு வைப்புத் தளத்தை 2014 டிசம்பர் மாத இறுதியில் 397 ஆக உயர்வடையச் செய்வதற்கு செலான் வங்கிக்கு வசதியளித்தது.

தங்க விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் அதன் விளைவாக அடகு வைக்கும் சேவைத் தளத்தில் ஏற்பட்ட தாக்கம் போன்ற பாதக நிலைமைகளுக்கு மத்தியிலும் 2013ஆம் ஆண்டு டிசம்பரில் 10.587 ஆக பதிவு செய்யப்பட்ட மொத்த செயற்படா சொத்துக்களை 2014 டிசம்பர் மாத இறுதியில் 7.697 என்ற ஒற்றை இலக்க மட்டத்திற்கு குறிப்பிடத்தக்களவுக்கு குறைவடையச் செய்தமையின் பலனாக செலான் வங்கியினால் தனது சொத்துத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள முடிந்தது.

கல்வியை மையமாகக் கொண்ட கூட்டாண்மை சமூகப்பொறுப்பு முன்முயற்சிகளை செலான் வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்ற அதேநேரம், வசதி குறைந்த பாடசாலைகளுக்கான தனது 100 நூலகங்கள் என்ற செயற்றிட்டத்தை மேலும் விரைவுபடுத்தி இருக்கின்றது. 2014ஆம் ஆண்டில் இவ்வாறான மேலும் 39 பாடசாலை நூலகங்கள் செலான் வங்கியால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதன்படி, இச் செயற்றிட்டத்தின் கீழ் ஒட்டுமொத்தமாக திறந்து வைக்கப்பட்டுள்ள பாடசாலை நூலகங்களின் எண்ணிக்கை 51ஆக அதிகரித்திருக்கின்றது.

வாடிக்கையாளர்களின் சேவை அனுபவத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், கிளைகளை வேறு இடங்களுக்கு இடமாற்றல் மற்றும் தரமேம்படுத்தல் செயற்றிட்டமும் 2014 இல் முழுமூச்சுடன் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டில் 31 சௌகரிய வங்கியியல் நிலையங்கள் முழுமையான வசதியுடைய கிளை அந்தஸ்து கொண்டவையாக தரமுயர்த்தப்பட்டுள்ளன.(த)

# வாசகர் திருமுகம்



## இளைஞர்கள் சிந்திப்பார்களா?

தற்போதைய இளைஞர்களிடையே வெற்றிலை போடும் பழக்கம் அதிகரித்துள்ளமை கவலை தரும் விடயமாகும். முன்னரெல்லாம் ஓரளவு வயது வந்தவர்களே வெற்றிலைப் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிருந்தனர். வெற்றிலை போடுவது தமக்கு உற்சாகத்தை ஏற்படுத்துவதாகவும் இவர்கள் கூறுவார்கள். சிலர் சாப்பாடு இல்லாமல் கூட என்னால் இருக்க முடியும், ஆனால் வெற்றிலை இல்லாமல் இருக்க முடியாது எனக் கூறுவதும் உண்டு. ஆனால் தொடர்ந்து வெற்றிலையை வாயில் வைத்து குதப்புவதால் ஏற்படும் தீமைகளை இவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

தற்போதைய இளைஞர்கள் மது, சிகரெட், வெற்றிலை ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். தற்போது இலங்கையின் ஏனைய மாவட்டங்களைவிட யாழ்.மாவட்டத்தில் மது அருந்துவோரின் சராசரி வீதம் அதிகரித்துள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதைப் போலவே வெற்றிலையைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

வீதியோரங்களில் காணப்படும் கடைகளில் வெற்றிலையை வாங்கி வாயில் போட்டுக் குதப்பும் இளைஞர்களைச் சாதாரணமாகப் பார்க்க முடிகின்றது. சில கடைகளில் வெற்றிலையுடன் போதைப் பாக்கும் கலந்து விற்பனை செய்யப்படுவதாகத் தெரிகின்றது.

உடலுக்குக் கேடு விளைவிக்கும் இந்தக் கொடிய பொருள்களைப் பயன்படுத்துவதால் உயிர்க் கொல்லி நோய்களுக்கு ஆளாகும் நிலை உருவாகப் போகின்றது.

அதிலும் இளைஞர்கள் அதிக காலம் வாழப் போகின்றவர்கள் என்பதால் பாதிப்புக்களும் அதிகமாகவே இருக்கப் போகின்றன. இளைஞர்கள் சிந்திப்பார்களா?

*ம.வாசன்,சுதுமலை.*

## விவசாய நிலங்களை இனியாவது பாதுகாப்போம்

யாழ்.குடாநாட்டில் அமைந்துள்ள விவசாய நிலங்களில் புதிய புதிய கட்டுமானங்கள் எழுந்து வருவதை, போர் முடிவுற்ற பின்னர் அவதானிக்க முடிகின்றது. இது எதிர்காலத்தில் பெரும் பிரச்சினையாக உருவெடுக்கப் போகின்றது.

ஒப்பீட்டளவில் பார்க்கும்போது யாழ்.குடாநாடு சிறியதொரு நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. இதில் பெருமளவு வளமான விவசாய நிலங்கள் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மீதியாகவுள்ள விவசாய நிலங்களிலேயே விவசாயச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்த நிலங்களில் கட்டுமானங்களை அமைப்பதும், வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதும் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. சில விவசாய நிலங்களில் வாகன சுத்திகரிப்பு நிலையங்கள் கூட அமைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக விவசாய உற்பத்திகள் பாதிக்கப்படப் போவதை எவருமே எண்ணிப் பார்ப்பதாகத் தெரியவில்லை. விவசாயமே இங்கு வாழும் மக்களின் உயிர்நாடியாகத் திகழ்வதுடன் அதன் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தின் மூலமாக ஏராளமான குடும்பங்கள் தமது வாழ்க்கையை நடத்திச் செல்கின்றன.

ஆகவே இனியாவது விவசாய நிலங்களை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதை உரிய அதிகாரிகள் தடைசெய்ய வேண்டும்.

*க.மயூரன், இணுவில்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# நிதி நிறுவனங்களால் சீரழியும் யாழ்.மக்கள்

"வடக்கு மாகாணத்தின் பொருளாதார ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், நிதி நிறுவனங்களின் ஆதிக்கத்தால் அதிகளவான மக்கள் பதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் கடன் சுமைகளில் இருந்து மீள முடியாமல் தலைமறைவாகி இருக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளார்கள்". இவ்வாறு நிதி நிறுவனங்களால் யாழ்.மக்களுக்கு நேர்ந்துள்ள கதியை போட்டுடைத்துள்ளார் யாழ்.பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.ரட்ணம். யாழ்.மாவட்ட பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் கூறிய இந்த விடயம் நூறு வீதம் உண்மையானதுதான்.

போர் முடிவடைந்து நாட்டில் ஓர் அமைதிச் சூழல் ஏற்படத் தொடங்கியதும் இலங்கையின் வடக்கு மாகாணம் ஒரு வர்த்தகச் சந்தையாக மாற்றம் பெற்றது. சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக, வடக்கில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் இங்கு முதலீடுகளை மேற்கொள்ளவோ, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவோ யாரும் முன்வரவில்லை. போர் முடிந்ததுதான் தாமதம் அனைவரது கண்களும் வடக்கு மீதே குவிந்தன. வடபகுதி ஒரு சிறந்த பொருளாதாரச் சந்தையாக வருபவர்கள் எல்லாம் இங்கே வர்த்தகம் செய்து, இங்குள்ள மக்களின் பணத்தை பிடுங்கி எடுக்கும் நடவடிக்கைகளிலேயே அவசர அவசரமாக ஈடுபட்டார்கள். வடபகுதி தமிழ்மக்கள், சேமிப்புக்கு பெயர் போனவர்கள் என்ற ஓர் உதாரணத்தை வைத்துக்கொண்டு வடக்கில் கடை விரிப்பதற்கு பலரும் முண்டியடித்தனர். அந்த மக்களின் சேமிப்பில் இருக்கும் பணத்தை எப்படியாவது பிடுங்கி, அதன்மூலம் தாம் லாபம் ஈட்டவேண்டும் என்றே பலரும் நினைத்து இங்கு ஓடிவந்தார்கள். இவற்றில் குறிப்பாக நிதி நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள், கடன் வழங்கும் நிறுவனங்கள், தனியார் வங்கிகள் என்பன உள்ளடக்கம். அதிலும் குறிப்பாக நிதி நிறுவனங்கள் 'லீசிங்' என்ற சொல்லை வடக்கு மக்களுக்கு அறிமுகப்படுத்தி, அதன்மூலம் அவர்கள் கடன்காரர்களாக வழிகளை ஏற்படுத்தின என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

முன்னர் தமது வருமானத்துக்கு ஏற்றவாறு செலவினத்தை நன்கு திட்டமிட்டு மேற்கொண்டுவந்த வடபகுதி வர்த்தகர்கள், விவசாயிகள், சிறுதொழில் புரிவோர், மீனவர்கள், தனியார்துறை ஊழியர்கள், அரசதுறை அலுவலர்கள் என அனைவரும் இந்த 'லீசிங்' என்ற சொல்லினால் கவரப்பட்டார்கள். இதனால், இவர்களின் செயற்பாடுகள் வரவுக்கு மிஞ்சிய செலவீனமாக அமைந்தன. வாகன மோகத்தினால் கவரப்பட்ட பலர், தமது வருமானம் ஈட்டலையும் நோக்காமல்–கருத்தில்கொள்ளாமல் நிதி நிறுவனங்களின் 'லீசிங்' உதவியுடன் பெறுமதியான கனரக வாகனங்களையும், ஆடம்பர வாகனங்களையும் கொள்வனவு செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் இந்த நிதி நிறுவனங்கள் தமது நிபந்தனைகள் குறித்து தெளிவான விளக்கத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்காமையால், பலரும் 'லீசிங்' முறையில் வாகனத்தைக் கொள்வனவு செய்தார்களே அன்றி, அதன்பின் அந்த 'லீசிங்' பணத்தை எப்படிச் செலுத்துவது என்பதை சிந்திக்கவில்லை. அதேநேரம் 'லீசிங்' பணம் செலுத்தப்படா விட்டால், குறித்த வாகனத்ததை அந்த லீசிங் நிறுவனம் பறித்துக்கொள்ளும் என்பதும் பலருக்குத் தெரியாது. இதனால், இப்போது பலர் தலையில் கைவைத்துக்கொண்டிருக்கிறார்கள். வருமானத்தைவிட செலவினம் எல்லை தாண்டியதால், கடன் சுமை தலையை அழுத்த என்ன செய்வதென்று தெரியாமல் பலர் தற் கொலை போன்ற விபரீதமான முடிவுகளுக்கும் செல்கி றார்கள்.

நிதி நிறுவனங்களும் வங்கிகளும் பல்வேறு நலத்திட்டங்களை வழங்குவதாகக்கூறி மக்களைத் தேடிச் சென்று கடன்களைக் கொடுத்து அவர்களை கடன்காரர்கள் ஆக்கியுள்ளனர். பல்வேறு திட்டங்களிலும் சலுகைகளை வழங்குவதாகக்கூறி, சொத்துகளைப் பறிக்கும் நிலைக்கு மக்களைத் தள்ளியுள்ளன இந்த நிறுவனங்கள்.

இதனைவிட, பல்கலைக்கழக மாணவர்களும், தனியார் அரசதுறைகளில் பணிபுரியும் இளைஞர்களும் 'லீசிங்' முறையில் மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்துவிட்டு இப்போது திண்டாட்டத்தில் இருக்கிறார்கள். எப்போது மோட் டார் சைக்கிள் பறிக்கப்படும் என்ற ஏக்க நிலையே இப்போது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

சரியான–முறையான திட்டமிடல் இல்லாமல், வருமானத்தை கருத்திலே கொள்ளாமல் 'லீசிங்'கை மட்டும் நம்பி, செயலில் இறங்கியதால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

எனவே, எமது மக்கள் இனிமேலாவது இந்த விடயத்தில் விழித்துக்கொள்ள வேண்டும். நீதி சார்ந்த விடயங்களில் சரியான ஆலோசனைகள், திட்டமிடல்களைப் பெறாமல் செயலில் இறங்குவது எமது வாழ்வாதாரத்தை ஆட்டம் காண வைத்து விடும் என்பதை உணர்ந்து செயலாற்றவேண்டும்.

பத்தி எழுத்து!

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உனக்கும் உன் அப்பனுக்கும் பேப்பே என்ற நிலை வேண்டாமே மோடி….

கடந்த வருடம் சீன அதிபர் ஸி ஜிங்பின் இலங்கைக்கு வருவதற்கு முன்பே இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு வருகை தரும் விதத்தில் அப்போதைய அரசு அழைப்பு விடுத்துக் காத்திருந்தது. ஆனால் அதன் பின்னணி எவ்வாறு இருக்கும் என்பதை, மோடி அரசு ஏற்கனவே உணர்ந்திருந்ததோ என்னமோ, நரேந்திரமோடி இலங்கைக்கு வருவதற்கு அவசரப்படவில்லை. அதற்கான காலம் கனியவில்லை என்பது போல் இலங்கை வருகையை அவர் ஒத்திப் போட்டிருந்தார். அந்த வகையில் அது, ராஜபக்ஷ அரசுக்கு முகத்தில் அறைந்தது போலாகிவிட்டது.

அந்த வேளையில் மோடி வந்து சென்றிருந்தால், அதற்குப் பிறகு வருகை தந்த சீனத் தலைவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகளும் அவரைக் கொண்டே கொழும்பு துறைமுக நகருக்கான திட்டத்தை ஆரம்பிக்கச் செய்தமை மட்டுமன்றி, அந்தக் காலகட்டத்தில் கொழும்பு துறைமுகத்துக்கு சீன போர்க் கப்பலும் நீர்மூழ்கிகளும் வந்து தரித்துச் சென்றமையும் இந்தியாவின் முகத்தில் கரி பூசியது போல் இருந்திருக்கும். அந்த வகையில் இந்திய புலனாய்வுகளும், ராஜதந்திரமும் கூர்மையாகச் செயற்பட்டிருப்பதை உணரலாம்.

அதன் பின்னரும், மேலும் ஒரு வருடம் பதவியிலிருக்க வாய்ப்பிருந்த நிலையில், அவசரமாக தேர்தலை நடத்தி, மூன்றாவது தடவையும் பதவியில் அமர்ந்து கோலோச்சும் மஹிந்தவின் கனவு தவிடுபொடியாகியது. இப்போது தமது சொந்த ஊரில் மூலைக்குள் முடங்கிப் போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் அவர்.

எண்ணங்கள் நன்றாக இருந்தால், எல்லாமே சிறப்பாக நடக்கும் என்பது சாதாரண வாழ்க்கைக்கு மட்டுமன்றி, அரசியல் வாழ்க்கைக்கும் பொருத்தமாகவே காணப்படுகின்றது. மஹிந்த ராஜபக்ஷவினால் பாப்பரசரை வரவேற்க முடியாமல் போனமை மட்டுமன்றி, இப்பொழுது லண்டனில் இடம்பெறும் பொதுநலவாய தின வைபவங்களில் தலைமை வகிக்கும் வாய்ப்பையும், இங்கிலாந்தின் பேரரசி 2ஆம் எலிசபெத் மகாராணியையும் அரச குடும்பத்தினரையும் சந்திக்கும் வாய்ப்பையும் இழந்துவிட்டார். அந்த அரிய வாய்ப்பு முன்புஅவருக்குக் கீழே ஓர் அமைச்சராகப் பணிபுரிந்தவரான புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைத்துள்ளது.

அத்தோடு விடயம் முடியவில்லை. இலங்கை மக்கள் ஏற்படுத்திய தேர்தல் புரட்சியின் வாயிலாக உருவாகியுள்ள புதிய சூழ்நிலையில், இங்கு வருகை தரும் தென்னாசியாவின் வளர்ந்துவரும் ஓர் அணு வல்லரசான இந்தியாவின் பிரதமர் நரேந்திரமோடியை வரவேற்று, இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகள் குறித்து கலந்து பேசவும் சுமுக உறவுகளை மேம்படுத்திக்கொள்ளவும் மைத்திரிபால சிறிசேனவுக்கு சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

இலங்கைக்கு வருகை தரவிருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, நாட்டின் பல முக்கிய இடங்களுக்கு, மிகச் குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கும் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்.

இலங்கை மக்கள், குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் ஏற்படுத்தியுள்ள அரசியல் சூழ்நிலை இலங்கை-இந்திய உறவை மேம்படுத்தியிருப்பதை இந்தியத் தலைவர் உணராமல் இருக்க முடியாது. அந்த வகையில் இயல்பாகவே இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சினைகளில் அக்கறை காட்டும் இந்திய அரசு, அந்த மக்களின் சார்பில் முன் வைக்கப்படும் கருத்துகளில் ஆழமாகக் கவனம் செலுத்த வேண்டும். அவற்றைக் கூடிய வரையில் சுமுகமாக, திருப்திகரமாகத் தீர்த்துக் கொள்ள இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இல்லையேல் நிலைமை, உனக்கும் பேப்பே, உன் அப்பனுக்கும் பேப்பே என்றாகி விடும்….! இவற்றைக் கருத்தில் கொள்வாரா இந்திய உப கண்டத்தின் புதிய அரச தலைவர்….?



# எல்லை மீறும் மீனவர்களை சுட்டு வீழ்த்துதல் நியாயமா?

## ரணிலின் கருத்துக்களால் எழுந்துள்ள சர்ச்சை

■ சேரலாதன்

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறும் தமிழக மீனவர்களைச் சுடுவதில் தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சட்டம் அதனை ஏற்றுக் கொள்ளும். இவ்வாறு இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் திருவாய் மலர்ந்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. தற்போதைய சூழ்நிலையில் அவரது வாயிலிருந்து இந்தக் கருத்து வெளிவருமென எவருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் தாமும் ஒரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தலைவர் என்பதை அவர் நிரூபித்து விட்டார்.

கடந்த காலங்களில் தமிழக மீனவர்கள் சுடப்பட்டுக் கொல்லப்பட்டதற்கு அவர் கூறிய காரணத்தைக் கூட, இலங்கைக் கடற்படையினரைக் காப்பாற்றுகின்ற ஒரு முயற்சியாகவே கருத முடியும்.

புலிகளுக்கு ஆயுதங்களைக் கடத்தி வந்த மீனவர்களே கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அவர் கூறியதை எவருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் தமிழக மீனவர்களுக்கு நடுக் கடலில் வைத்து நடந்ததைஅவரால் ஒருபோதுமே மறைக்க முடியாது. மேலும் புலிகள் வெளிநாடுகளிலிருந்து கப்பல் கப்பலாக ஆயுதங்களைத் தருவித்துப் பயன்படுத்திய நிலையில் தமிழக மீனவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பெறுவதற்கு அவர்கள் காத்திருந்ததாக ரணில் கூறியமை பரிகாசத்துக்குரியது.

இதேவேளை கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானதென அவர் கூறியது ஆவணங்களைப் பொறுத்தவரையில் சரியானதாக இருக்கலாம். ஆனால் வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது தமிழ்நாட்டு மக்கள் இதை ஒருபோதுமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தமிழ்நாடு இராமநாதபுரம் மன்னரின் அதிகாரத்தினுள் இருந்த இந்தத் தீவு இந்தியாவின் முன்னாள் பிரதமரான இந்திரா காந்தியால் 1974 ஆம் ஆண்டு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. இதனால் அன்றிலிருந்து பாதிப்பை எதிர்கொண்டு வருவது தமிழக மக்கள்தான்.

> முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியை தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக மீனவர்கள் வெடிகொளுத்திக் கொண்டாடியமை நினைவிருக்கலாம். அந்த அளவுக்கு ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் அவர்கள் அனுபவித்த கொடுமைகள் ஏராளம், ஏராளம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியை தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக மீனவர்கள் வெடிகொளுத்திக் கொண்டாடியமை நினைவிருக்கலாம். அந்த அளவுக்கு ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் அவர்கள் அனுபவித்த கொடுமைகள் ஏராளம். இலங்கைக் கடற்படையினரால் நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். பல கோடி ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்பட்டன. இதனால் தான் மஹிந்தவின் தோல்வியை அவர்கள் கொண்டாடினர். ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் பாசறையில் பயின்ற ரணில், ஜே.ஆருக்கே உரித்தான சில குணங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றார். தனித்து நின்று போட்டியிட்டால் தம்மால் ஒருபோதுமே வெற்றி அடைய முடியாது என்பதை உணர்ந்ததால்தான், மைத்திரியை மஹிந்தவிடமிருந்து பிரித்தார். அவரது ஆதரவில் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். தற்போது மைத்திரியின் முதுகின் மீது ஏறிச் சவாரி செய்வதற்கு அவர் முயல்வது தெரிகின்றது. மஹிந்தவும் அவரது சகாக்களும் பெரிய அளவில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நிலையிலும் அவர்கள் கைது செய்யப்படாமல் அரசுக்கு சவால் விடும் நிலையில் இருப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவே காரணமெனக் கூறப்படுகின்றது. வாய்ப்புக் கிடைத்தால் மைத்திரியை உதறித்தள்ளிவிட்டு வேறு எவருடனும் கூட்டுச் சேர்வதற்கும் ரணில் தயங்கமாட்டாரென அரசியல் வட்டாரங்களிலிருந்து பேசப்படுகிறது.

தமிழர் பிரதேசங்களில் நிலை கொண்டுள்ள படையினரின் எண்ணிக்கையை இப்போதைக்குக் குறைக்க முடியாதெனக் கூறும் ரணில், அதற்கான சூழல் உருவாகும் வரை காத்திருக்க வேண்டுமெனவும் கூறியுள்ளார். பெரும்பான்மை மக்களைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே அவரது செயற்பாடுகள் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளால் மைத்திரி மட்டுமல்ல ரணிலும் பதவிக் கதிரைகளில் அமர்ந்துகொள்ள முடிந்துள்ளது. மைத்திரி அந்தத் தேர்தலில் தோல்வியைத் தழுவியிருந்தால் ரணில் இன்றும் எதிர்க்கட்சித் தலைவராகவே இருந்திருப்பார். ஆனால் தமிழர்கள் மீதான நன்றியுணர்வு சிங்களத் தலைமைகளுக்கு ஒருபோதுமே வந்ததில்லை. ரணிலும் அதற்கு விதிவிலக்கானவர் அல்ல என்றே தற்போது எண்ணத் தோன்றுகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இங்கு வந்து திரும்பிய நிலையிலும், பிரதமர் நரேந்திரமோடி வரவுள்ள நிலையிலும் பிரச்சினைகளைத் தூண்டும் கருத்துக்களை வெளியிடக்கூடாது என்ற இங்கிதம்கூட ரணிலிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ரணிலின் கருத்துக்கள் இரண்டு நாடுகளின் பேச்சுக்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இதனால் தமிழக மீனவர்கள் கொதித்துப் போயுள்ளனர். மேலும் இந்திய மீனவர்களால் யாழ்ப்பாண மீனவர்கள் பாதிக்கப்படுவதுதொடர்பாகவும்ரணில் கவலை தெரிவித்துள்ளார். ஆனால் தென்பகுதி மீனவர்கள் கடற்படையினரின் உதவியுடன் வடகடல் பிராந்தியத்தில் மேற்கொள்கின்ற அடாவடித்தனங்களை அவர் அறியாதது போன்று நடந்து கொள்வது வியப்புக்குரியது. மேலும் அயல் நாடொன்றின் மீனவர்களைச்சுடுவது தவறான செயல் அல்ல என அவர் கூறியிருப்பது அவரது அரசியல் முதிர்ச்சியைக் கேள்விக்குறியாக மாற்றிவிட்டது.

கந்தவனம்
கோணேஸ்வரன்

# தமிழர் தலைவர்கள்

## விழிப்புடன் செயலாற்ற வேண்டிய தருணமிது



இலங்கைத்தமிழரின் ஒரே விடுதலை அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே. இதில் எவரும் கருத்துவேறுபாடு கொள்வதற்கு இடமில்லை. காழ்ப்புணர்வு காரணமாகச் சில அரசியல்வாதிகள் மாறுபட்ட கருத்துகளைக் கூறினாலும் மக்கள் அவற்றுக்குச் செவிமடுப்பதில்லை. ஆயினும் அண்மைக்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியாக நடந்துகொள்கிறதா என்ற ஐயம் தமிழ்மக்கள் மத்தியில் எழத் தொடங்கியிருக்கிறது. தீர்க்கமான ஒரு முடிவை எடுத்து மக்களுக்கு அறிவித்து அதன்படி மக்களை வழிநடத்தவேண்டிய தன்னுடைய பெரும் பொறுப்பை அது உணர்ந்து நடந்துகொள்கிறதா என மக்கள் கேட்கத் தொடங்கியுள்ளார்கள்.

இன்று தமிழர்களின் விடுதலை அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே என்று அடையாளப்படுத்தப்பட்டாலும், அதன் உண்மையான வரலாறு 1949இல் இருந்து தொடங்குகிறது. இலங்கைத் தமிழரசுக் கட்சியாக – பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாற்றம் பெற்று இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நிமிர்ந்துநிற்கிறது. இந்தப் பிரமாண்டமான கட்டுமானத்தை இன்றைய நாடாளு மன்ற உறுப்பினர்களோ, மாகாண சபை உறுப்பினர்களோ தாம் நினைத்தவாறு போட்டு உடைத்து விட முடியாது. அதற்கு அவர்களுக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது. இதனையும் மீறி அவர்கள் விளையாடத் தொடங்கினால் தமிழ்மக்கள் அவர்களுடைய அரசியல் வாழ்வையே சூனியமாக்கிவிடுவார்கள்.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரால் அரசியல் செய்து கொண்டிருப்பவர்களின் வாழ்வு, பல்லாயிரக்கணக்கான உயிர்களின் அழிவிலிருந்து உயிர்த்தெழுந்தது; கோடிக்கணக்கான ரூபா சொத்து அழிவிலிருந்து திரண்டெழுந்தது; அறுபத்தேழு ஆண்டு காலமாகத் தொடர்ந்து துயரங்களைத் தாங்கிவந்த தமிழ் மக்களின் மனவெழுச்சியிலிருந்தும் வைராக்கியத்திலிருந்தும் கிடைத்தது.

முள்ளிவாய்க்காலில் தங்கள் உயிர்களை அர்ப்பணித்த தமிழ் உறவுகளுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. கால்நூற்றாண்டு காலமாகத் தங்கள் வீடுகளை இழந்து தவித்துக்கொண்டிருக்கும் வலிகாமம் வடக்கு மக்களுக்கு இன்றுவரை தங்கள் மண்ணில் கால்பதிக்க அனுமதி கிடைக்கவில்லை. பத்தாண்டுகளுக்கும் மேலாக சம்பூர் மக்கள் தங்கள் வளமான இருப்பிடத்தைக் காவுகொடுத்துவிட்டு முகாம்களில் கருகிக்கொண்டிருக்கும் வாழ்க்கைக்கு விடிவு ஏற்படவில்லை.

ஆறாண்டுகளுக்கு முன்னர்வரை தமிழர் பிரதிநிதிகளிடம் காணப்பட்ட நேர்மை இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. ஒன்றும் ஒன்றும் எத்தனை என்று கேட்டால் கூட, பொறுங்கள் அவர்களிடம் கேட்டுவிட்டு விடைசொல்கிறோம் என்று கூறிவந்த காலமும் ஒன்று இருந்ததை மறந்துவிடக்கூடாது. அந்த அச்சம்தான் இவர்களை நேர்வழியில் நடக்கச்செய்ததோ என்றுகூட இப்போது சிந்திக்கத் தூண்டுகிறது.

எவ்வாறெனினும், இன்றும் கூட தமிழ்மக்கள் தங்கள் பிரதிநிதிகளை நம்புகிறார்கள். தங்கள் விடிவு இவர்களின் செயற்பாட்டில்தான் தங்கியிருக்கிறது என்பதில் உறுதியாகவும் இருக்கிறார்கள். இவர்கள் தங்களைக் குழப்பாமல் நேரிய அரசியல் செய்யவேண்டும் எனவும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அண்மைக்காலச் சம்பவங்கள் எவையும் தமிழ் மக்கள் சந்தோஷப்படும்படியாக அமைந்திருக்கவில்லை.

நாங்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கும், எங்கள் சந்ததி இந்த மண்ணில் நிலைத்து நிற்பதற்கும் எங்களை வழிநடத்திச் செல்லுங்கள் என்ற ஒரே கோரிக்கையைதான் தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளிடம் சமர்ப்பித்திருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் நேர்மையாக முயன்று தோற்றுப்போன காரியங்களுக்காகக்கூட மக்கள் அவர்களைக் கடிந்துகொண்டதில்லை. மாறாக, நீங்கள் தைரியமாகச் செயற்படுங்கள். நாங்கள் உங்கள் பின்னால் நிற்கிறோம் என்றுதான் சொல்லி வந்திருக்கிறார்கள்.

இத்தகைய ஒரு நேர்மையான மக்கள் கூட்டத்தை வழிநடத்துவோர் அண்மைக்காலங்களில் தங்கள் அரசியல் செயற்பாடுகளில் ஒருமித்த கருத்தை எடுக்கமுடியாதவர்களாக இருப்பது தமிழ்மக்களுக்கு வேதனையைத் தருகிறது. இந்த நிலை தொடரக்கூடாது என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுக்கிடையே கூட்டுப்பொறுப்புணர்வுள்ள நடத்தை அவசியமாகிறது. ஒவ்வொருவரும் தங்கள் மனம் போனபடி தமது அணியிலுள்ள மற்றவர்களைப் பகிரங்கமாக விமர்சிப்பது நாகரிகமானதல்ல. இத்தகைய நடவடிக்கைகள் விடுதலை உணர்வு கொண்ட சமுதாயத்துக்கு உகந்ததுமல்ல. இதனை மக்கள் பிரதிநிதிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் உருவப்பொம்மை தீயிடப்பட்டிருக்கிறது. அரசியல்வாதி ஒருவரின் கொடும்பாவி தீயிடப்படுவது ஒரு பாரதூரமான பிரச்சினையல்ல. ஓர் அரசியல்வாதியின் கருத்துகளாலோ, நடத்தையாலோ மக்கள் சீற்றமடைந்தால் அவர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டுவதற்காக அந்த அரசியல்வாதியின் கொடும்பாவியை எரிப்பதுண்டு. அதற்கான உரிமை மக்களுக்கு இருக்கிறது.

ஆனால், சுமந்திரனின் கொடும்பாவி அப்படி எரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மக்களின் மனவுணர்வுகளுடன் தொடர்பற்ற வேறு ஏதோ அழுத்தங்கள் அச்செயற்பாட்டில் இருப்பதாகப் புலப்படுகிறது. தகுந்த காரணமின்றி வேண்டுமென்றே அவ்விடத்தில் கொடும்பாவி எரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது சிலரின் அரசியல் காழ்ப்புணர்வுச் செயலாகவும் இருக்கலாம் என்று நினைக்க இடமுண்டு.

எவ்வாறெனினும், எரிப்பு நடந்த இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரனும் வடமாகாண சபை உறுப் பினர்கள் சிலரும் இருந்திருக்கிறார்கள். கொடும்பாவி எரிப்பு அவர்களது கைமீறிய சம்பவமாகவும் இருக்கலாம். ஆனால், கண்டிக்க வேண்டிய பொறுப்பு நாடாளு மன்ற உறுப்பினருக்கும், மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இருந்தும் அவர்கள் அதனைச் செய்யவில்லை. ஆகக்குறைந்தது, எரிப்பு நடந்தவுடன் தங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்துவிட்டாவது அவர்கள் அவ்விடத்தி லிருந்து வெளியேறியிருக்க வேண்டும். அதுதான் தர்மம். ஆனால், அவர்கள் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. இது சுமந்திரனுக்கான நியாயமல்ல. எரிக்கப்பட்டது எவருடைய உருவப்பொம்மையாக இருந்தாலும் இதுதான் நியாயம்.

கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் கலந்துகொண்டனர். இதனை மக்களில் ஒருசாரார் வரவேற்றனர். மற்றொரு சாரார் கசப்புணர்வுகளைக் கொட்டித்தீர்த்தனர். தங்கள் தலைவர் நடந்துகொள்கின்ற ஒரு விடயம் தொடர்பாக தங்கள் எதிர்ப்பையோ ஆதரவையோ வெளிப்படுத்தும் உரிமை மக்களுக்கு இருக்கிறது. இதில் எவரும் குறைகூற முடியாது.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பாக தெளிவான கருத்தை மக்கள்முன் வைக்காமற்போனமை கவலைக்கிடமான அரசியலாகும். பொது மக்களைப்போல் தாங்களும் பல்வேறு அபிப்பிராயங்களை மக்கள் மத்தியில் உலாவவிட்டு மக்களை குழப்பத்தில் வைத்திருப்பது நல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழகன்று.

சுதந்திர தின விழாவில் கலந்துகொண்டமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவின் பிரகாரம் இடம்பெற்றதா? அல்லது அவரவரது சொந்த முடிவா? என்பதற்கு இதுவரை தெளிவான விளக்கம் கொடுக்கப்படவில்லை. கலந்துகொள்வதா? இல்லையா? என்று ஆலோசிக்கப்பட்டது. பகிஷ்கரிக்கிறோம் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, கலந்துகொண்டேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுவது நியாயமான காரணமாகப் படவில்லை.

ஒரு நிகழ்வில் கலந்துகொள்வதில்லை என முடிவெடுத்தால் அதற்குப் பகிஷ்கரிப்பு என்று பொருளாகாது. அதேபோல பகிஷ்கரிக்கவில்லை என்று சொல்லப்பட்டிருந்தால் அதில் கலந்துகொள்ள வேண்டும் என்ற அர்த்தம் பொதிந்திருப்பதாகவும் கொள்ளமுடியாது.



இதனை வைத்துக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் விருப்பம்போல் கருத்து வெளியிடுவது ஆரோக்கியமான அரசியலுமாகாது.

இந்த நிலைமைக்குக் கூட்டமைப்பின் தலைமையும் பொறுப்புக்கூற வேண்டியதாகிறது. தெளிவான ஒரு தீர்மானத்தை மேற்கொண்டு அதனை மக்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தால் இச்சம்பவம் பேசும்பொருளாக மாறியிருக்காது. தலைவர்கள் எல்லோரும் கூட்டுப்பொறுப்புடன் நடந்து கொண்டிருப்பர். தமிழ்மக்களும் தங்கள் தலைவர்களின் செயற்பாடுகளால் தெளிவைப் பெற்றிருப்பர். கருத்துக் குழப்பங்கள் ஏற்பட்டிரா.

ஜெனிவா அறிக்கை ஒத்திவைக்கப்பட்டதில் நன்மை உண்டு என்கிறார் சுமந்திரன். இல்லை, தமிழ்மக்கள் ஏமாற்றப்பட வாய்ப்பிருக்கிறது என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன். இலங்கை அரசின் உள்ளக விசாரணைத் தொடர்பிலும் இதே கருத்துக்குழப்பம்தான். ஒருவர், உள்ளக விசாரணையில் நம்பிக்கை யில்லை என்கிறார், அது ஒரு ஏமாற்று வேலையென்றும் கூறுகிறார். இன்னொருவர் அது நல்ல காரியம், பற்றிப்பிடித்தால் தமிழ்மக்கள் நன்மையடைய வாய்ப்புண்டு என்கிறார். இரண்டு கருத்துகளும் சரியாக இருக்கமுடியாது. ஏதோ ஒன்றுதான் சரியாக அமையலாம். அந்த ஒன்று எது என்பதில் மக்கள் குழம்பிப்போயிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேராத தமிழ் அரசியல்வாதிகள் கூறுகின்ற கருத்துகள் மக்கள் மத்தியில் எடுபடுவதில்லை. ஆனால், சுமந்திரனோ, சுரேஷ் பிரேமச்சந்திரனோ அப்படியானவர்களல்லர். அவர்களின் கருத்துகளுக்கு மக்கள் செவிமடுக்கிறார்கள். ஒரே அணிக்குள் இருந்துகொண்டு இரண்டு விதமான கருத்துகளை பொதுமக்கள்முன் வைப்பது. நல்ல செயலல்ல. கலந்துபேசி தெளிவான முடிவெடுத்து அதை மக்கள்முன் வைக்கவேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

கட்சிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துகளைக் கொண்டிருக்கலாம். எதிரணிகள் தத்தம் கருத்துகளால் மோதியும் கொள்ளலாம். மக்கள்கூட தங்கள் அரசியல் புரிதலின் அடிப்படையில் பிரிந்து நின்று கருத்துகளைக் கூறலாம். ஆனால், ஒரே கட்சிக்குள் இருப்பவர்கள் – மக்களின் பிரதிநிதிகளாக வலம் வருபவர்கள் – தமிழினத்தின் விடுதலை நடவடிக்கைகளுக்கு வழிகாட்டிக்கொண்டிருப்பவர்கள் கருத்துகளால் மக்களைக் குழப்பிக்கொண்டிருக்கக் கூடாது.

இது இலங்கைத் தமிழினத்தின் அரசியல் வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத பலவீனங்களாகும். மஹிந்த ராஜபக்ஷவால்கூட தகர்க்கமுடியாத தமிழினத்தின் ஒற்றுமை, இப்போது எவரோ ஒருசிலரால் தகர்க்கப்படுகிறதா என்று ஐயுறவேண்டியிருக்கிறது. விடுதலைப்புலிகளை வடக்குப் புலிகளென்றும், கிழக்குப் புலிகளென்றும் தானே பிரித்து வைத்ததாகப் பின்னாளில் ஒருவர் உரிமை கொண்டாடியதைத் தமிழர்கள் மறந்துவிடமுடியாது. அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் சிக்கலை ஏற்படுத்தி அதற்கான உரிமை கொண்டாட எவராவது காத்திருக்கிறார்களா என்றும் சிந்திக்கவேண்டியிருக்கிறது. இந்த அடிப்படையில்தான்கிழக்குமாகாண சபையில் அமைச்சுப் பதவிகளுக்காக காய்கள் நகர்த்தப்படுகிறதோ என்றும் எண்ணத்தோன்றுகிறது.

தமிழர் தலைவர்கள் விழிப்புடன் செயலாற்றவேண்டிய நேரமிது.

# பெற்றோராகிய நாம் சிந்திப்போம்

என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இந்தச் சிறியோரில் எவரையாவது பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லை கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது(மத்:18–6)

பரமபிதாவின் மகன் இயேசுவின் பாடுகளை நினைவில் கொண்டு எம் உள்ளங்களை தூய்மையாக்கும் இந்தக் காலத்தில் பெற்றோர்களாகிய நாம் எமது கடமைகளைச் சரிவரச் செய்கின்றோமா? என்பதை ஒரு தடவை எம்மனதில் இருத்தி சிந்திப்போம். எமது பிள்ளைகள் ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகள். அவர் எமக்குத் தந்த அரும் கொடைகள். எமது பிள்ளைகள் விரும்பியவற்றை எல்லாம் வாங்கிக் கொடுக்கின்றோம். சமூகத்தில்

## தவக்காலச் சிந்தனை



எப்படி வாழ வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தோமா? அநாகரிகத்தின் அலங்கோலத்தால் எமது சமூகத்தில் கொலைகள், கொள்ளைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், மோசடிகள் எனப் பல கோணங்களில் நாம் துன்புறுத்தப்படுகின்றோம். இந்த தீய செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் ஒவ்வொரு தாய் தந்தையரின் பிள்ளைகளே. இவர்கள் செய்யும் குற்றங்களுக்கு நாமும் ஒரு வகையில் காரணங்கள் என்பதை நாம் சிந்திக்கின்றோமா? எமது பிள்ளைகள் வருங்காலத்தை கட்டியமைக்கும் சிற்பிகள் எமது பிள்ளைகளுக்கு ஆண்டவர் இயேசுவின் அன்பைக் கற்பியுங்கள். செபத்தில் அவர்களை இணைந்திருங்கள். ஆசிரியர், பெண்கள், குழந்தைகள் அடுத்துள்ளவர்களை மதிக்கக் கற்றுக்கொடுங்கள். அன்புடன் கூடிய அறிவையூட்டி தவக்காலத்தை எமது பிள்ளைகளுடன் இணைந்து சிறப்பாக்குவோம். ஆண்டவர் இயேசு எம்முடன் இணைந்திருப்பார்.

ந.மரியநாயகம், கொழும்புத்துறை.

# உன்னைப் பற்றியே சிந்திக்காதே!

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



சமநிலையில் இருந்து பிறழாதவன், மன சாந்தமுடையவன், இரக்கமும், கருணையும் கொண்டவன் ஆகியோர் நல்ல பணிகளை மட்டும் வாழ்வில் செய்ய முற்படுவர். அதன்மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக் கொள்கிறான்.

தீமையைச் செய்வதால், எமக்கு நாமே தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதால் எமக்கு நாமே நன்மை தேடிக் கொண்டவர்களாகிறோம்.

சித்தாந்தங்களையும், தத்துவங்களையும் தெரிந்து கொள்வதால் என்ன நன்மை விளையப்போகிறது! நல்லவர்களாக வாழுங்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்வைப் பயனுடையதாக்குங்கள். சுயநல் எண்ணம் சிறிதும் இல்லாமல், பணம், புகழ் என்னும் எதிர்பார்ப்பு வைக்காமல் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே ஒருவன் தொண்டு செய்தால், உலகத்தையே மாற்றி அமைக்கும் சக்தி அவனிடமிருந்து வெளிப்படும்.

நம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டே இருப்பது சுய நலங்களிலேயே மிகப் பெரிய பாவமாகும். சுயநல எண்ணம் எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்கு ஒருவன் கடவுளை நெருங்க முடியும்.

**நாளை**

**மாசி-27**
**புதன்கிழமை**
**11.03.2015**

திதி: பஞ்சமி மு.ப.07.27 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.இ.08.50 வரை
சுபநேரம்: 04.53-06.23 வரை
இராகுகாலம்: 12.23-01.53 வரை




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30–50 | 60–80 | 30–50 | 30–60 | 20–30 | 50 | 20 |
| கத்தரி | 100 | 80–120 | 80–100 | 90–110 | 60–120 | 90 | 60 |
| கரட் | 120 | 120–160 | 100–120 | 100 | 60–100 | 90–120 | 70–100 |
| மரவள்ளி | 40–60 | 40 | 40 | 50 | 30–40 | 60 | 30 |
| பயிற்றை | 80 | 80–120 | 50 | 70 | 60–100 | 70–90 | 50 |
| பாகல் | 60 | 120 | 80– 100 | 90 | 80–120 | 110 | 70 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 30–60 | 30–50 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 80 –100 | 80–100 | 60–100 | 60–100 | 30–100 | 60–100 | 40–80 |
| சி.வெங்காயம் | 40 –80 | 60–100 | 60–80 | 50–80 | 50–80 | 60–100 | 60–80 |
| பூசணி | 70 | 60 | 60 | 50 | 80 | 70 | 60 |
| தக்காளி | 40 | 60 | 40 –60 | 40 | 20–40 | 70 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 60 | 80 | 60 |
| கீரை | 20 | 40 | 30 | 20 | 20 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 20 | 30 | 30 | 20 |
| பச்சை மிளகாய் | 70 –100 | 80–120 | 60 –80 | 80–120 | 60–80 | 70–120 | 70–130 |
| புடோல் | 50–80 | 60–80 | 60 | 40 | 40–60 | 40–60 | 70 |
| கோவா | 50 | 60 | 40 | 60 | 20–40 | 60 | 60 |
| வெண்டி | 70 | 60 | 40 | 50 | 40–60 | 70 | 50 |
| போஞ்சி | 140 | 180 | 100 | 100 | 80 | 90 | 110 |
| லீக்ஸ் | 150–210 | 200 | 160 | 110 –170 | 140–170 | 130–190 | 120 |
| தேங்காய் | 40–60 | 40–60 | 40–60 | 40 | 30–60 | 30–60 | 40–60 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 60 | 60 | 70 | 90 |
| தேசிக்காய் | 50 | 40 | 50 | 40 | 20 –40 | 60 | 30–60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 30 | 30 | 10 |
| கறிமிளகாய் | 150–190 | 140 | 100 –120 | 130–200 | 100 | 90–140 | 130 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 120 | 80 | 110 | 100 |
| பனங்கிழங்கு | 04 | 05 | 05 | 04 | 03 | 05 | 02 |

# காலையில் சாப்பிட வேண்டிய பழங்கள்

காலை உணவை எடுத்துக்கொண்டால் தான் நாள் முழுவதும் சுறுசுறுப்புடன் செயல்பட முடியும். ஆரோக்கியமான காலை உணவை எடுத்துக் கொள்வதுடன், கூடவே பழங்களையும் சாப்பிட்டால் உடலுக்கு நல்லது.

**வாழைப்பழம் :**
குடலியக்க பிரச்சினையோ அல்லது மலச்சிக்கல் பிரச்சினையோ இருப்பவர்கள், காலையில் வாழைப்பழத்தை சாப்பிட்டால், வயிற்றில் உள்ள நச்சுக்களானது சீரான முறையில் தள்ளப்பட்டு, செரிமான மண்டலமானது முறையாக இயங்கி, மலச்சிக்கல் பிரச்சினையானது நீங்கும். மேலும் வாழைப்பழத்தை சாப்பிட்டால், உடலின் சக்தி நாள் முழுவதும் இருக்கும்.

**உலர் பழங்கள்:**
உலர் பழங்களான முந்திரி, பாதாம் மற்றும் உலர் திராட்சை போன்றவைகளில் காபோவைதரேட் இருப்பதால், இதனை காலையில் எடுத்துக் கொண்டால், நாள் முழுவதும் சக்தி இருக்கும். குறிப்பாக இது உடல் எடையை அதிகரிக்க நினைப்போருக்கு மிகவும் சிறப்பான உணவுப் பொருள்.

**பப்பாளி:**
உடலில் தங்கியுள்ள நச்சுக்களை வெளியேற்றும் பழங்களில் முக்கியமான ஒன்று. அதுமட்டுமின்றி, சருமம் பொலிவோடு இருக்க வேண்டுமானால், காலையில் பப்பாளியை சாப்பிடுவது நல்லது. ஆனால் இதை உடல் வெப்பம் அதிகம் இருப்போர் உட்கொள்ளக்கூடாது. இல்லாவிட்டால், இது சூட்டைக் கிளப்பிவிடும். மேலும் கர்ப்பிணிகள் இந்த பழத்தை சாப்பிடக்கூடாது.




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 600 | 700 | 700 | 600 | 550 |
| நண்டு | 300 | 250 | 350 | 300 | 200 | 400 |
| கணவாய் | 500 | 450 | 500 | 500 | 500 | – |
| பாரை | 550 | 400 | 500 | 500 | 600 | 370 |
| சுறா | 550 | 500 | 600 | 600 | 600 | 500 |
| சீலா | 300 | 350 | 400 | 400 | 300 | 300 |
| விளை | 600 | 400 | 550 | 500 | 400 | 300 |
| முரல் | 250 | 300 | 400 | 300 | 300 | 250 |
| கும்பிளா | 400 | 300 | 400 | 450 | 300 | 300 |
| கிழாக்கன் | 300 | 500 | 300 | 400 | 400 | 300 |
| ஓரா | 350 | 300 | 350 | 450 | 300 | 300 |
| திரளி | 200 | 200 | 250 | 200 | – | – |
| நகரை | 200 | 250 | 150 | 400 | 200 | – |
| சூடை | 150 | 130 | 150 | 160 | 150 | 60 |
| ஒட்டி | 150 | 150 | 150 | 200 | 100 | – |
| திருக்கை | 150 | 300 | 250 | 250 | 200 | 150 |
| பாலை | 400 | 300 | 250 | 500 | 300 | 250 |
| வாழை | 150 | 150 | 200 | 300 | 200 | – |
| கொய் | 100 | 150 | 80 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 200 | 180 | 250 | 200 | 250 |

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 3 | | 6 | 7 | 4 | | |
| 7 | | | | | 4 | 6 | | 2 |
| 6 | | | 3 | 5 | | 7 | | |
| | | | | | | 1 | | |
| 8 | 9 | 7 | 1 | | 3 | 2 | 6 | 5 |
| | | 4 | | | | | | |
| | | 5 | | 1 | 6 | | | 8 |
| 1 | | 9 | 4 | | | | | 7 |
| | | 8 | 7 | 2 | | 9 | 1 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 8 | 5 | 4 | 3 | 7 | 1 | 2 |
| 7 | 5 | 3 | 1 | 9 | 2 | 8 | 4 | 6 |
| 1 | 2 | 4 | 8 | 7 | 6 | 5 | 9 | 3 |
| 2 | 8 | 1 | 4 | 6 | 5 | 3 | 7 | 9 |
| 4 | 6 | 9 | 2 | 3 | 7 | 1 | 8 | 5 |
| 3 | 7 | 5 | 9 | 8 | 1 | 6 | 2 | 4 |
| 5 | 4 | 6 | 7 | 2 | 8 | 9 | 3 | 1 |
| 9 | 3 | 7 | 6 | 1 | 4 | 2 | 5 | 8 |
| 8 | 1 | 2 | 3 | 5 | 9 | 4 | 6 | 7 |

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# தமிழ் மாதங்களில் பிறந்தவர்களின் பலன்கள்



## புரட்டாதி

சூரியனுக்கு மிக அருகில் உலவும் புதனின் உச்சமனையாகிய கன்னி ராசியில் சூரியன் சஞ்சரிக்கும்போது கன்னித் திங்கள் என்றும், புரட்டாதி மாதமெனவும் அழைக்கின்றோம். புதன் என்றால் தெரிந்தவன் என்று பொருள். இதனால் தான் புதனைக் கல்விக்காரகன் அல்லது, வித்யா காரகன் என்று சோதிடர்கள் அழைத்தனர் போலும்! சூரியனுக்கு மிக அருகில் ஒளிர்வதோடு மிகத் துரிதமாய் மூன்றே மாதங்களுக்குள் சூரியனைச் சுற்றிவரும் ஆற்றலுடைய கிரகமாகையால் சூரியனைப் பற்றி நன்கு தெரிந்தவன் புதன். புரட்டாதி மாதத்தில் பிறந்தவர்கள் எதையும் கற்றறியும் பாண்டித்தியம் உடையவர்களே. அதுவும் துரிதமாய்க் கற்றுணரக்கூடியவர்கள். சிறு வயதிலேயே அரிய பெரிய நூல்களைப் புரட்டிப் பார்த்து விடுவார்கள். புரட்டாதியில் தோன்றிய இவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகளே!

### தோற்றம்

நடுத்தர உயரம், வட்டமான தலை, அகன்ற முகம். குறைந்த ரோமம், உயர்ந்த அகன்ற நெற்றியை உடையவர். நெற்றியில் கோடுகள் இருக் கும். புருவங்கள் வளைந்தும் ஒன்று சேர்ந்தும் காணப்படும். வரிசையான பற்கள் உடையவர். மேலுதடு குவிந்தும் கீழுதடு முன் சரிந்தும் காணப்படும். தடித்த கழுத்துடையவர். முக பாவனையில் இவர் மேதாவி என்பதைக் காட்டும்.

### குணபாவங்கள்

பல நூல்களை நன்றாகப் புரட்டியவர்களாகையால் தர்க்கம் பேசுவதிலும் சமர்த்தர். குதர்க்கம் செய்வதிலும் வித்தகர். 'கண்ட தைக் கற்கப் பண்டிதனாவான்' என்பது போல, கூற்றுவன் செய்ததை மாற்றுபவன் கொற்றவனாவான் என்பது இவர்களுடைய கருத்து. அரிய நூல்களைச் சேகரிப்பர். சீக்கிரத்தில் அரச யோகத்தை அடைந்திடுவர். கற்றதை மாற்றிப் பேசிப் போற்றுதலைப் பெறுவர். மற்றவர்களைப்போல நடிப்பதில் மிகச் சமர்த்தர். படிக்காத மேதைகளும், படித்த பட்டதாரிகளும் விஞ்ஞானிகளும் மெய்ஞானிகளும் இந்த மாதத்தில் பிறந்தவர்களே.

ஆழ்ந்து சிந்திக்காமல் எந்த விவகாரங்களிலும் தலையிடார். எதையும் திறம்படச் செய்யவேண்டுமென்ற கொள்கை உடையவர். மற்றவர்கள் செய் யும் குற்றங்குறைகள் முதன்முதலில் இவர்களின் கண்களுக்குத்தான் தோன்றும், ஒளிவு மறைவின்றி சாமர்த்தியமாக ஆனால், அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறிடுவர். மற்றவர்கள் சாதாரணமாகப் புரியக்கூடிய தவறுகள் ஏற்படாவண்ணம் தாம் நடந்துகொள்வர். மற்றவர்களுடைய முன்னேற்றத்துக்குத் தன்னலமற்றுப் பாடுபடுவர். தம்முடைய திறமையினாலும் உழைப்பினாலும் உயர்ந்த அந்தஸ்தைத் தேடியடைந்திடுவர். பிறரைப் புகழ்ந்தோ அல்லது குறுக்கு வழிகளைக் கடைப்பிடித்தோ காரியத்தைச் சாதிப்பது இவர்களுக்குப் பிடிக்காது.

இயற்கையை ரசிப்பவர். சுவையான பண்டங்களை ருசித்துப் புசிப்பவர். நல்ல பேச்சாளர். கலாரசிகர், நடிப்பாற்றல் உடையவர். கற்பனா சக்தியும் கருத்து நிறைந்த தத்துவங்களடங்கிய கவிபாடுவதிலும் தொடர்கதைகளையும், சிறுகதைகளையும் எழுதுவதிலும் நிகரற்று விளங்குவார். இவருக்கெனத் தனி நடையை அமைத்துக்கொள்வார். மற்றவருக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்குவார். சந்தர்ப்பத்துக்கேற்றவாறு தம் கொள்கைகளை மாற்றிக்கொள்வார். காரியத்தை எளிதில் சாதித்து முடிக்கும் சக்தி வாய்ந்தவர். நயமாகப் பேசி மற்றவர்களைத் தம்வசமாக்கிக் கொள்வார்.

சுறுசுறுப்பானவர் ஆனால், சுகஜீவி, நேரத்தை வீணாக்காமல் இயந்திரம் சுழல்வது போல் ஒரே இடத்தில் நிலைத்து காலவரம்புக்குள் செய்வனவற்றைத் திருந்தச் செய்வார். சிறிய முயற்சியில் பல காரியங்களைச் சாதித்திடுவார்.

### நோயும், மருந்தும்

இரவு நேரங்களில் அதிக நேரம் விழித்திருக்க நேரிடுவதாலும் பகல் நேரங்களில் நேரம் கழித்து உணவு உட்கொள்வதாலும் ஜீரண கோசத்தில் இவ ருக்குச் சில கோளாறுகள் இயற்கையாகவே தோன் றிடும். நரம்புத் தளர்ச்சி, பலவீனம் போன்றவையும் ஏற்படலாம். ஜீரண கோசத்தில் புளிப்பு ரசங்கள் அதிகம் சுரப்பதால் உணவு உட்கொண்டபின் வயிற்றில் அசதியும், வலியும் ஏற்படும். சுமார் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் சற்று சங்கடமாகவே இருந்திடும். இவர் அவ்வப்போது தேநீர், கோப்பி அருந்துவதைத் தவிர்க்கவேண்டும். கூடுமான வரையில் புளிப்பு, காரம் இரண்டையும் குறைத்துக் கொள்வது நல்லது. பச்சை மிளகாய் அறவே நீக்கப்பட வேண்டும். காரத்துக்கு மிளகையும், புளிப்புக்கு இலேசான எலுமிச்சை ரசமும் சேர்த்துக் கொள்வது மிகச் சிறந்ததாகும். பகலில் முன்நேரத்திலும் அதாவது உச்சி நேரத்துக்கு குறைந்தது இரண்டு மணிக்கு முன்பாவது பகலுணவு எடுத்துக் கொள்வது சிறந்தது. இரவிலும் சீக்கிரமாகவே எண்ணெய் சேராத சிற்றுண்டிகளை உட்கொள்வது நல்லது. பால், தயிர், மோர், நெய் முதலியவை தவறாமல் சேர்க் கப்பட வேண்டியவை. கீரை, தக்காளி நித்தமும் சேர்க்க வேண்டியவை. கத்தரிக்காய், முட்டைக்கோஸ், மாங்காய், உருளைக்கிழங்கு முதலியவை ஆகாத வஸ்துகளாகும். இரவு நேரங்களில் தூக்கம் கெடாமல் இருப்பின் இவருக்கு வயிற்றுவலி தானாகவே நின்றுவிடும். பத்தியம் தவறியவர்கள் சத்திர சிகிச்சைக்கும் உள்ளாக நேரிடும்.

இவருக்கு எளிதில் நோய் பற்றுவது கடினம். அதிகம் படித்துப் படித்து மூளையைக் குழப்பிக் கொள்வார். பித்தம் தலைக்கேறிடும். பித்துப் பிடித்தவர் போல் பிறர் புல்னுக்குத் தோற்றமளித்திடுவார். தினசரி செய்தித்தாள்களை ஆதியோடு அந்தம் படித்து முடிக்காமல் உறங்கமாட்டார். தினசரி முக்கியமான பிரசங்கங்கள் எங்கிருந்தாலும் சென்றிடுவார். நட்புடன் ஒழுகுவதற்கு நல்லவர். இவரிடம் கற்க வேண்டிய அம்சங்கள் அனேகம். ஆனால், இவரைப்போல் நடப்பதற்கும், நடிப்பதற் கும், சீக்கிரத்தில் சமூக வட்டாரத்தில் உயர்ந்த அந்தஸ்தை அடைவதற்கும் மற்ற மாதங்களில் பிறந்தவர்களால் முடியாது.

### பலமும், பலவீனமும்

அறிவிற் சிறந்தவர். பல ஆராய்ச்சித் தத்துவங்களைத் தாமும் கற்று, பிறருக்கும் போதித்திடுவார். அவ்வாறே செயலிலும் ஈடுபடுவார். சமூகசேவை யில் கைம்மாறு கருதாது தொண்டு புரிவார். இவரால் முடியாத காரியங்கள் இவ்வுலகில் இல்லை எனலாம். அற்புத சக்தி வாய்ந்தவர். இருப்பிடத்திலிருந்து கொண்டே பலரிடத்தில் பல துறைகளில் பல காரியங்களைச் சாதித்திடுவர். தம்மைப் பலர் கேலியாகவும், கிண்டலாகவும் பேசினாலும் பொருட்படுத்தார். சிறு வயதிலேயே முதிர்ந்த உலக அனுபவமும் உடையவராதலால் எவரிடத்தில் எவ்வாறு பழக வேண்டுமோ அவ்வாறு நடந்து கொள்வார். பழைய சம்பிரதாயங்களில் முழு நம்பிக்கையுடையவர். புதிய கருத்துகளுக்கு இவர் எளிதில் இடங்கொடார். என்றும், முன்னேற்றப் பாதையிலேயே முன்னேறிச் செல்வார். ஆனால், இவருடைய முன்னேற்றத்துக்கு அடிக்கடி இவருடைய மனைவி மக்கள் தடைவிதிப்பர். சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்த பிறகுதான் காரியத்தில் தைரியமாக ஈடுபடுவார். சில சமயங்களில் மனக்குழப்பமும் மனோவியாகூலமும் இவரைப் பெரிதும் பாதிக்கும். காசைத் துச்சமாக எண்ணிச் செலவிடுவார்.

நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் கைவிட்ட போது இவரை அணுகினால் எண்ணிய விவகாரங்கள் சித்தியடையும். மற்றவர்களால் இயலாத காரியங்களை இவரிடத்தில் ஒப்படைத்தால் அதிசயிக்கும் அளவுக்கு வெற்றிகிட்டிடும்.

# ஆண்களிடம் எச்சரிக்கை தேவை



'பொம்பள சிரிச்சாப் போச்சு'' என்ற பேச்சு தமிழ் பேசும் மக்களிடம் சர்வ சாதாரணமாகச் உலா வருகின்ற ஓர் எச்சரிக்கைச் சொல்லாகும். இது எதைக் குறிக்கின்றது? ஒரு பெண்ணிடத்தில் உரையாடுகின்ற எந்த ஓர் ஆடவனும் முற்றிலும் துறந்த முனிவனாகப் பேச மாட்டான். அப்படிப்பட்ட இயல்பில் மனிதன் படைக்கப்படவும் இல்லை.ஒரு பெண்ணிடம் பேசும்போது அவளது கண்சாடை கிடைக்காதா? செவ்விதழ்கள் விரித்து சிரிக்க மாட்டாளா? என சிரிப்புக்காக தவம் கிடப்பான். சிரித்து விட்டால் போதும் அது தனது காமப் பசியைத் தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்ட பகிரங்க அழைப்பு என்று எடுத்துக் கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கி விடுவான். எனவே ஒரு பெண் எப்போதும் ஆடவனிடம் கண்டிப்பாகவும், கடுமையாகவும் இருக்க வேண்டும் என்பதைத் தான் இந்தப் பழமொழி தெரிவிக்கின்றது.



ஒரு பெண் ஓர் ஆணிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் வாழும் சமுதாய அமைப்பு முறை மேற்கண்டவாறு கோடிட் டுக் காட்டுகின்றது. ஆடவனிடம் பெண்கள் கண்டிப்பாக நடக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை சமுதாயம் அங்கீகரிக்கின்றது. காரணம் இதைச் சமுதாயம் தனது அனுபவத்தின் மூலம் உணர்ந்திருக்கின்றது.






# வீண் பழியும் இலவம் பஞ்சும்

ஒரு ஊரில் வெட்டுப்புலி என்ற ஒருவன் இருந்தான். அவன் ஒரு முறை தேவையில்லாமல் ஒரு கிராமவாசி மீது பழி சொல்லி பஞ்சாயத்தைக் கூட்டினான். பஞ்சாயத்திலும் கிராமவாசிக்குத் தண்டனை கிடைத்தது. பின்னர், வீட்டுக்கு வந்த வெட்டுப்புலியின் மனச்சாட்சி அவனை உறுத்தியது. கிராமவாசிமீதுதான்பழிசொன்னதைஎண்ணிவருந்தினான். எனவே, தனது பாவத்துக்கு ஏதாவது பிராயச்சித்தம் உண்டா என்று தேடினான். என்ன பிராயச்சித்தம் செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. எனவே, அந்த ஊரிலிருந்த ஒரு துறவியிடம் சென்றான். 'துறவியாரே! நான் இந்தக் கிராமத்தில் வசிக்கும் ஒருவர் மீது வீண் பழி சொல்லிவிட்டேன். அது என் மனத்தை உறுத்துகிறது. அந்தப் பழி சொன்ன பாவத்தில் இருந்து தப்பிக்க எனக்கு வழி கூறுங்கள்!' என்று கேட்டான். துறவி சிறிது யோசித்துவிட்டு, 'இன்று இரவு மூன்று கிலோ இலவம் பஞ்சை எடுத்துப் போய் அந்த கிராமவாசியின் வீட்டுக்கு முன்பு பரப்பிப் போட்டுவிட்டு வந்து விடு. நாளை வந்து என்னைப் பார்,' என்று கூறினார். வெட்டுப்புலியும் பஞ்சைக் கொண்டு சென்று கிராமவாசியின் வீட்டின் முன் பரப்பி விட்டான். பின்னர் மறுநாள் சென்று துறவியைப் பார்த்தான். 'துறவியாரே! எனது பாவம் போய் இருக்குமா இந்நேரம்?' என்று கேட்டான். உடனே துறவி, 'வெட்டுப்புலி! நீ இப்போது அந்தக் கிராமவாசியின் வீட்டுக்குச் செல். அவன் வீட்டுக்கு முன்னால் நீ நேற்றிரவு பரப்பி வைத்த பஞ்சை மீண்டும் பொறுக்கிக்கொண்டு வா,' என்று கூறினார். வெட்டுப்புலி மிகுந்த ஆவலுடன் ஓடினான். ஆனால், ஒரு விரல் அளவு பஞ்சு கூட அங்கு இல்லை. எல்லாம் காற்றில் பறந்து போய் விட்டிருந்தது. அதனைக் கண்ட வெட்டுப்புலி திடுக்கிட்டான். மீண்டும் துறவியிடம் ஓடி வந்தான். 'துறவியாரே! நேற்றிரவு நான் கிராமவாசி வீட்டின் முன்னால் போட்டுவிட்டு வந்த பஞ்சில் ஒரு துளிப் பஞ்சாவது இப்போது அங்கு இல்லையே என்ன செய்வது?' என்று கேட்டான். துறவி சிரித்துவிட்டு, 'வெட்டுப்புலி! நீ விரித்துப் போட்டுவிட்டு வந்த பஞ்சை இப்போது மீண்டும் எப்படி அள்ள முடியாதோ, அதே போல, நீ ஒருவர் மீது கூறிய பழியையும் அதனால் உனக்கு ஏற்பட்ட பாவத்தையும் மாற்ற முடியாது. திரும்பிவர முடியாத பஞ்சைப் போன்றதுதான் உனது பழிச் சொற்களும். அவற்றையும் இனித் திருப்பி எடுக்க முடியாது. இறைவனிடம் உன் தவறுக்காக மன்னிப்பு கேள்,' என்று கூறினார். வெட்டுப்புலிக்கு உண்மை புரிந்தது. அன்று முதல் மற்றவர்கள் மீது பழி சொல்லும் பழக்கத்தையே விட்டுவிட்டான். பிறர் மீது வீண் பழி சுமத்துவதால் பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்தான் வெட்டுப்புலி.

# வர்ணம் தீட்டலாம் வாங்க...



# மாறித்தான் ஆகவேண்டும்



மாற்றம் என்பது ஒவ்வொரு காலகட்டத்திலும் நாங்கள் எதிர் கொள்ள வேண்டிய ஒரு கட்டாயமான நிகழ்ச்சியாகும். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே'. 'மாற்றம் என்னும் சொல்லைத்தவிர எல்லாமும் மாறக்கூடியது' இதெல்லாம் மாற்றங்கள் பற்றி நாம் படித்தது. ஒவ்வொரு நொடியும் பூமி சுமார் 30 கி.மீ. வேகத்தில் சுற்றி வருகின்றது எமக்கு முன்னே உள்ள வெற்றிடத்தில் ஏதோ ஒரு காலத்தில் சூரியன் கூட இருந்திருக்கலாம். இப்பொழுது ஒரே நொடியில் சுமார் 30 கி.மீ. தள்ளிச் சென்று விட்டது .

1.மாற்றம் என்பது கட்டாயமானது.
2.எல்லா சூழ்நிலைகளும் ஒவ்வொரு நொடியும் மாறிக் கொண்டே இருக்கின்றன.
3.மாற்றம் நாமாக ஏற்படுத்திக் கொள்வது இது எம்மையும் அறியாமல் எம்மை வந்து சேர்வது.
4.எந்த மாற்றமும் எமது வாழ்வில் ஏற்படும் பொழுது மனது பழைய சூழ்நிலையையே விரும்பும்.
5.புதிய சூழ்நிலைக்கு எப்படி நாம் எதிர் வினையாற்றுகின்றோம் என்பதுதான் மனப் போராட்டங்கள் .
6.மாற்றங்கள் வாழ்வுக்கு சுவை கூட்டுகின்றன.
7.எப்படி என்றாலும் மாற்றத்துக்கு உட்படத்தான் போகின்றோம் என்பது உறுதி.

ஆகவே மாற்றங்களை இன் முகத்துடன் வரவேற்போம்.





# பாலத்தில் செல்லும் படகு



உலகில் அமைந்துள்ள மிக நீள மானநீர்ப்பாலம்எனப்புகழ்பெற்ற இது மேக்டீபர்க் என்ற இடத்தில் அமைந்திருக்கிறது. பாலத்தின் மொத்த நீளம் 918 மீற்றர். பாலத்தின் அகலம் 34 மீற்றர். பாலத்தின் ஆழம் 4.25 மீற்றர். கிழக்கு ஜேர்மனியையும், மேற்கு ஜேர்மனியையும்இணைப்பதற்காக இந்தப் பாலம் கட்டப்பட்டது. இந்தப் பாலம் கடந்த நூறாண்டுகளுக்கு முன்பு 1905–ஆ ம் ஆண்டிலே திட்டமிடப்பட்டது. பல சோதனைகளுக்குப் பிறகு 1930–ஆம் ஆண்டு தொடங்கி 1942–ஆம் ஆண்டு வரை கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இரண்டாம் உலகப் போர் காரணமாகப் பணிகள் நிறுத்தப்பட்டன. போர் முடிந்த பிறகு மீண்டும் பாலம் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அப்போது இரு நாடுகளாகக் கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் பிரிந்திருந்தன. இதனால், இரு நாடுகளுக்கும் இடையே பனிப்போர் நிலவியது. இதனால், கட்டுமானப் பணிகளைத் தொடங்க முடியவில்லை. இறுதியாக 1990–ஆம் ஆண்டில் கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் ஒன்றாக இணைந்த பிறகே நீர்ப் பாலக் கனவு நிறைவேறியது. தற்போது ஜேர்மனியின் தலைநகரான பெர்லினின் உள் நாட்டுத் துறைமுகத்தையும், போர்ட் என்றழைக்கப்படும் கொள்கலன்கள் கென்டெய்னர்கள், தயாரிக்கப்படும் துறை முகத்தையும் ரைன் நதி வழியாக இந்த நீர்ப் பாலம் இணைக்கிறது.

# மக்கள் தொகை குறைவான நாடுகள்



மக்கள்தொகை குறைவாக உள்ள நாடுகளில் முதலிடம் வகிப்பது வத்திக்கான். கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமையகம் அமைந்துள்ள இங்கு மொத்தமாக 839 (2013–ஆம் ஆண்டு நிலவரம்) பேர் மட்டுமே உள்ளனர். இவர்கள் அனைவரும் மதகுருமார்கள். தென் பசுபிக் பகுதியில் அமைந்துள்ள நவ்ரு குடியரசுக்கு இரண்டாவது இடம். இங்கு 2011–ஆம் ஆண்டு நிலவரப்படி 9,378 பேர் உள்ளனர். மூன்றாவது இடம், பசுபிக் கடலில் ஆஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள துவாளு. இது ஒரு தீவு. இங்கு 2013–ஆம் ஆண்டு நிலவரப்படி 10,441பேர் உள்ளனர். பசுபிக் பகுதியில் உள்ள பாலாவ் தீவு நாட்டுக்கு நான்காவது இடம். இங்கு 2011–ஆம் ஆண்டு நிலவரப்படி 20,956 பேர் வசிக்கின்றனர். ஐரோப்பா கண்டத்தில் இத்தாலியையொட்டி மலைகள் சூழ்ந்த பகுதி சான் மரினோ குடியரசு. இங்கு 2012–ஆம் ஆண்டு நிலவரப்படி 32,576 பேர் வாழ்ந்து வருகிறார்கள். உலக அளவில் இந்த நாட்டுக்கு 5வது இடம்.ஐரோப்பாக் கண்டத்தில் பிரான்ஸ் அருகே உள்ள மொனாக்கோவுக்கு ஆறாவது இடம். இங்கு 2011ம் ஆண்டு நிலவரப்படி 36,371பேர் உள்ளனர்.

# வடக்கிலும் ஊழல் மோசடி விரைவில் பலர் சிக்குவர்

சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் சரவணபவன் எம்.பி



யாழ்ப்பாணம் ,மார்ச் 10

வடக்கு மாகாணத்திலும் பல ஊழல்கள் இடம்பெறு கின்றன. இந்த ஊழல்களில் தொடர்புடைய சிலர் விரை வில் லஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முன்னிலைப் படுத்தப்படுவர். வீதிப் புன மைப்பு, மணல் கொள்ளை முதல் பல்கலைக்கழகம், பாடசாலை என அனைத்தி லும் ஊழல் ஊடுருவியுள்ளது. இத்னை விரைவில் வெளியு லகிற்கு கொண்டு வர வேண் டும் என்று நாடா ளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணப வன் தெரிவித் தார்.

ஏ.சி.எஸ். கணினிக் கற்கை நிறுவனத்தின் நான்காம் ஆண்டு நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நேற்று முன் தினம் கொக்குவில் சரஸ்வதி மண்டபத் தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிர தம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

ஏ.சி.எஸ். நிறுவனம் சேவை நோக்கில் இயங்கி வருவதையிட்டு மகிழ்வடைகின் றேன். இது தனி ஒரு நிறுவனம் இல்லை. இது ஒரு சமூகம் என்பதை விளங்கிக் கொண்டேன். கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுள் பலர் பெண்க ளாக உள்ளனர். மகளிர் தினத்தில் இவர்கள் சான்றிதழ் பெறவுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

இன்று கணினி அறிவு இன்றி எதுவும் இல்லை என்னும் நிலை வந்து விட்டது. சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் மட்டும்தான் கணினி என்ற நிலைமாறி பெரியவர்களும் கணினிப் பயன்பாடு, தொழிற்பாடு தெரியவேண்டிய காலத் துக்குள் நுழைந்துவிட்டோம். கணினியை கற்றுக்கொள்வதென்பது கடினமான தொன்றல்ல. ஆனால் பெரியவர்களை பொறுத்தவரை வயதாகிவிட்டது இனி எதற்குக் கணினி என்ற நினைப்பே அவர் களை கற்கவிடாமல் தடுத்துவிடும்.

அண்மையில் சில பாடசாலைகளில் மஹிந் தோதய ஆய்வுகூட கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்பட்டது. இதனால் பாட சாலைகளுக் கிடையில் பாகுபாடு தோற் றம் பெற்றுள்ளது. ஒரு சில பாட சாலை களை மட்டும் தெரிவு செய்வதென்பது காலத்துக்கேற்ற தொன்றன்று. இந்த விடயத்தில் கல்வி அமைச்சு கூடிய கவ னம் எடுக்கவேண்டும். இந்தப் பாகுபாடு என்ற காரணத் தால் எம்மில் பலர் பல் கலைக் கழகத் தகு தியை இழந்தோம்.

வடக்கிலும் பல ஊழல்கள் இடம்பெறு கின்றன. இந்த ஊழல்களில் தொடர் புடைய சிலர் விரைவில் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முன்னிலைப்படுத்தப் படுவர். வீதிப்புனமைப்பு, மணல்கொள்ளை முதல் பல்கலைக்கழகம், பாடசாலை என அனைத்திலும் ஊழல் ஊடுருவியுள் ளது. இதனை விரைவில் வெளியுலகிற்கு கொண்டுவரவேண்டும்– என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகா மைத்துவ கற்கைகள் வணிக பீட பேராசிரி யர் கே. தேவராஜா, கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலைப் பிரதி அதிபர் கே. வேலாயுதம், மணி கல்வி நிறு வனத்தின் இயக்குனரும் யாழ். தொழில் நுட்ப கல்லூரி ஓய்வுநிலை மேலதிக பணிப் பாளருமான வி. சுந்தரலிங்கம், நல் லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அ. இரவீந்திர தாசன், சட்டத் தரணி வி. மணிவண் ணன், ஜே/123 கிராம சேவகர் பி. ஆர் ஜேசு தாஸன்ஆகியோர்கலந்து கொண்டார். (த–10)

## அகதிகள் உடன்படிக்கையை மீறியுள்ளது ஆஸ்திரேலியா

### ஐ.நாவின் புதிய அறிக்கையில் தகவல்

ஆஸ்திரேலியா அகதிகளுக்கான சர்வதேச உடன்படிக்கையையும் சட்டத்தையும் மீறியுள்ளதாக ஐ.நா வின் புதிய அறிக்கையில் தகவல் வெளியாகியுள்ளது .

ஆஸ்திரேலிய அரசு அகதிகளை நடத்தும் விதம் சித்திரவதைக ளுக்கு ஒப்பான முறையில் அமைந் திருப்பதாகவும், இது சர்வதேசச் சட்டத்தை மீறும் செயற்பாடாக உள் ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் ஆஸ்திரேலியா மனித உரிமைகள் அமைப்பினால் வெளியி டப்பட்ட மறந்து போன சிறார்கள் என்ற அறிக்கை வெளிவந்து ஒரு மாதத்திலேயே ஐ.நாவின் இந்தப் புதிய அறிக்கை வெளியாகியுள்ளது. இது ஆஸ்திரேலியா தனது மனித உரிமைக் கடமைகளில் பின்னிற்ப தையே காட்டுகின்றது. இதன் காரண மாக சர்வதேச ரீதியில் ஆஸ்திரே லியாவுக்கு பெரும் நெருக்கடி ஏற் பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## வீரவன்ஸவிடம் விசாரணை

சொத்துக்கள் தொடர்பில் முன்னாள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்சவிடம் லஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகா ரிகள் விசாரணை நடத்தியுள்ளனர். சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் கள் தொடர்பில் விசாரணை நடத் தப்பட்டுள்ளது.

நேற்று காலை விமல் வீரவன்ச சட் டத்தரணி கபில கமகேவுடன், லஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவுக் குச் சமூகமளித்திருந்தார்.

கடுவெல பிரதேசத்தில் காணிகள் கொள்வனவு, ஹோட்டல் நிர்மாணம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விமல் வீரவன்சவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஜே.வி.பியும், கடுவல நகரசபை யின் நகர பிதா புத்ததாசவும் விமல் வீரசவன்சவுக்கு எதிராகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் சொத் துக்களைக் குவித்திருந்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வீரவன்சவிடம் வாக்கு மூலமொன்று மட்டும் பதிவு செய்யப்பட்டதா கத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## முகம் மூடும் ஹெல்மட் பாவிக்கத் தடையில்லை

கொழும்பு, மார்ச் 10

முகத்தை முழுமையாக மறைக் கும் தலைக் கவசப் பாவனைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட சட் டம் தற்காலிகமாக நிறுத்தப்பட் டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளி யிட்ட பொதுமக்கள் பாதுகாப்பு, கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க , எதிர்வரும் 21ஆம் திகதி முதல் நடைமுறைப் படுத்தவிருந்த முழுமையாக முகத்தை மறைக்கும் தலைக் கவசப் பாவனைக்கான தடை யைத் தற்காலிகமாக இடைநிறுத் தியுள்ளதாகவும்,

இது தொடர்பில் நாட்டில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்க ளுக்கும் தெரியப்படுத்தியுள் ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, முழுமையான தலைக்கவசப் பாவனையுடன் நாட்டில் பல கொள்ளைச் சம்ப வங்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்தே பொலிஸ் திணைக் களத்தால் இந்தச் திட்டம் நடை முறைப்படுத்த இருந்தமை குறிப் பிடத்தக்கது. (த)

## புதிய ராஜதந்திரிகளாக 29 பேர் நியமிக்கப்படுவர்

வெளிநாடுகள் பலவற்றுக்கான புதிய ராஜதந்திரிகளை நியமிப் பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வெளி விவகார பிரதி அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

இதற்காக 29 புதிய ராஜதந்திரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னைய அரசின்போது அரசியல் ஆதரவுடன் பலருக்கு ராஜதத்திர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறான நியமனங்கள் யாவும் நிறுத்தப்படும் என்றும் அவர் தெரி வித்துள்ளார். (த)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் ★ 05 ★ 05 ★ 1944



விண்ணில் ★ 08 ★ 02 ★ 2015

### அமரர் கதிரவேலு குணரத்தினம்

(டிங்கர் – குணம்)

எழில் மிகு பூமுகமும்
ஏற்றமுறு புன்சிரிப்பும்
அன்பான அரவணைப்பும்
அளவற்ற பாசப் பிணைப்பும்
பரிவான வார்த்தைகளும்
மாதமொன்று ஆனபோதும்
மாறவில்லை எம்நெஞ்சில்
எம்மையெல்லாம் வாழ வைத்த தெய்வம் நீர்
இன்று தெய்வமானீரோ

எமது குலவிளக்கு அணைந்த செய்திகேட்டு ஓடி வந்து துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூல மாக தமது அனுதாபத்தைத் தெரிவித்த வெளி நாட்டு உறவுகளுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர் களுக்கும், மலர் வளையங்கள் வைத்த நண்பர்களுக் கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக் கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கராஜ் லேன் பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் . 30 . 09 . 1937



மறைவு . 19 . 02 . 2014

### அமரர் பொன் அப்பையா

(ஓய்வுநிலை அரச எழுதுவினைஞர் (மேற்தரம்), சமாதான நீதவான் (J.P)

எட்டாத தூரம் சென்று ஓராண்டு ஆனதே
நிஜங்கள் எல்லாம் உங்கள் நினைவால் கானல் ஆவதன்றோ
சுகங்கள் எல்லாம் உங்கள் சுவாசத்தால் சுரக்கின்றதன்றோ
எம் வாழ்க்கையை வளமாக்கி வசந்தத்தின் வழியில்
வலம்வர வழிவகுத்தாய் எம் தெய்வமே

அன்பான கணவனாக பாசமான தந்தையாக
பண்பான மாமனாக பிரியமான பேரனாக
சீர்தூக்கும் சித்தப்பாவாய் பெயர் போற்றும் பெரியப்பாவாய்
இங்கிருந்து எம்மை வழிநடத்தியது போல
அங்கிருந்தும் பாதுகாக்க வேண்டுகின்றோம்.

எங்கள் கல்வி உயர்வை அறிவதற்கு
உங்கள் முகவரி தேடுகின்றோம் தாத்தாவே
நல்லவர் உங்கள் ஆன்மா சாந்தி பெற
முருகன் பாதம் பணிகின்றோம்

"அம்பிகை வாசம்"
புலோலி தென்மேற்கு, புலோலி.
021 226 4280

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.

## முதலாம் வருட நினைவுநாள்

கைதடி வடக்கு (நவயூர்)

### அமரர் சங்கரன் மீனாட்சி



இன்று (10.03.2015)
செவ்வாய்க்கிழமை

எங்கள் எல்லோரையும்
வாழவைத்த - அம்மா
உங்களை - நாம் எப்போதும்
நினைத்து வாழ்வோம்

எங்கள் ஐயாவையும் நினைத்து
நினைவு கூருகின்றோம்.

என்றும் மறவாத அன்பு மகள்

கைதடியூர். | சி. தங்கராணி (பப்பா)

## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில்
30.08.1916

இறைவனடியில்
09.02.2015

### திருமதி பஞ்சவர்ணம்

(பூரணம் சண்முகநாதன்)

திருநெல்வேலி மணல்தறையைப் பிறப்பிடமாகவும் பிற்காலத்தில் பிள்ளைகளுடன் டென்மார்க்கில் வசித்துவந்தவருமான (ஓய்வுபெற்ற ஆசிரியை-யாழ்/நல்லூர் மங்கையர்க் கரசி வித்தியாசாலை மற்றும் கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி) திருமதி பஞ்சவர்ணம் (பூரணம் சண்முகநாதன்) கடந்த 09.02.2015 தனது தொன்னூற்றொன்பதாவது வயதில் இறை வனடி சேர்ந்துள்ளார். அன்னாரின் 31ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் நாளை (11.03. 2015) புதன்கிழமை கீரிமலையில் இடம்பெறும்.

அன்னாரின் விசேட ஆத்மசாந்திப்பிரார்த்தனையும், மதிய போசனமும் (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு யாழ்/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய பொது மண்டபத்தில் இடம்பெறும். இதனை உறவினர்கள், நண்பர்கள், பழைய மாணவர் கள் தங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மணல்தறை லேன், திருநெல்வேலி. (57665)(10.7.3)

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# தமிழ் அரசியல் கைதிகள் மைத்திரியிடம் உருக்கம்

## பொதுமன்னிப்பு வழங்குமாறு கோரி

கொழும்பு, மார்ச் 10
நெடுங்காலச் சிறைவாசத்தை அனுபவித்து வரும் நாம் பட்டறிவுகளைப் பாடமாகக் கொண்டு இனிவரும் நாள்களை இனிய நாள்களாக எதிர்கொள்ள திடசங்கற்பம் பூண்டுள்ளோம். எனவே எம்மையும் இந்த நாட்டுப் பிரஜைகளாகக் கருதி, விடுதலை செய்ய அமைதியும் சாந்தமும் கொண்ட இலங்கை நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் உருக்கமான கோரிக்கை முன் வைத்துள்ளனர் தமிழ் அரசியல் கைதிகள்.

இது குறித்து அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–
கடந்த மூன்றரை தசாப்தகால உள்நாட்டுப் போர்ச் சூழலால் அவசரகால, பயங்கரவாதத் தடைச்சட்டங்களின் கீழ் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சந்தேகத்தின் பெயரால் கைது செய்யப்பட்டு மிக நீண்ட காலமாக நாம் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளோம். சூழ்நிலைக் கைதிகளான எம்மில் இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றோர் அடங்கலாக 320 பேர் வரை இலங்கையிலுள்ள பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளோம். குற்றமிழைத்த ஒவ்வொருவருக்கும் வழங்கக்கூடிய தண்டனைக்காலத்திற்கும் மேலதிகமாக நாம் தண்டனையை அனுபவித்து வருகிறோம். எமது வாழ்க்கையின் அரைவாசிக்கும் அதிகமான காலத்தை சிறைக்கூண்டுக்குள் தொலைத்திருக்கும் நிலையில், எமது குடும்பத்தவர்களும் இன்னோரன்ன துன்பங்களைச் சுமந்துவருகின்றனர். எம்மை விடுவிப்பதற்காக அவர்கள் நாளும் பொழுதும் அலைந்து பணத்தைச் செலவிட்டு வறுமைக்கோட்டுக்குக் கீழ்ப்பட்டவர்களாக மாறிவிட்டனர். சாதாரண மனித வாழ்வின் இயல்புத்தன்மையை இழந்துவிடும் நிலையில் நான்கு சுவர் சூழ்ந்த கூண்டுக்குள் நாம் முடக்கப்பட்டுள்ளோம்.

எனவே நாட்டின் தலைமகனாகிய தங்களுக்கு இருக்கக்கூடிய சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி எமக்குப் பொது மன்னிப்பு வழங்கி, சீரழிந்து கொண்டிருக்கும் ஒரு தொகுதி மக்கள் சமூகத்தைத் தூக்கி நிறுத்துமாறு நாம் கருணைக் கரம் நீட்டுகிறோம். முன்னாள் போராளிகளைச் சமூகத்துடன் இணைத்து அவர்களுக்கும் வாழ சந்தர்ப்பம் வழங்கியது போன்று எமக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறு கோருகிறோம்.

இன்று முழு நாடும் அபிவிருத்தியையும் சமாதானத்தையும் சுகவாழ்வையும் அனுபவித்துவரும் நிலையில், எமது மனங்கள் விரக்தியையும், ஏமாற்றத்தையுமே உணர்கின்றன. எமது விடுதலையின் நியாயத்தை சிங்கள மக்களும் ஏற்றுக்கொண்டிருக்கும் இந்தச் சூழலில் ஜனாதிபதியாகிய தாங்கள் நல்லதொரு முடிவை எடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.– என்றுள்ளது.

இந்த மனுவின் பிரதிகள் பிரதமர், பிரதம நீதியரசர், தேசிய நிறைவேற்றுச் சபை, சட்டமா அதிபர், நீதியமைச்சர், சட்டம் ஒழுங்குகள் அமைச்சர், வடக்கு முதலமைச்சர் உட்பட 12 பேருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (த)

## ஜனாதிபதியின் லண்டன் நிகழ்ச்சி நிரலில் குழப்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 10
உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு பிரிட்டன் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளை ஏற்பாடு செய்துள்ள நிகழ்வு ஒன்றில் உரையாற்றுவார் என வெளியான செய்தியை லண்டன் கிளையின் தலைவர் மறுத்துள்ளார்.

இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளையால் அவ்வாறு எந்தவித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என அவர் கூறியுள்ளார்.

ஆயினும் நாளை புதன்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நிகழ்வு ஒன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றுவார் என அவரது நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவைச் சேர்ந்த சுவி விஜேரட்ன நேற்று 'உதயனு'க்கு உறுதிப்படுத்தினார். (த)

## மதுபோதையில் அட்டகாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியில் உள்ள புடைவைக் கடைத்தொகுதிக்கு வரும் பெண்கள் மீது மதுப் பிரியர்கள் சிலர் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் இருந்து பொருள்களை வாங்குவதற்கு யாழ்ப் பாணம் வந்த இரு பெண்கள் முனீஸ்வரன் வீதியில் உள்ள புடைவை கடைத் தொகுதிக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது அங்கு மதுபோதையில் நின்ற இரு இளைஞர்கள் சிலர் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டதாகச் சம்பவத்தை நேரில் பார்த்த கடை உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பகுதியில் இரவு வேளைகளில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகின்றது.இது தொடர்பில் யாழ்.பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது. (த)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்துரை கமலாம்பிகை



இராஜவீதி, தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை கமலாம் பிகை கடந்த (06.03.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, தோப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.



மலர்வு
02★06★1925

உதிர்வு:
08★03★2015

### சிதம்பரப்பிள்ளை கனகசபை

யாழ். கரம்பனைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும், பின்னர் ஆஸ்திரேலியா- கன்பராவை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப் பிள்ளை கனகசபை (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை சிவ பதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசுந்தரியின் அன்புக் கணவரும், சந்திரமோகனின் பாசமிகு தந்தையும், சுதர்சினியின் (தர்ஷனா) அன்பு மாமனும், நிவேதிகா, நிவாஷினி ஆகியோரின் அன்புப் பாட்டனும், காலஞ்சென்ற கந்தையா, சாவித்திரியம்மா, அம்பிகாவதி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2015) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பி.ப. 3.00 மணியளவில் NORWOOD PARK CREMATORIUM, STANFORD ST MITCHELL, CANBERRA மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 25, PINDARI CRES
O'MALLEY ACT 2606, AUSTRALIA.
MOB: 61402052750

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### வல்லிபுரம் தம்பிஐயா

பிறப்பு : 21.02.1959
இறப்பு : 08.03.2015

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தம்பி ஐயா (08.03.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கணபதிப்பிள்ளை, சரஸ்வதி, பாலசிங்கம் (சுவிஸ்), பூபதி (சுவிஸ்), காலஞ்சென்ற விஜயலட்சுமி ஆகியோரின் சகோதரரும், சறோசாதேவி, [illegible]ரத்தினம், கனகலிங்கம், கௌசலாதேவி, பரராசசிங்கம், அருளானந்தம், தேவதாஸ் ஆகியோரின் மைத்துனரும் லிங்கராஜ் (இத்தாலி), தனுஷா, அகிலன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வாமினி, விஜயகுமார் ஆகியோரின் மாமனும், ஆராதனா, சதுஷ்ரிகா, யதுர்ஷ்ரிகன், மதுஷ்ரிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதர்மட லேன்,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கண்மணி கனகரத்தினம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி கனகரத்தினம் (07.03.2015) சனிக்கிழமை மாலை 7.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை- ஆச்சிமுத்து தம்பதிரியன் அன்பு மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு - கனகரத்தினத்தின் (சாத்திரியார் -இணுவில்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராஜரத்தினம், நடராஜா, பராசக்தி மற்றும் அன்னபூரணம் (கொக்குவில்) ஆகியோரின் சகோதரியும், பாலசுப்பிரமணியம் (கொழும்பு), ஜெயபாலன் (வவுனியா), சந்திராதேவி, இந்திரா (கொக்குவில்), முருகையா (கிளிநொச்சி), சாரதா (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை சுகாதார உதவியாளர்- கொக்குவில்), ஸ்ரீக்குமார் (கனடா), சறோஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2015) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தல உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 3735303
075 8282044

தகவல் :
குடும்பத்தினர்.

### P.K. குமாரகுலசிங்கம்

(இளைப்பாறிய ஓவசியர்-நீர்ப்பாசனத் திணைக்களம்-புத்தளம், மன்னார்)



சிவலிங்கபுளியடி, வண்ணார்பண்ணையைப் பூர்வீகமாகவும், பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பெரியதம்பி கந்தையா குமாரகுலசிங்கம் (இளைப்பாறிய ஓவசியர்-நீர்ப்பாசனத் திணைக்களம்) 08.03.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்[illegible] P.K. பாலசிங்கம் (படியாதவன்-இளைப்[illegible] முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்), கல்வி அமைச்சின் முன்னாள் விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர்) மற்றும் யோகேஸ்வரி கந்தையா (இளைப்பாறிய பிரதடி அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி), திருமதி இராஜேஸ்வரிசுந்தரநடராஜர் (இளைப்பாறிய பிரதி அதிபர் முஸ்லிம் மகா வித்தியாலயம், வவுனியா), திருமதி இரட்ணேஸ்வரி ஜெயபாலன் (இளைப்பாறிய முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம், உடுவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், P.K.B. பாலஸங்கர் (முகாமைத் துவ உதவியாளர், பிரதேச செயலகம், கோப்பாய்), P.K.B. பாலமயூரன் (கனடா) ஆகியோரின் சிறிய தகப்பனும், J.ஷாந்திபூசன் (கனடா), திருமதி. மேனகா சாந்தி சுதாசன் (கனடா), திருமதி. ஜெனித்தாசாந்தி மணிபல்லவன் (லண்டன்), திருமதி. துதிப்பிரியா சிவகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பொது வைத்தியசாலை, வவுனியா), திருமதி. பிரியலக்ஷனா சாந்தரூபன் (முகாமைத்துவ உதவியாளர் நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி. சிவபதிமலர் பாலசிங்கம், N.சுந்தரநடராஜன் (இளைப் பாறிய அதிபர் கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம், வவுனியா), காலஞ் சென்ற R. ஜெயபாலன் (நிரிவாக உத்தியோகஸ்தர்-நெல் சந்தைப்படுத்தும் சபை, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டம்) ஆகியோரின் அருமை மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.03.2015 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விதானை சங்கரியர் வளவு
478/3, K.K.S. வீதி,
சிவலிங்கபுளியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
P.K.B. பாலஸங்கர்
பெறாமகன்

## காரைநகரில் சங்காபிஷேகம் முத்துமாரிக்கு

காரைநகர், மார்ச் 10
காரைநகர் களபூமி குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்மன் ஆலய மண்டலாபிஷேக நவகுண்ட சகித நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி ஏனைய பூர்வாங்கக் கிரியைகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன.
மூலவரான அம்பாளுக்கு 1009 சங்குகளாலும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு 109 சங்குகளாலும் அபிஷேகம் நடைபெறும் தொடர்ந்து மாலையில் நடைபெறும், பூசைகளைத் தொடர்ந்து இரவு 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து அம்பாள் திரு விதியுலா வருதலும் நிகழும்.
தொடர்ந்து 47 நாள்கள் மண்டலாபிஷேகம் நிறைவேறி 48 ஆம் நாள் கும்பாபிஷேகம் இன்றைய தினம் நடைபெற்று, நாளையதினம் சங்காபிஷேகமும் காணும் அம்பாளின் இந்த நிகழ்வுகள் அனைத்திலும் ஈழத்தின் பிரபல்யமிக்க 30 இற்கும் மேற்பட்ட அந்தணச்சிவாச்சாரியார்கள் கலந்துகொண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (ஒ)

## மத்திய வங்கி மோசடி; விசாரிக்க விசேட குழு

கொழும்பு, மார்ச் 10
மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஆராய மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழுவொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.அபயக்கோன் இந்தக் குழுவை நியமித்துள்ளார். மத்திய வங்கி ஒப்பந்தப் பத்திர மோசடி ,பிணை முறிகள் தொடர்பான முறைகேடுகள் உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்கள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மீது சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## தனியார் பஸ் சாரதிகளுக்கு ஓய்வூதியம்

கொழும்பு, மார்ச் 10
தனியார் பஸ் சாரதிகளுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ன.
இலங்கைப் போக்குவரத்துச் சபை புதிய பஸ்களை இறக்குமதி செய்து சேவையில் ஈடுபடுத்தி வருவதால் தனியார் பஸ்களின் சாரதிகளும் நடத்துநர்களும் அரச சேவையில் பணியாற்ற இணைந்துள்ளதாகவும், இதனால் தனியார் பஸ்களில் நெருக்கடி நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
எனவே எதிர்காலத்தில் தனியார் சேவையில் ஈடுபடும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கும் ஓய்வூதியக்கொடுப்பனவு போன்ற முறையை அறிமுகம் செய்ய தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் பேச்சு ஒன்றை தாம் நடத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார். (த)

## சு.க. திட்டமிடல் குழுவின் தலைவியாகச் சந்திரிகா

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை மற்றும் திட்டமிடல் குழுவின் தலைவியாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.
கொள்கை மற்றும் திட்டமிடல் குழுவின் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினரான விதுர விக்ரமநாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி புதிய வடிவமைப்பின் கீழ் செயற்படுவதற்காகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
மேலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி குறித்த குழுவின் தீர்மானத்திற்கமையவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் செயற்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.
சுதந்திரக் கட்சியினர் சிலர் யானைச் சின்னத்தில்போட்டியிட உள்ளனர்.(த)

## சு.க எம்.பிக்கள் சிலர் யானைச் சின்னத்தில்

கொழும்பு, மார்ச் 10
சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச்சின்னத்தில் போட்டியிட உள்ளதாக அந்தக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் அகில விராஜ்காரியவசம் தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள முற்போக்கான அரசியல்வாதிகள் சிலர் தமக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் வாய்ப்பைக் கோரியுள்ளனர்.
இவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குவதுடன் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், படித்த இளையோர் மற்றும் பெண்களுக்கும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த)

## மற்றுமொரு வழக்கில் பொன்சேகா விடுதலை

கொழும்பு,மார்ச் 10
முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மற்றுமொரு வழக்கிலிருந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
இராணுவத்திலிருந்து தப்பியோடிய இராணுவச் சிப்பாய்கள் 10 பேருக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களுக்குச் சம்பளத்தை வழங்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அவருக்கு எதிராக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் அவரை குற்றமற்றவர் என்று இனங்கண்ட நீதிமன்றம் அவரை நேற்று திங்கட்கிழமை விடுதலை செய்துள்ளது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஜெனரல் சரத் பொன்சேகாவின் பிரத்தியேக செயலாளரான சேனக்க ஹரிப்பிட்டிய என்பவரையும் குற்றமற்றவர் என இனங்கண்ட நீதிமன்றம் அவரையும் விடுவித்தது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தேவிகா தென்னக்கோன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.(த)

## குற்றவாளிகளுக்கும் சட்டப்படியே தண்டனை

### சட்டத்துக்கு முரணாக எதையும் செய்யமுடியாது என்கிறார் கிரியெல்ல

யாழ்ப்பாணம், மார்ச் 10
நாம் எதையும் சட்டப்படி செய்வோம். இதனாலேயே குற்றவாளிகளை தண்டிப்பதில் கால தாமதம் ஏற்படுகின்றது. கடந்த அரசைப் போல் எம்மால், சட்டத்துக்கு முரணாக எதையும் செய்ய முடியாது என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
குற்றவாளிகளைத் தண்டிப்பதில் கால தாமதம் நிலவுகின்றதே, ஏன் என்று ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் கூறுகையில்,
கடந்த ஆட்சியில் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தவர்களுக்குத் தண்டனை வழங்கும் நடவடிக்கையானது எம்மால் சட்டப்படி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த 20 வருடங்களாக எமது மக்கள் அநீதியான ஆட்சிக்குப் பழக்கப்பட்டுவிட்டனர். கடந்த ஆட்சியில் இடம்பெற்றதைப் போன்று வெள்ளை வான் கடத்தல், ஊடகவியலாளர் கடத்தல், பிரதம நீதியரசரைப் பதவி நீக்கல், இராணுவத் தளபதியைச் சிறை வைத்தல் முதலானவற்றை நாமும் செய்யவேண்டும் என்று கூறுகின்றீர்களா? அதை எம்மால் செய்ய முடியாது.
சட்டப்படி எந்த வொரு விடயத்தையும் செய்தால்அதில்தாமதம் ஏற்படும். குற்றச் செயல்கள் தொடர்பில் சாட்சி களைத் திரட்ட வேண்டும், வாக்கு மூலம் பெற வேண்டும். மேலும் பல தக வல்களைத் திரட்ட வேண்டும். இதனை உடனடியாகச் செய்யமுடியாது. ஆனால், அந்த நடவடிக்கைகள் சட்டப்படி இடம்பெறும் – என்றார். (த–5)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## பெண் ஊடகவியலாளர்கள் மீது தொடரும் பாலியல் தொல்லை

கொழும்பு, மார்ச் 10
இலங்கை ஊடகத்துறையில் பணியாற்றுகின்ற 29 வீதமான பெண்கள் பாலியல் தொல்லைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் புதிய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தில்ரூக்ஷி ஹந்துன்நெத்தி என்ற ஊடகவியலாளர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் 45 பெண்களில் 13 பெண்கள் (28.87) தாம் வேலைத் தளங்களில் பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாகவேண்டியிருக்கிறது என்று தெரிவிக்கின்றனர் என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
ஆனால் இவ்வாறான தொல்லைகள் குறித்து இதுவரை எதுவித முறைப்பாடுகளும் பதிவாகவில்லை என்றும், தமது எதிர்காலம் கருதி முறைப்பாடுகளை பதிவு செய்ய பாதிக்கப்பட்டவர்கள் முன்வருவதில்லை என்றும் சுட்டப்பட்டுள்ளது.
அத்துடன் நிறுவன ரீதியாகச் செய்யப்படும் உள்ளக முறைப்பாடுகளை குறித்த நிறுவனங்கள் கருத்தில் கொள்ளாது நிராகரிக்கின்றன என்றும் கூறப்படுகின்றது. ஆங்கில நாளிதழ் ஒன்றில் பெண் ஊடகவியலாளர் ஒருவர் தனக்கு ஏற்படும் பாலியல் தொல்லை குறித்து நிறுவனப் பிரதானியிடம் கூறியபோதும் அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தில்ரூக்ஷி ஹந்துன்நெத்தியிடம் சாட்சியளித்துள்ளார் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## தேசிய நல்லிணக்கத்துக்கு பிரிட்டன் பிரதமரின் உதவி

### கோரவுள்ளாராம் மைத்திரி

கொழும்பு, மார்ச் 10
போருக்குப் பிந்திய தேசிய நல்லிணக்க முயற்சிகளுக்கு, பிரிட்டனில் உள்ள செல்வாக்குப் பெற்ற புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் ஆதரவை திரட்டுவதற்கு, இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது அரசும், பிரிட்டனின் உதவியைக் கோரவுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
தற்போது பிரிட்டன் சென்றுள்ள, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனுடன் நடத்தவுள்ள பேச்சுக்களின்போது, புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் ஆதரவைப் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து ஆராயவுள்ளனர்.
இந்தச் சந்திப்பு இன்று இலக்கம் 10, டவுணிங் வீதியில் உள்ள பிரிட்டன் பிரதமரின் செயலகத்தில் நடைபெறவுள்ளது.
இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால பிரிட்டன் நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையின் 21ஆவது குழு அறையில் நடக்கவுள்ள, அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடலிலும் பங்கேற்கவுள்ளார்.
இதற்கிடையே நேற்று முன் தினம் காலை லண்டன் வந்தடைந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான குழுவினர், பாக் வீதியில் உள்ள லண்டன் ஹில்டன் விடுதியில் தங்கியுள்ளனர்.அங்கு அவர்களுக்கான பாதுகாப்பை பிரிட்டன் அதிகாரிகள் அதிகரித்துள்ளனர். (த)

**வீடு வாடகைக்குத் தேவை**
கொக்குவில் சந்தியில் இருந்து 3km இற்குள் (சைவகுடும்பத்துக்கு) வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 2298861 (57668) (10)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
இன்று (10.03.2015) கொழும்பு
ராஜகீய வித்தியாலயத்தில் நடைபெறும்
இலங்கை அதிபர் சேவை தரம் 1இற்கு
பதவியுயர்வு நியமனம் பெறும்
எமது வித்தியாலய அதிபர்
Best Wishes!
திருமதி
சகுந்தலாதேவி தர்மகுலசிங்கம்
அவர்களை மனதார பாராட்டுவதுடன்
அவர் மேன்மேலும் பட்டங்கள் பல பெற்று
நீண்டகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.
யா/சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலய
ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள்,
நண்பர்கள்.



**வேலணைப் பிரதேச சபை**
**பகிரங்க ஏலம் பற்றிய அறிவித்தல்-2015**
பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி: 17.03.2015- நேரம் முற்பகல் 10.00 மணி
இடம் : தலைமை அலுவலகம், வேலணைப் பிரதேச சபை.

| இல | குத்தகையின் பெயர் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த ஏலத்தொகை (VAT தவிர்த்து) |
|---|---|---|
| 01 | புங்குடுதீவு மாட்டிறைச்சிக் கடை | 200,000.00 |
| 02 | புங்குடுதீவு மடத்துவெளி இளைப்பாற்று மண்டபமும் சிற்றுண்டிச்சாலையும் | 12,100.00 |
| 03 | வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனை சந்தை கடை இல 04 கருவாட்டுக்கடை | 31,600.00 |
| 04 | வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனை சந்தை கடை இல 05 கருவாட்டுக்கடை | 31,600.00 |
| 05 | வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனை சந்தை கடை இல 06 கோழிக்கடை | 31,000.00 |
| 06 | வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனை சந்தை கடை இல 07 ஆட்டிறைச்சிக்கடை | 31,000.00 |

நிபந்தனைகள்
01 ஏலத்தில் கலந்து கொள்வோர் ஆள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் வழங்க வேண்டும்.
02 ஏலத்தொகை ஆகியவற்றுக்கு பெறுமதி சேர் வரி 11% (வற்வரி) மேலதிகமாக சேர்க்க வேண்டும்.
03 ஏலத்தை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர்/ செயலாளருக்கு உள்ளது.
ஏலம் தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேலணைப் பிரதேச சபை, வேலணை.
09.03.2015
(C/19844)(10.7.3)
சி.சிவராசா,
தவிசாளர்.

# மஹிந்த வென்றிருந்தால் மண்ணுக்கடியில் மைத்திரி

## கல்வி அமைச்சர் காரியவசம் கூறுகிறார்

மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வென்றிருந்தால், மைத்திரிபால சிறிசேன மண்ணில் 5 அடிக்கு கீழே இருந்திருப்பார் எனக் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அப்படி நடந்திருந்தால், மைத்திரிபால சிறிசேனவுக்கு உதவியவர்கள் நாட்டை விட்டோ அல்லது உயிரைவிட்டோசென்றிருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

மைத்திரிபால சிறிசேனவை திட்டியவர்கள் இன்று அவரைத் தலைவர் என்கிறார்கள். இவற்றை நாங்கள் பொறுமையாகப் பார்த்து கொண்டிருக்கின்றோம்.

தேர்தல் முறையில் மாற்றங்களைச் செய்வது குறித்து பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேர்தலுக்கு பின்னர் தேசிய அரசை அமைக்க வாய்ப்புள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் ராஜபக்ஷவினரைப் பாதுகாக்கவில்லை. அவர்களை கட்சி பாதுகாப்பதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும். எதிர்காலத்தில் அவற்றைக் காண முடியும்.

காங்கேசன்துறையிலும், அறுகம்பையிலும் நிர்மாணிக்கப்படுவது ஜனாதிபதி மாளிகையல்ல சர்வதேச மாநாட்டு மண்டபம் என கூறினாலும் அதனை ஏற்றுக்கொள்ள மக்கள் முட்டாள்கள் அல்ல.மெகா டீல்காரர்களை தேடிப்பிடிக்க சர்வதேசத்தின் உதவி பெற்றுக் கொள்ளப்படும்.

100 நாள் வேலைத்திட்டத்தில் பலவற்றைச் செய்துள்ளோம். ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வெள்ளை வான் கலாசாரம் தற்போது நாட்டில் இல்லை. தகவல் அறியும் சட்டம் விரைவில் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரப்படும்–என்றார் அவர்.(த)

# ஜெயக்குமாரி இன்று விடுதலையாகலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாலேந்திரன் ஜெயக்குமாரி இன்று விடுவிக்கப்படலாம் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருகை தரும் சூழ்நிலையில், இன்றையதினம் ஜெயக்குமாரியின் பிணை மனு மீதான வழக்கு இடம்பெறவுள்ளது. இதனால் இன்றைய தினம் அவர் விடுவிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சியில் கடந்த வருடம் மார்ச் மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து, பாலேந்திரன் ஜெயக்குமாரி மற்றும் அவரது 14 வயதான மகள் விபூசிகா ஆகியோர், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தனர்.

விபூசிகா நீதிமன்ற உத்தரவுக்கு அமைய கிளிநொச்சியிலுள்ள சிறுவர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார். அதேவேளை, தாய் ஜெயக்குமாரி குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாமல் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். கடந்த ஜனவரி மாதம் அவர் மகஸின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அவரது பிணை கோரும் மனு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு மீதான விசாரணை இடம்பெற்று வருகின்றது. இதுவரையில் சட்டமா அதிபர் திணைக்களம் ஜெயக்குமாரி மீதான குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை. இன்றைய தினம் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதன்போது ஜெயக்குமாரிக்கு பிணை வழங்கப்படலாம் என்று தெரியவருகின்றது. (த–5)

### ஐரோப்பிய

பரிந்துரை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

### கோத்தாவுக்கு

தொடர்பான வழக்கு காலி நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அவன்ற் கார்டே தனியார் நிறுவனத்தின் இந்த ஆயுதக் களஞ் சியம் தொடர்பான வழக்கு முடியும் வரை, கோத்தபாய ராஜபக்ஷ உட்பட நான்கு பேரையும் வெளிநாடு செல்லத் தடை விதிக்குமாறு, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிவானிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் சோமதிலக திசநாயக்க, முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கே.பி.எகொடவெல, அவன்ற் கார்டே பாதுகாப்புச் சேவைகள் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மஞ்சுள யாப்பா ஆகியோர் வெளிநாடு செல்வதற்குத் தடை விதித்தது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு ஒரு வாரத்துள், காலி கடலில் நின்று கொண்டிருந்த கப்பல் ஒன்று கைப்பற்றப்பட்டது. அதில் ஆயுதங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட நவீன ஆயுதங்கள் மற்றும் அதற்கான ரவைகள் என்பன ஆயிரக் கணக்கில் மீட்கப்பட்டன.

மிதக்கும் ஆயுதக் களஞ்சியமாகச் செயற்பட்ட அந்தக் கப்பல், அவன்ற் கார்டே தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமானது. அந்த நிறுவனம் கடந்த காலங்களில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வந்தது. (ற–5)

### கோத்தாவை

காலி துறைமுகத்தில் கைப்பற்றப்பட்ட ஆயுதக் களஞ்சியம் தொடர்பான வழக்கு காலி நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்பதாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினர், கோத்தபாய ராஜபக்ஷவை மூன்று நாள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக நீதிமன்றத்தில் கோர இருந்தனர்.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்த நடவடிக்கையைத் தடுத்துள்ளார். கோத்தபாய ராஜபக்ஷவை காவலில் வைத்து விசாரணை மேற்கொள்வது அரசுக்கு புதிய நெருக்கடிகளை தோற்றுவிக்கும் என்று தெரிவித்துள்ளார். அவரைக் காவலில் வைத்து விசாரணை செய்வதை விடுத்து, ஏனைய சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் பணித்துள்ளார்.

அதையடுத்தே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர், கோத்தபாய ராஜபக்ஷ உட்பட 4 பேரது கடவுச்சீட்டுக்களையும் முடக்கி வைப்பதற்கு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–5)

### ஒரு வாரத்தில்

தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

கிளிநொச்சியில் 30 பேரும், மன்னாரில் 66 பேரும், வவுனியாவில் 49 பேரும், முல்லைத்தீவில் 48 பேரும் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–4)

### இடமாற்றம் கோரி

“வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகம் முன்பாவும் போராட்டம் நடத்தினோம். திகதிகள் கூறிக் காலத்தை இழுத்தடிக்கின்றனர். கடந்த வாரம் போராட்டம் நடத்துவதாகக் கூறியவுடன் திங்கட்கிழமை (நேற்று) இடமாற்றக் கடிதம் தரப்படும் என்று கூறினார்கள். நேற்று கல்வி அமைச்சின் செயலகத்துக்கு பல ஆசிரியர்கள் சென்றனர். பிற்பகல் வரை மௌனமாக இருந்துவிட்டு, அலுவலகம் நிறைவடையும் நேரம் ஒரு தொகுதி ஆசிரியர்களுக்குமட்டும்இடமாற்றம் வழங்கப்படும் என்று கூறினார்கள்.”– என்று ஆசிரியர்கள் கொந்தளித்தனர்.

ஒரு தொகுதியினருக்கு மட்டும் இடமாற்றம் என்பதை ஆசிரியர்கள் ஏற்கவில்லை. அனைவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர். அதையடுத்து அவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அலுவலக வாயில் ஆசியர்களால் இழுத்து மூடப்பட்டது. அலுவலகத்துக்குள் இருந்தவர்கள் வெளியே செல்ல முடியாது திண்டாடினர். கூட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்த செயலாளர் பின்னர் வந்து ஆசியர்களுடன் பேசினார். ஏப்ரல் 7 ஆம் திகதி நடைமுறைக்கு வரும்வகையில் இடமாற்றம் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார். அதை ஏற்றுக் கொள்ளாத ஆசிரியர்கள் பிரதான வாயிலைப் பூட்டித் திறப்பை எடுத்துக் கொண்டனர்.

அமைச்சு அலுவலகத்துக்குள் சென்றிருந்த மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர்களான கஜதீபன், இந்திரகுமார், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ராஜேந்திரன் ஆகியோர் உள்ளே சிக்கிக் கொண்டனர். தமக்கு கடிதம் வழங்கப்பட்டாவிட்டால் அவர்களை வெளியே செல்ல அனுமதிப்பதில்லை என்று ஆசிரியர்கள் உறுதியாக நின்றனர்.

இருள்கவியத் தொடங்கியபோதும் அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிடுவதாக இல்லை. நேரமோ இரவு 9.30 மணியானது. ஆசிரியர்கள், ஆசிரியைகள் அசைந்து கொடுக்கவில்லை. அதையடுத்துப் பொலிஸாரும் குவியத் தொடங்கினர். அதன்பின்னர் வடக்கு மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் வந்து ஆசிரியர்களுடன் பேசினார். ஆயினும் ஆசிரியர்கள் தமது பிடியில் உறுதியாக இருந்தனர்.

அதன்பின்னர் கலந்துரையாடித் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது. ஏப்ரல் முதலாம் திகதி இடமாற்றம் மேற்கொள்ளப்படும். அது தொடர்பான பெயர்ப்பட்டியல் இன்று செவ்வாய்க்கிழமை 2 மணிக்குப் பின்னர் சகல வலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்·என்றும், அந்தப் பட்டியல் மாகாணத் திணைக்களத்திலும், கல்வி அமைச்சு செயலகத்திலும் காட்சிப்படுத்தப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது. அதன் பின்னர் ஆசிரியர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர். (ற–4)

### வடக்கு

இலங்கைக்குள் ஐ.நாவின் விசேட பிரதிநிதிகளை அனுமதிக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. அதையடுத்து 2013 ஆம் ஆண்டு ஐ.நாவின் உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான விசேட பிரதிநிதி சுலோக்கா பெயானியை இலங்கை வருவதற்கு அரசு அனுமதித்திருந்தது. அதன்பின்னர் பல்வேறு ஐ.நா. விசேட பிரதிநிதிகள் இலங்கைக்கு வருவதற்கு கோரிக்கை விடுத்திருந்த போதிலும், இலங்கையின் முன்னைய அரசு அனுமதிக்கவில்லை.

தற்போது புதிய அரசு, ஐ.நாவின் விசேட பிரதிநிதிகள் இலங்கைக்குள் வருகை தருவதற்கு அனுமதியளித்துள்ளது. அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரின் நடப்புக் கூட்டத்தில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன், விரைவில் ஐ.நா.வின் விசேட பிரதிநிதிகள் இலங்கைக்குச் செல்வார்கள் என்று தெரிவித்திருந்தார்.

காணாமற் போனோர் விவகாரங்களுக்கான ஐ.நா.வின் விசேட பிரதிநிதி பபிலோ டீ கிறிவே, இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளார். இவர் தனது இலங்கைப் பயணத்தின் போது வடக்குக்கும் வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவரது பயண ஒழுங்குகளை கொழும்பிலுள்ள ஐ.நா ஒருங்கிணைப்பு அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. (ற–5)

### மிதிவெடி

விடுவிக்கப்படவுள்ள ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மக்களை குடியமர்த்துவதற்கு முன்னதாக, அந்தப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் பெறப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம், விடுவிக்கப்படவுள்ள பிரதேசங்களில்உடனடியாகதொழில்நுட்ப ரீதியில் அல்லாத சோதனைப் பணி (நொன் ரெக்னிக்கல் சேவையர்) மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் அறிவுறுத்தியிருந்தார்.

அதையடுத்து குறித்த கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் கடந்த சில தினங்களாக உயர் பாதுகாப்பு வலய பகுதிகளில் குறித்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். வளலாய் கிராம சேவையாளர் பிரிவுக்கு மாத்திரம் முதல் கட்டமாக, கண்ணிவெடி இல்லாமைக்கான சான்றிதழை வழங்கியுள்ளனர்.

அதேவேளை, மீள்குடியேற்றம் தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள செயலணியின் கூட்டம் நாளை புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. அதில் வளலாய் மக்களை எப்போது குடிய மர்த்துவது என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படும் என்று தெரியவருகின்றது. (ற–5)

### 19 ஆவது

அனுமதி கிடைத்ததும், அது எதிர்வரும் 24ஆம் திகதி நாடாளுமன்றில் அவசர சட்டமூலமாகச் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது. தேர்தல் முறைமையில் மாற்றம், அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தை இரத்துச் செய்தல் ஆகிய விடயங்களும் புதிய சட்டவரைவில் உள்ளடக்கப்படவுள்ளது.

17ஆவது திருத்தச்சட்டத்தின் படி, புதிய சில ஆணைக்குழுக்களும் அமைக்கப்படவுள்ளன. அத்துடன், நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு மூன்றிலிரண்டு உறுப்பினர்களின் அனுமதி அவசியம் என்ற விடயமும் 19 ஆவது திருத்தச்சட்டவரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசமைப்பின்படி நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்குரிய அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கின்றது. (ற–சி)

### இருநாடுகளின்

தனது இலங்கைப் பயணம் குறித்து அவர் விடுத்திருக்கும் செய்திக் குறிப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“நான் எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கிறேன். எனது இந்தப் பயணம் இரு நாடுகளினதும் பாரம்பரிய உறவை மேலும் வலுப்படுத்தும் என்று நம்புகின்றேன். இலங்கைக்கான எனது முதல் பயணம் இரு நாடுகளின் உறவை மேலும் வலுப்படுத்தி மக்களின் ஆர்வத்தையும், நட்புறவையும் விரிவாக்கும் என்பதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.”– என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கை – இந்தியா இடையேயான நீண்டகால நட்புறவு இலங்கை ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின்போது மேலும் வலுவாகியிருந்தது. அவரைச் சந்தித்து நான் பல்வேறு திட்டங்கள் குறித்துக் கலந்துரையாடியிருந்தேன். மீண்டும் ஒருமுறை நான் அவரை இலங்கை சென்று சந்திக்க வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

நாம் சரித்திர, பாரம்பரிய, விழுமிய ரீதியான பரஸ்பர தொடர்பைப் பேணி அதனூடாக எமது இலக்கை அடையவேண்டும். இலங்கை, இந்திய நாடுகள் கிரிக்கெட் நட்பு நாடுகளாக உள்ளன.

நான் இலங்கை சென்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுவேன். அத்துடன் மஹாபோதிக்கும் சென்று தரிசிப்பேன்.”– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

“அதேபோன்று வரலாற்றிலேயே முதல்முறையாக இந்தியப் பிரதமர் ஒருவர் யாழ்ப்பாணம் செல்கின்றார் என்ற பெருமையுடன் நான் யாழ்ப்பாணத்துக்கும் செல்கின்றேன். அங்கு வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். பொது நூலகத்துக்கு அருகில் கலாசார மையத்துக்கு அடிக்கல் நாட்டிவைக்கவுள்ளேன். அத்துடன், இந்திய அரசு இலங்கை மக் களின் நலனுக்காக செய்யும் திட்டங்களில் ஒன்றான வீட்டுத் திட்டத்தையும் நான் நேரில் சென்று பார்வையிடவுள்ளேன்.

இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியாதனது ஆதரவைத்தொடர்ந்து வழங்கும். இது உறுதி. இலங்கை – இந்தியநட்புறவில் புதியபொன்மயமான அத்தியாய மாக இந்தப் பயணம் அமையும்”– என்றும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ற–5)

# அனல்மின் நிலையம் அமைக்க எதிர்ப்பு

மூதூர், மார்ச் 10

மூதூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சம்பூர் பகுதியில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கையெழுத்து வேட்டையில் மக்களும் முக்கியஸ்தர்களும் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

மூதூர் மக்கள் அபிவிருத்தி ஒன்றியம் மற்றும் திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான மூதூர் சபை ஆகியன இணைந்து தயாரித்த ஆட்சேபனை பத்திரத்திலும் மூதூர் பீஸ் ஹோம் அமைப்பு தயாரித்த மூதூர் முக்கியஸ்தர்களின் எதிர்ப்புப் பத்திரத்திலும் கையெழுத்து இடுவதிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.



சம்பூர் அனல் மின்சார நிலையம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையால் மக்கள் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளும் வகையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே அனல் மின்சார திட்டத்துக்கு மக்கள் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கை அரசு இந்தியாவும் இணைந்து சம்பூர் பிரதேசத்தில் அனல் மின்சார நிலையத்தை 512 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அமைப்பதற்கென 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இறுதி ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்ட நிலையில் இதற்கென சம்பூர் பகுதியில் 500 ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மக்கள் குடியிருப்புக்களில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றருக்கும் குறைவான தூரத்திலேயே இது நிர்மாணிக்கப்படவுள்ளது.

எனவே மின் உற்பத்தியின்போது அதிலிருந்து வெளிவரும் வாயுக்களால் நோய் ஏற்படும் நிலை உருவாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் விலங்கு வளர்ப்பும் விவசாயமும் பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ-40)

## பாவனைக்குதவாத இறைச்சி பறிமுதல்

மட்டக்களப்பு, மார்ச் 10

காத்தான்குடி பொதுச்சந்தையிலுள்ள பலசரக்குக் கடை ஒன்றிலிருந்து மனித பாவனைக்கு உதவாத 45 கிலோ மாட்டு இறைச்சியையும் 10 கிலோ மீன்களையும் காய்ந்த இறைச்சியையும் ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றி, அவற்றை அவ்விடத்தில் அழித்துள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.றஹ்மத்துல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடி பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அங்கு சென்று சோதனை மேற்கொண்டதாகவும் இதன்போது, மாட்டு இறைச்சி மற்றும் மீன்கள் குளிரூட்டியில் வைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மேற்படி பலசரக்குக் கடை உரிமையாளருக்கு எதிராக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (வ)

## வீதி விபத்தில் சிறுமி சாவு

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிவேம்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் சிறுமி ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை சுமார் 6 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குருநாகலில் இருந்து வந்த வானுடன் குறித்த சிறுமி மோதியதில் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சித்தாண்டி வந்தாறுமூலை மத்தீய மகா வித்தியாலயத்தில் 9 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாவடிவேம்பைச் சேர்ந்த சிவயோகன் யசோதா என்ற மாணவியே உயிரிழந்துள்ளார். இந்த விபத்து இடம்பெற்ற இடத்தில் ஒன்றுகூடிய பொதுமக்கள் வாகனத்தை தீயிட்டு கொளுத்தியுள்ளதாக தெரிய வருகின்றது. (வ)

## ஆணின் சடலம் மீட்பு

கல்முனைப் பொலிஸ் பிரிவிலுள்ள பெரிய நீலாவணை கடற்கரையில் 25 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலம் பெரிய நீலாவணை, சரஸ்வதி வீதி படைமுகாமுக்கு அருகில் உள்ள கடற்கரையோரத்தில் நேற்றுக் காலை கரை ஒதுங்கியிருந்ததாக, பொலிஸார் குறிப்பிட்டனர்.

அதன்பின்னர் அந்த இடத்துக்குச் சென்ற கல்முனை நீதிமன்ற நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டதோடு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலத்தை அம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸாரைப் பணித்துள்ளார்.

சடலத்தை அடையாளங்காண மக்களின் உதவியை நாடியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ)

## டெங்குக் கட்டுப்பாட்டு வாரம்

தென்மராட்சி,மார்ச் 10

சுகாதார அமைச்சின் விசேட தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரமாக எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் முதலாம் திகதி வரை அனுட்டிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார். சுகாதாரத் திணைக்களத்துடன் பொலிஸ், படையினர், பிரதேச செயலகம், உள்ளூராட்சி சபைகள் இணைந்து நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல இடங்களில் கடந்த மாதம் மழை பெய்ததை அடுத்து டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளதால் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் பொது அமைப்புக்களின் பங்களிப்பையும் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## பாடசாலைக்கு இசைக்கருவிகள்

திருகோணமலை, மார்ச் 10

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து 386,590.00 ரூபா பெறுமதியான வாத்தியக் கருவிகளை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்குப் பெற்றுக் கொடுத்துள்ளார். (வ)



இறுதிப்போரில் பெரியளவில் சேதங்களுக்கு உள்ளாகிய கிளாலி, களிவெளி நாச்சியம்பாள் ஆலயத்தில் தற்போது கட்டடங்கள் எழுப்பப்பட்டு புனரமைப்புப் பணி இடம்பெறுவதைக் காணலாம். (வ-9)

## மட்டக்களப்பு வாவியில் மீன்கள் இல்லை

மட்டக்களப்பு, மார்ச் 10

மட்டக்களப்பு வாவியில் மீன்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், வாவித் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

உல்லாசப் பயணிகளை அதிகமாகக் கவரும் நண்டு மற்றும் இறால் என்பன முற்றாக இல்லாததால் வளர்ப்பு இறால்கள் கிலோ 100-1,200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களின் தலைவர்கள் தங்கள் பிள்ளைகள் சகிதம் தூண்டிலில் மீன் பிடித்து தமது அன்றாட உணவுத் தேவைக்குப் பயன்படுத்துகின்றனர்.

வறுமை நிலையில் உள்ள மாணவர்கள் கூட மீன்களைப் பிடித்து விற்பனை செய்வதன் மூலம் சேகரிக்கப்படும் பணத்தை தமது கல்விச் செலவுக்காக பயன்படுத்துவதாகத் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12,225 குடும்பங்கள் வாவித் தொழிலை தங்களது வாழ்வாதாரமாக நம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## மல்லாவி மருத்துவமனையை தரம் உயர்த்த நடவடிக்கை

### மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

மல்லாவி பிரதேச மருத்துவமனையை ஆதார மருத்துவமனையாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களின் மருத்துவ தேவைகளை நிறைவு செய்யும் மருத்துவமனையாக மல்லாவி மருத்துவமனை காணப்படுகின்ற போதும் போதிய வசதிகள் இன்றி காணப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

இந்தநிலையில், வட மாகாண [illegible]ித்தொதுக்கப்பட்ட நிதியில் [illegible]ருந்து 25 மில்லியன் ரூபா [illegible]துக்கப்பட்டு சத்திரசிகிச்சை [illegible]ிரிவு அமைக்கப்படவுள்ளது. மருத்துவமனை வளங்களை அதிகரித்து, அதனை ஆதார மருத்துவமனையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அதேபோல், புதுக்குடியிருப்பு மற்றும் மன்னார், முருங்கன் மருத்துவமனைகளையும் ஆதார மருத்துவமனையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (வ)

## களிவெளி நாச்சியம்பாள் ஆலயத்தில் கட்டடப் பணி

### 15 வருடங்களின் பின்னர் அடியார்களால் முன்னெடுப்பு

தென்மராட்சி, மார்ச் 10

போர் வேளையில் அழிவடைந்த கிளாலி, களிவெளி நாச்சியம்பாள் ஆலயம் 15 வருடங்களின் பின்னர் கட்டடப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

1996ஆம் ஆண்டின் பின்னர் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் காணப்பட்ட ஆலயம் 2000ஆம் ஆண்டு போர் வேளையில் முற்றாக அழிவடைந்தது.

கிளாலிப் பகுதியில் 2011ஆம் ஆண்டு மீள் குடியமர்வு இடம்பெற்றபோதிலும் ஆலயம் அமைந்திருந்த பகுதிக்குச் செல்ல முடியாத அளவுக்கு பற்றைகள் வளர்ந்து காணப்பட்டன. (வ-9)

# ஜிம்றோன் நகர் மக்கள் எதிர்ப்பு

## தம்மை சிறுநாவற்குளம் பகுதியில் குடியமர்த்துவதற்கு



மன்னார், மார்ச் 10
மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜிம்றோன் நகர் மக்களை மன்னார் சிறுநாவற்குளம் பகுதியில் குடியமர்த்த மன்னார் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ள மக்கள், அதற்கு எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர்.
ஜிம்ரோம் நகர் கிராம மக்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் வெள்ளப்பெருக்கு மற்றும் கடல்நீர் கிராமங்களுக்குள் புகுதல் என்பவன்றால் பாதிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு பிரதேச செயலகம் இந்த நடவடிக்கையை எடுத்துள் ளது என்று கூறப்படுகின்றது.
இதுதொடர்பில் ஜிம்றோன் நகர் பொது மண்டபத்தில் மன்னார் பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடப்பட்டுள்ளது. அதில் நூற்றுக்கணக்கான கிராம மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.
எமிழ் நகர்,ஜிம்றோன் நகர்,ஜீவபுரம் ஆகிய கிராம மக்கள் வருடா வருடம் வெள்ளப்பெருக்கினாலும்,கடல் நீர் கிராமங்களுக்குள் செல்லுவதினாலும் இடம் பெயர வேண்டிய நிலை உள்ளது.
இதனால் அரசாங்கம் தொடர்ந்து இடம் பெயரும் மக்களை பராமரிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. முதலில் ஜிம்றோன் நகர் கிராம மக்களை சிறுநாவற்குளம் கிராமத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பிரதேசச் செயலர் மக்களிடம் கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த கிராமமக்கள், "சுமார் 9 வருடங்களுக்கு மேல் இங்கு வாழ்ந்து வருகின்றோம். எமிழ் நகர், ஜிம்றோன் நகர், ஜீவபுரம் ஆகிய கிராமங்களில் 620 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். ஜிம் றோன் நகர் கிராமத்தில் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராம மக்களில் அதிகளவானவர்கள் கடல் தொழிலை நம்பியே வாழ்ந்து வருகின் றனர். எங்களை விவசாயம் செய்யும் பகுதியில் மீள் குடியேற்றினால் நாங்கள் என்ன தொழில் செய்வது?"– என்று அவர் கள் கேள்வி எழுப்பினர்.
"எம்மை வேறு இடத்துக்குக் குடியமர்த்துவதைக் கைவிட்டு, வெள்ள நீர் கிராமத்துக்குள் புகுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும்"–என்றுஅவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற–56)




வவுனியாவில் திருவள்ளுவர் குருபூசை தின நிகழ்வு தமிழ்மணி அகளங்கன் தலைமையில் கடந்த சனிக்ழமை வவுனியா பொது வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலை முன்பாக நடைபெற்றது. இதில் முன்னாள் நகரசபை தலைவரும் வடமாகாணசபை உறுப்பினருமாகிய ஜி.ரி.லிங்கநாதன் முன்னாள் நகரசபை உபதலைவர் க.சந்திரகுலசிங்கம் வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வா... உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ற–402)



## சாவகச்சேரி மருத்துவமனைக்கு 150 மூக்குக் கண்ணாடிகள்

தென்மராட்சி, மார்ச் 9
சாவகச்சேரி மருத்துவமனை கண் சிகிச்சைப் பிரிவுக்கு 55 கண் வில்லைகளும், 150 மூக்குக் கண்ணாடிகளும் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.
ஹென்தல லயன்ஸ் கழகத்தின் சார்பில் 30 கண் வில்லைகளும், லயன்ஸ் மாவட்ட முன்னாள் ஆளுநர் லயன்ஸ் ரஞ்சித் பெர்ணான்டோவால் 25 கண் வில்லைகளும் 150 மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.
ஹென்தல லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் கமிலஸ் பெர்னாண்டோவும், லயன்ஸ் ரஞ்சித் பெர்ணான்டோ சார்பில் லயன் மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தமும் இவற்றை மருத்துவமனைப் பொறுப்பதிகாரியிடம் கையளித்தனர்.
மருத்துவமனை மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 306 பி மாவட்ட உதவி ஆளுநர் லயன் மருத்துவர் வை.தியாகராசா, மாவட்ட இணைப்பாளர் லயன் வ.ஶ்ரீபிரகாஸ், பிராந்தியத் தலைவர் லயன் கே.பிரதீபன், சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க.தர்சன், மாவட்டத் தலைவர் லயன் கா.சற்குணதேவன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற–9)

## அடிப்படை வசதிகள் கோரும் கற்பகபுரம் மக்கள்

வவுனியா, மார்ச் 10
அடிப்படை வசதிகள் இன்றி அவதிப்படுகின்றோம். எமக்கான அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்து தாருங்கள் – என்று கோரிக்கை விடுத்துள்ளனர் வவுனியா, கற்பகபுரம் மக்கள்.
அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் போரால் இடம்பெயர்ந்து தற்போது மீள்குடியமர்ந்தவர்களாவர். அந்தப் பகுதியில் உள்ள மக்கள் கிணறு, மலசல கூட வசதி என்பன இல்லாத மண் வீடுகளிலும், தற்காலிக கொட்டகைகளிலுமே வசித்து வருகின்றனர்.
சுயதொழில் உதவிகள் வழங்கப்படும்போதும் தாம் புறக்கணிக்கப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். தமக்கான அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடமைப்பு மற்றும் சுயதொழில் வாய்ப்பு என்பவற்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(ற–402)

## தலைமன்னாருக்கான ரயில் பாதைகள் அமைக்கும் பணிகள் முடிவடையும் நிலையில்



மன்னார், மார்ச் 10
திருக்கேதீஸ்வரம் முதல் தலைமன்னார் வரையான ரயில் பாதை அமைக்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கை வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமன்னாருக்கான ரயில் சேவையை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.
தற்போது மதவாச்சியில் இருந்து மடு வரையுமே ரயில் சேவைகள் நடைபெற்றுவருகின்றன. சுமார் 26 ஆண்டுகள் போரின் காரணமாக மதவாச்சியிலிருந்து மன்னாருக்கான ரயில் சேவைகள் தடைப்பட்டிருந்தன.
தற்போது அந்த ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் மதவாச்சியில் இருந்து மன்னார், திருக்கேதீஸ்வரம் ரயில் நிலையம் வரையான புகையிரதப் பாதைகள் மற்றும் ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–56)

## கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கு விடுதிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 10
வடக் மாகாணத்தில் உள்ள கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கு விடுதிகள் அமைக்கப்படவுள்ளன. அதற்காக 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. – இவ்வாறு வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாணத்தில் கால்நடை வைத்தியர்களுக்கு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் 4 விடுதிகளும், கிளிநொச்சியில் 2 விடுதிகளும், முல்லைத்தீவில் 3 விடுதிகளும், வவுனியாவில் 3 விடுதிகளும், மன்னாரில் 2 விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.
இந்த ஆண்டு பச்சிலைப்பள்ளி, வவுனியா தெற்கு, மடு மற்றும் கிளிநொச்சி அறிவியல் நகர் ஆகிய இடங்களில் தலா ஒரு விடுதி அமைக்கப்படவுள்ளது."– என்றும் தெரிவித்தார்.(ற)

## வாகன திருத்தகத்தில் தீ விபத்து

யாழ்ப்பாணம், மார்ச் 10
உரும்பிராயில் வாகனம் திருத்தும் நிலையம் ஒன்றில் நேற்றுமுன்தினம் 9 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. மின்னொழுக்கே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.
தீ பற்றி எரிவதை அவதானித்து உடனடியாக தீயணைப்புப் படையினருக்கு அறிக்கப்பட்டது என்றும், அவர்கள் உடனடியாக வந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## வவுனியாவின் கல்வி நிலை குறித்து ஆராய்வு

வவுனியா, மார்ச் 10
வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் கல்வி நிலை குறித்து ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் வவுனியா பட்டாணிச்சூர் தேசிய பாடசாலையில் நடைபெற்றது.
வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.
வவுனியா வலயக்கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர் கள், அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)

## வீதி முறைப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்த விவசாயத் திணைக்களம் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 10
விவசாய நிலங்களில் சூழல் வெப்பத்தை குறைத்து பயிர்களுக்குசாதகமானகாலநிலையை உருவாக்கும் நோக்குடன் வீதி முறைப் பயிர்ச்செய்கையை விவசாயிகளிடையே அறிமுகப்படுத்த உள்ளதாக வட மாகாண விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் கி.ஶ்ரீ பாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.
"விவசாய நிலங்கள், தோட்டங்கள் என்பன வெட்டவெளியாகி இருப்பதால் சூழல் வெப்பம் அதிகரித்துள்ளது. அதனால் பயிர்களுக்கு சாதகமற்ற காலநிலை உருவாகின்றது. பயிர்களில் பீடை பெருக்கம் அதிகரித்துள்ளது.
பயிருக்கு சாதகமான காலநிலையை உருவாக்குவதற்கு தோட்டங்களில் 10 அடிக்கு ஒரு பகுதியில் வீதிமுறைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். இதன்மூலம் பயிர் செழிப்புடன் வளர இலகுவான காலநிலை உருவாகும். மண்ணின் வளத்தை மேம்படுத்த உயிர்க்கரி, ஜீவாமிர்தம் ஆகியவற்றை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தவுள்ளோம். உயிர்க் கரி, ஜீவாமிர்தம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு உபகரணங்களை விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது."– என்று அவர் தெரிவித்துள்ளார்.(ற)

# இன்னலுக்கு மத்தியில் பணியாற்றியவர்கள்

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அருந்தவநாதன் புகழாரம்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

பல உயிர் இழப்புக்கள் இடையூறுகள் இன்னல்கள் வந்த பொழுதிலும் கூட்டுறவுப் பணியாளர்கள் இதய சுத்தியுடன் மக்களுக்கு பெரும் சேவையாற்றியுள்ளனர். கூட்டுறவின் கொள்கைக்கு அமைய சமூக பொருளாதார கலாசார கல்வி சார் நடவடிக்கையில் கூட்டுறவு மேலும் உயரவேண்டும். அதற்கு பணியாளர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். – என்று தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்டத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடமாற்றப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன்.

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் இணைந்து நடத்திய பிரிவு பசார வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு அவர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள்,கொத்தணிகள், சித்த வைத்திய கூட்டுறவு சங்கங்கள், சமாசம் என்பன கூட்டுறவு கொள்கைக்கு அமைய சமூக பொருளாதார கலாசார மற்றும் கல்வி சார் நடவடிக்கையில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டு வருகின்றன.

இந்த சேவை தொடர வேண்டும் பணியாளர்கள் சிறப்பாக இதய சுத்தியுடன் மக்களுக்கு பெரும் சேவையாற்ற வேண்டும்.”– என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட கூட்டுறவு பணியாளர்களின் எதிர்காலம் குறித்தும் அவர்களின் தேவையறிந்தும் சகாய நிதி திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதினால் பணியாளர்கள் பெரிதும் நன்மையடைவார்கள். இந்தத் திட்டத்தில் சகல பணியாளர்களும் இணையவேண்டும். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு சமாசத்தினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.– என்றும் அவர் தெரிவித்தார். (ற–17)



வடக்கு மாகாண சபை அமைச்சர் பா.டெனீஸ்வரன் கடந்த சனிக்கிழமை குஞ்சுக்குளம் கிராம மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். அதில் மடுப் பிரதேச செயலர் எப்.சீ.சத்தியசோதி, குஞ்சுக்குளம் பங்குத் தந்தை, பாடசாலை அதிபர், கிராம சேவையாளர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற–56)

# மகளிர் தின நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 10

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் மகளிர் விவகாரப் பிரிவின் ஏற்பாட்டில் பெண்களுக்கான சிறந்தொரு நாடு எனும் தொனிப்பொருளுடன் சர்வதேச மகளிர் தினம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா நகர சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பேரவைத் தலைவர் க.சிவஞானம், வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (ற–14)

# கட்டடம் கட்டுவதற்கு காத்திருக்கும் நிலை

## விசனம் தெரிவிக்கின்றனர் பொதுமக்கள்

தென்மராட்சி, மார்ச் 10

தமது காணிகளில் கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி கோரி உள்ளூராட்சி சபைகளுக்கு உரிய விண்ணப்பங்கள் கொடுத்து ஆறு மாதங்களுக்கு மேலகியும் அனுமதி வழங்காததால் கட்டடம் அமைக்க முடியவில்லை என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

காணிகளில் குடியிருப்பு உட்பட கட்டடங்கள் அமைப்பதாயின் உள்ளூராட்சி சபைகளிடம் அனுமதி பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உரிய விண்ணப்பங்கள் உள்ளூராட்சி சபைகளிடம் ஒப்படைத்து ஆறு மாதங்களுக்கு மேலாகியுள்ள போதும், சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்குச் சென்றால் பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கை இன்னமும் கிடைக்கவில்லை என்று தெரிவித்து அனுமதி மறுக்கப்படுகின்றது என்று மக்கள் கூறுகின்றனர். அதனால் தமது காணிகளில் கட்டடம் அமைக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் அவர்கள் குற்றங்சாட்டுகின்றனர்.

இது தொடர்பாக உள்ளூராட்சி சபைகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

சபையில் நிரந்தர பொது சுகாதார பரிசோதகர் இல்லாதத்தால் கட்டட விண்ணப்பங்கள் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு அனுப்பப்படுகின்றன. அங்கிருந்து பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கையுடன் விண்ணப்பக் கோவை அனுப்பப்படுகின்றது. சில பிரிவுகளுக்கான கோவைகள் பரிந்துரையுடன் வருவதில்லை. இதனால் கட்டட விண்ணப்பதாரருக்கு அனுமதி வழங்க முடியாதுள்ளது. – என்று கூறப்பட்டது.

இது தொடர்பாக சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையுடன் தொடர்புகொண்டபோது,

சில பிரிவுகளுக்கு நிரந்தர பொது சுகாதார பரிசோதகர்கள் இல்லாததால் பதில் கடமை பொது சுகாதார பரிசோதர்களே கடமையாற்றுகின்றனர். இந்த நிலையில் நீண்ட காலமாக அவர்களுக்கான பதில் கடமைக் கொடுப்பனவு வழங்கப்படுதில்லை. பதில் கடமை கொடுப்பனவு வழங்குமாறு அவர்களால் சுகாதார திணைக்களத்துக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதுவரை சாதகமான பதில் கிடைக்காததால் பதில் கடமை புரியும் பிரிவுகளில் மேற்கொள்ளும் அனைத்து கடமைகளையும் (பாடசாலை பரிசோதனை, டெங்கு பரிசோதனை, கட்டட விண்ணப் பம்) செய்வதை நிறுத்தியுள்ளனர். அதனால் இந்தப் பிரிவுகளுக்கான விண்ணப்பங்களை பொதுசுகாதார பரிசோதகரின் அறிக்கையின்றி உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்ப முடியவில்லை.– என்று தெரிவிக்கப்பட்டது.(ற–9)

# குழைவெட்ட மரமேறியவர் விழுந்து சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 10

போதையுடன் ஆட்டுக்கு குழை வெட்டுவதற்காக மரத்தில் ஏறியவர் தடுமாறி விழுந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொக்கு வில் மேற்கில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த மயில்வாகனம் வெற்றிவேல் (வயது–58) என்பவரே உயிரிழந்தவராவார்.

போதையுடன் அரச மரத்தில் ஏறியபோது தவறி விழுந்து மயக்கடைந்துள்ளார். போதனா வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்ட போதும், அதற்கு முன்னரே அவர் உயிரிழந்துள்ளார். (ற–4)

# சொந்தக் காணிகளில் குடியமர அனுமதியுங்கள்

## கோயில்பட்டி மக்கள் கோரிக்கை

மன்னார், மார்ச் 10

தம்மைத் தமது சொந்த இடத்தில் குடியமர அனுமதிக்குமாறு மாந்தை திருக்கேதீஸ்வரம் கோயில்பட்டி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று கோயில்பட்டிக் கிராமப் பகுதிக்கு வந்திருந்த தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளிடமே அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாந்தை திருக்கேதீஸ்வரம் கோயில்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் போர் காரணமாக 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தனர். சுமார் 100 குடும்பங்கள் வரையில் இடம்பெயர்ந்திருந்தனார்.

2002ஆம் ஆண்டு அவர் திருக்கேதீஸ்வரத்துக்கு மீள வந்த போதும், கோயில்பட்டிக் கிராமம் இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்தமையால் அவர்களால் குடியமர முடியவில்லை. அதனால் உறவினர் வீடுகளில் வாழ்கின்றனர்.

2010ஆம் ஆண்டு காணிகளைத் துப்புரவு செய்ய இராணுவம் அனுமதித்தபோதும், 2013ஆம் ஆண்டு எமது காணிகள் உள்ள பிரதேசம் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமானது என்று அறிவிக்கப்பட்டது.

அதனால் நாங்கள் எங்கு செல்வது என்று தெரியாது இருக்கின்றோம்– என்று அந்த மக்கள் அதிகாரிகளிடம் தெரிவித்தனர். (ற–56)

# ஒத்திகை பயிற்சி இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 10

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சுப்பர்மடம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த ஒத்திகைச் செயற்பாடு நடத்தப்படுகின்றது என்றும் அதனால் மக்கள் குழப்படைய வேண்டாம் என்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (ற–14)

# புனிதர் ஜோசப்வாஸுக்கு ஆலயம் அமைக்க கோரிக்கை

கொழும்புத்துறை, மார்ச் 10

இலங்கையின் புனிதராக கடந்த ஜனவரி மாதம் பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிசால் உயர்த்தப்பட்ட புனித யோசப்வாஸ் முனீந்திரனை மக்கள் வணங்கி அவருடைய பரிந்துரையை மன்றாட வசதியாக யாழ்.மறை மாவட்டத்தில் பொருத்தமான இடத்தில் பெரிய ஆலயம் அமைக்கப்பட்டு திருத்தலமாகப் பேணப்பட வேண்டும்.– இவ்வாறு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மறைமாவட்ட குருக்கள் மன்றக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“புனித யோசப் வாஸ் அடிகள் 1995ஆம் ஆண்டு அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட பின்னர் கொட்டடி என்னும் இடத்தில் சிறிய ஆலயம் அமைக்கப்பட்டது. ஆயினும் இந்த ஆலயம் அமைந்துள்ள காணி, பண்ணை அரச வைத்தியசாலைக்கு சொந்தமானது என வைத்தியசாலை நிர்வாகத்தால் கோரப்பட்டமையால் இதனை ஒரு பொதுவான ஆலயமாகவோ மறைமாவட்ட திருத்தலமாகவோ பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.”– என்று அவர் சுட்டிக்காட்டினார்.

புனித யோசப்வாஸ் அடிகள் வந்திறங்கிய கொழும்புத் துறையிலுள்ள எழிலூர் மற்றும் நாவாந்துறைப் பகுதிகள் இதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள போதிலும் திருத்தலம் அமையவுள்ள இடம் தொடர்பான இறுதி முடிவு காலக்கிரமத்தில் எடுக்கப்படும் என குருக்கள் மன்றம் தெரிவித்தது. (ற–135)

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர் மீது மைதானத்தில் வைத்து தாக்குதல்

## லீக் செயலாளருக்குக் கொலை அச்சுறுத்தல்



யாழ்ப்பாணம், மார்ச் 10

உதைபந்தாட்டப்போட்டி ஒன்றின்போது உதைந்தாட்ட வீரர் ஒருவரினால் தாக்குதலுக்கு உள்ளான உதைபந்தாட்ட மத்தியஸ்த ரைக் காப்பற்ற முற்பட்ட வவுனியா உதைபந்தாட்ட லீக்கின் செயலாளருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட இந்தச் சம்பவம் ஒன்று கடந்த சனிக்கிழமை வவுனியாவில் இடம் பெற்றது.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை வவுனியா மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யுனிபைட் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. முதல் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் கோல்களைப் பெறுவதற்காக எதிர் அணியின் கோல் பரப்பை முற்றுகையிட்ட வண்ணம் இருத்தனர். இதன்போது ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியின் முன்கள வீரன் தனக்குக் கிடைந்த பந்தைச் சரியான முறையில் பயன்படுத்திக் கோலாக்கினார். இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

இதன்போது முதல்பாதி ஆட்டத்தின் 38ஆவது நிமிடத்தில் யுனிபைட் அணி வீரன் யங்ஸ்ரார் அணி வீரரை மூர்க்கத்தனமாகத் தாக்கியதால் மத்தியஸ்தரினால் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்டார். இதனை அடுத்து யுனிபைட் அணியின் மற்றொரு வீரர் மத்தியஸ்தரைத் தாக்க அவரைத் தொடர்த்து சிவப்பு அட்டை காட்டப்பட்ட வீரரும் சேர்ந்து தாக்கியுள்ளார்.

மத்தியஸ்தரை முதலில் தாக் கிய வீரருக்கு மத்தியஸ்தர் சிவப்பு அட்டை காட்டினர். தொடர்ந்து போட்டியை நடத் துவதற்கு மத்தியஸ்தர் முயன் றபோது யுனிபைட் அணியின் ஏனைய வீரர்களும் மத்தி யஸ்தரைத் தாக்குவதற்கு முற்பட்டனர். இதனை அடுத்து வவுனியா உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் மைதானத்துக்குள் சென்று மத்தியஸ்தரைக் காப்பற்ற முற்பட்டார். இதன்போது சிவப்பு அட்டை காண்பித்து வெளியெற்றப்பட்ட யுனிபைட் அணியின் வீரர் ஒருவர் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து லீக் செயலாளரை ஏசியதுடன் உன்னைச் சுட்டுக் கொல்வேன் என்றும் கூறியுள்ளார்.

இதனை அடுத்து மத்தியஸ்தர் போட்டியைத் தொடர்ந்து நடத்த முடியாது என்ற நிலையில் அது இடைநிறுத்தப்பட்டது. இதன் பின்னர் மத்தியஸ்தர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுக் காயத்திற்குச் சிகிச்சை பெற்றுக் கொண்டார். வவுனியா உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் தனக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையம், வவுனியா மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (த–23)

## தேசிய அணியில் தமிழ் வீரர்

யாழ்ப்பாணம், மார்ச் 10.

கண்டி பேராதனை பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவன் சந்திரகுமார் அமல்ராஜ் இலங்கைப் பல்கலைக்கழகத் தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட இந்த தேசிய அணிக்கான தெரிவில் ஏராளமான வீரர்கள் கலந்து கொண்டனர். இதில் பேராதனை பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேர்வான ஒரே தமிழ் வீரர் அமல்ராஜ் மட்டுமே. இவ்வாறான தேசிய அணித் தெரிவில் சமீப காலமாக யாழ் பல்கலைக்கழக வீரர்களும் தீவிரம் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## சென்.மேரிஸ், உடுப்பிட்டி யுத் வென்றன அதிரடி ஆட்டத்தால்



யாழ்ப்பாணம்,மார்ச் 10

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் யாழ்ப்பாணம் வெற்றிக்கிண்ணத்துக்கான உதை பந்தாட்டச்சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி, உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணி ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்த்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண் டது. இதில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(த–23)

## தாச்சியில் வள்ளுவர் சம்பியன்

வலி.வடக்கு, மார்ச் 10

மயிலிட்டி மக்கள் ஒன்றியத்தின் அனுசரணையில் கண்ணகி விளையாட்டுக்கழகம், யாழ்.மாவட்ட தாச்சி அணிகளுக்கிடையில் நடத்திய தாச்சிச் சுற்றுப்போட்டியில் வள்ளுவர் விளையாட்டுக் கழக அணி சம்பியன் ஆகியது.

கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகிய இந்தச் சுற்றுப்போட்டியில் 20 தாச்சி அணிகள் பங்குபற்றின. போட்டிகள் கண்ணகி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மின்னொளியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வைகறை விளையாட்டுக்கழக அணி மோதியது.

போட்டி ஆரம்பித்தவுடன் வைகறை அணி அடுத்தடுத்து இரண்டு பழங்கள் பெற்று முன்னிலையில் இருந்தது. எனினும் தமக்கே உரித்தான பாணியில் லாவகமாக ஆடிய வள்ளுவர் அணி தொடர்ந்து பழங்கள் பெற்று வந்தது.

வள்ளுவர் அணி பழங்கள் பெறுவதை கட்டுப்படுத்த முடியாமல் வைகறை அணியினர் திணறி னர். இறுதியில் வள்ளுவர் அணி 7:2 என்ற பழங்கள் அடிப்படையில் வென் றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் சிறந்த வீரனாக வள்ளுவர் அணியின் மகேந்திரன் விமல் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த தாச்சி அணியாகச் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் அணி தெரிவு செய்யப் பட்டது.

வெற்றிபெற்ற அணிக்கான வெற்றிக்கேடயத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரும், கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் இல்லத் தலைவருமான குமரன் பத்மநாதன் (கே.பி) வழங்கினார். (த–86)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

பொருளியல்
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
A/L 2015, 2016, 2017 மற்றும்
B.A, B.Com, AAT, IABF
ஆசிரியர்:- L. றெஜினோல்ட் தொடர்பு:- 077 8448535

பணியாளர் தேவை
கணனி இயக்குநர்
பக்க வடிவமைப்பாளர்
புத்தகம் கட்டுநர்
வரவேற்பாளர்
உதவியாளர்
பழக விரும்புவோர்
தொடர்புகளுக்கு 0776079676
யாழ் இந்துக் கல்லூரி அருகாமை யாழ்ப்பாணம்.
நவீன முறை அச்சுப்பதிப்பகம்

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
UK Sponsor/ Settlement Visa
திருமணம் செய்து UK செல்வதற்கான ஆங்கில பரீட்சை
2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
சித்தியடைவதற்கான உத்தரவாதம்
IELTS (Duration: 50 hrs)
• Latest training materials. (BOOK 10)
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
Spoken English
Veta Fluency Diploma
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | நெல்லியடி M.M.V வீதி, Tel.:021-226 2470 | சாவகச்சேரி கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | சுன்னாகம் Tel.:021-224 1970

Mahindra Rise.
IDEAL Motors
மஹிந்ரா வாகன உரிமையாளர்களே !
உங்களுக்கு
Royal Mark (PVT)Ltd இன் அறைகூவல்
சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு இலவச சேவை மையம்
Ideal Motors உடன் இணைந்து Mahindra வாகனங்களுக்கு
•இலவச Scan பரிசீலனை
•உதிரிப்பாகங்களுக்கான சலுகை விலை
•திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும்
மார்ச் 10ஆம் திகதி மருதனார்மடம்
11ஆம் திகதி நெல்லியடி
12ஆம் திகதி எமது திருத்த மையத்தில்
Royal Mark (Pvt) Ltd
123, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:- 0766910212
Royal Mark (Pvt) Ltd.
AUTO MASTERS
No. 126, Kandy Road, Jaffna. Tel : 021-2211133, 077 393 1393

நிறுவனம் ஒன்றிற்கு
வாகனங்களுக்கான வர்ணப்பூச்சு (Painting)
மின் ஒட்டு வேலை (Tinkering)
தெரிந்தவர்கள் தேவை.
தகுதியானவர்கள் (13.03.2015)ஆம் திகதிக்கு முன்னர் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை தொடர்புகொள்ளவும்
தொடர்பு : 0777 946 718
இல.105, இராசவீதி, கோப்பாய்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.